திருக்குறுங்குடி நம்பிகோவிலின் வழிபாடும் திருவிழாக்களும்



டாக்டர். பே. நடராசன்

திருக்குறுங்குடி நம்பி கோயிலின் வழிபாடும் திருவிழாக்களும்

டாக்டர் பே. நடராசன்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி - 12.

483, இரண்டாவது தெரு (தெற்கு),
தியாகராஜ நகர்,
திருநெல்வேலி - 11.

மதுரை அமெரிக்கன் கல்லூரி
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
அமரர். பெ. மோசசு பொன்னையா
அவர்களின் பொற்பாதங்களில் இந்நூலைப் படைக்கிறேன்.

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	: 'திருக்குறுங்குடி நம்பி கோயிலின் வழிபாடும் திருவிழாக்களும்'
ஆசிரியர்	: டாக்டர். பே. நடராசன்
பொருள்	: கோயில் ஆய்வு
பதிப்பு	: முதல் பதிப்பு, அக்டோபர் 1998
உரிமை	: ஆசிரியருக்கு
வெளியீடு	: டாக்டர். பே. நடராசன் (6.3.1952) 483, இரண்டாவது தெரு (தெற்கு) தியாகராஜநகர். திருநெல்வேலி - 627 011.
நூலின் அளவு	: 18 x 12.5 cms
பயன்படுத்தப்பட்ட தாள்	: SPB Cream Wove
அச்சு எழுத்து வகை	: 10 புள்ளி
பக்கங்கள்	: VIII + 108 = 116
பிரதிகள்	: 1000
விலை	: ரூ 25/-
அச்சிட்டோர்	: ராஜா பிரஸ், திருநெல்வேலி.

தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் சென்னை தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் இந்நூல் நிதியுதவி பெற்று வெளியிடப்படுகிறது.

முயன்று வரலாற்றைப் படித்தல் வேண்டும்
இயன்றால் வரலாற்றைப் படைத்தல் வேண்டும்
முடிந்தால் வரலாறாகவே வாழ்தல் வேண்டும்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
முனைவர் க. ப. அறவாணன், பிஓஎல்., எம்ஏ., எம்லிட்., பிஎச்டி.,
துணை வேந்தர்

அணிந்துரை

திருக்குறுங்குடி நம்பி கோயிலின் வழிபாடும் திருவிழாக்களும் என்ற ஆய்வு நூலை முற்றிலும் பார்த்தேன். நெல்லை மாவட்டம் வைணவத் திருதலங்களின் பெருமைக்குரிய மாவட்டம். நம்மாழ்வாரின் ஆழ்வார்திருநகரி, ஆண்டாளின் திருவில்லிப்புத்தூர் அவரை வளர்த்துக் கண்ணனுக்கே ஆளாக்கிய பெரியாழ்வாரின் பிறந்தகம், திருவைகுண்டம். இப்படியாக வைணவப்பெருமை தெற்கே இருந்திருக்கிறது. தென்னாடுடைய சிவநேயத்திற்கு இணையாக வைணவம் ஓங்கி வளர்ந்திருக்கிறது. சிவனும் திருமாலும் இணைந்து ஒரே கோயிலில் வழிபடப் பட்டிருக்கிறார்கள். இருமூர்த்திகளும் ஒருங்கே போற்றப் பட்டிருக்கிறார்கள். சாதிமதப் பூசல்களுக்கு, அப்பாற்பட்ட சமய ஒற்றுமை சமுதாயத்தில் நிலவியமைக்கு மேற்கண்டவை சாட்சி.

திருக்குறுங்குடி, வைணவ நாராயண நம்பியின் திருத்தலம். அத்திருத்தலத்துக் கோயிலை மையப்பொருளாக அமைத்து இவ்ஆய்வு செய்யப்பட்டுள்ளது. திருக்குறுங்குடி கோயிலின் அமைப்பு முறை, கோயிலின் வரலாறு, கோயிலில் நடக்கும் திருவிழாக்கள், வழிபாடுகள், கோயிலும் சமயமும் என்று ஆறு பகுப்புகளில் இந்நூல் அமைக்கப் பெற்றுள்ளது. கோயிலின் அமைப்பை முன்பக்கம் உள்ளம், சந்நிதி,

மடம், தோட்டம் என்று அக்கு அக்காகச் செல்லாதவரும் சென்று பார்த்தது போல உணரும் வண்ணம் மிகவும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது இவ்வாய்வேடு.

கோயிலின் நிகழும் விழாக்கள் என்ற தலைப்பின் நீண்ட ஆய்வு மிகவும் சிறப்பாக எடுத்துரைக்கப் பெறுகிறது. விழா, அதில் பங்கேற்போர், கொடியேற்றம், திருமஞ்சன நீராட்டம் இவ்வாறு திருவிழா நிகழ்ச்சிகள் ஆராயப்பட்டுள்ளன.

கோயிலில் நடைபெறும் வழிபாட்டு முறைகளில் அளவிறந்த பாடல்களுக்குக் கொடுக்கின்ற முதன்மை விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.

திருக்குறுங்குடி நம்பி கோயிலைப் பற்றி இன்னொருவர் ஆய்வதற்கு ஒன்றுமே இல்லை என்னும்படி, முனைவர் நடராசன் இம்மி அளவும் விடாது உழைத்துள்ளார். அவர் உழைப்பு பாராட்டிற்குரியது.

நல்ல நூலொன்றை நல்கியுள்ள முனைவர் பே. நடராசன் நம் பாராட்டுதலுக்குரியவர். அவர் இன்னும் பல நூல்களை எழுதி என்றும் புகழ் எய்துவாராக.

கபஅறவாணன்
க. ப. அறவாணன்

அணிந்துரை

முனைவர். பி. இராமநாதன்,
பதிவாளர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி-627 012.

திருக்குறுங்குடி நம்பி கோயில் 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றாகும். இக்கோயில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற சிறப்புக்குரியதாகும். இதற்கு 'தெற்குவீடு' என்ற பெயரும் உண்டு. இராமானுசரிடம் இத்தலத்து இறைவன் நம்பி மாணவன் நிலையிலிருந்து பாடம் கேட்டார் என்பது செவிவழிச் செய்தியாகும். திருக்குறுங்குடியின் தல வரலாறு, கோயிலின் வரலாறு (புராண வரலாறு) கல்வெட்டுச் செய்திகள் மற்றும் பல அரிய செய்திகள் இந்நூலில் பரவலாகக் காணக்கிடைக்கின்றன. கோவில்கள் பற்றிய ஆய்வு நூல்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் வெளி வருகின்ற இக்கால கட்டத்தில் ஆசிரியரின் இந்நூல் பாராட்டுக்குரியது. முனைவர் பே. நடராசன் அவர்கள் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அலுவலகப் பணியிலிருந்து கொண்டு ஆராய்ச்சிப் பணியில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தி இந்நூல் வெளிவர அரும்பாடுபட்டுள்ளார். அவர்தம் ஆய்வுப்பணி சிறக்க என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவரும் இந்நூலைப் படித்துப் பயன் பெற வேண்டுகிறேன்.

அன்புடன்,

பி. இராமநாதன்.

திருநெல்வேலி,
23.10.98

என்னுரை

"திருக்குறுங்குடி நம்பி கோயிலின் வழிபாடும் திருவிழாக்களும்" எனும் பொருளில் எம்.ஃபில்., பட்டத்திற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு நான் அளித்த ஆய்வேடே இப்பொழுது நூல் வடிவம் பெற்றுள்ளது.

நவத்திருப்பதிக் கோயில்கள் போன்று பன்முகச் சிறப்புடையது. திருக்குறுங்குடி நம்பி கோயில் வைணவர்களால் 'வாமன சேத்திரம்' என்றும், 'தெற்கு வீடு' என்று போற்றப்பெறும். இது ஆழ்வார்களின் அருட்பாசுரங்கள் பல பெற்ற புண்ணிய ஸ்தலம். இக்கோயில் தொடர்பான பல அரிய செய்திகள் மக்களால் அறியப்படாமலே உள்ளன. "திருக்குறுங்குடி நம்பி கோவில் பற்றி நான் ஆய்வு மேற்கொண்டிருந்த காலத்திலேயே இக்கோயில் சிறப்புக்களைப் பலரும் அறிந்து கொள்ளும் வகையில் பின்னர் நூலாக வெளியிட வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் பதிந்து நிலைபெற்று விட்டது. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு என் உள்ளக்கிடக்கை நிறைவேறி இன்று செயல் வடிவம் பெற்று என் ஆய்வேடு அச்சு வாகனம் ஏறியுள்ளது.

என்னுடைய எம்ஃபில் ஆய்விற்கு மேற்பார்வையாளராக இருந்து சிறப்புற வழிகாட்டிய மதுரை தியாகராசர் கல்லூரி முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஈ.வே.மாரியப்பன் அவர்களுக்கு நன்றியும் கடப்பாடும் உடையவன் ஆவேன்.

எனக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து அவ்வப்போது அறிவுரைகள் வழங்கி வரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் க.ப.அறவாணன் அவர்கள் இந்நூலுக்குச் சிறப்பு மிக்கதோர் அணிந்துரை அளித்துள்ளார்கள். அன்னாருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் பி.இராமநாதன் அவர்களும் இந்நூலுக்கு அணிந்துரை அளித்து பெருமை சேர்த்தமைக்காக அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர ஊக்கமளித்து உற்சாகப்படுத்திய மதுரை காமராசர் பல்கலைக் கழக முன்னாள் கல்லூரி வளர்ச்சிக் குழுத்தலைவர் முனைவர். சிவஇிராமச்சந்திரன், முனைவர். பி தெட்சிணாமூர்த்தி, முனைவர். இரா. பாலா, ஆகியோருக்கு என் நன்றி உரித்தாகுக. எனது எம்.ஃபில்., ஆய்வேட்டை நூல் வடிவில் வெளி உலகுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற என் எண்ணத்தைத் திருக்குறுங்குடி நம்பி கோவில் பேரருளாளர் இராமனுசஜீயர் சுவாமிகளிடம் தெரிவித்த போது, அவர்கள் என்னை வாழ்த்தி, நல்லாசிகள் வழங்கினார்கள். அவர்களுக்கு எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வுக் காலத்தில் எனக்குப் பல்லாற்றனும் உதவிகள் புரிந்த நம்பி கோவில் மேலாளர் திருநாராயணன் அவர்களுக்கும் என் நன்றி உரியது.

இந்நூலின் தட்டச்சுப்படிகளையும், அச்சுப்பிழைகளையும் திருத்தி நூல் செம்மையுற அமைய உறுதுணை புரிந்த திருநெல்வேலி ம. தி. தா. இந்துக் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர். ச. சங்கரநாராயணன் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைச் செம்மையுற அச்சிட்டுத் தந்த திருநெல்வேலி ராஜா அச்சகத்தாருக்கும் பெரிதும் நன்றியுடையேன்.

இந்நூல் வெளியீட்டுக்கு நிதியுதவி நல்கிய தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கத்திற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பே. நடராசன்

உள்ளுறை

இயல் 1

ஆய்வு அறிமுகம்

1.0 முன்னுரை :

" தீநீர் வண்ண மாமலர் கொண்டு விரையேந்தித்
தூநீர் பரவித் தொழுமி னெழுமின் கொண்டீர்காள்!
மாநீர் வண்ணர் மருவி யுறைமிடம் வானில்
கூனிர் மதியை மாடம் தீண்டும் குறுங்குடியே "

என்று திருமங்கையாழ்வார் குறுங்குடியைப் பற்றி எடுத்துக் கூறுகிறார். குறுங்குடி திருநெல்வேலியிலிருந்து தென்மேற்கில் அமைந்துள்ளது. இத்தலத்தில் அமைந்திருக்கும் நம்பிகோயில் வழிபாடும் திருவிழாக்களும் என்பது இங்கு எடுத்துக் கொண்ட ஆய்வுத் தலைப்பாகும்.

1.1 ஆய்வு நோக்கம்

திருக்குறுங்குடியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய நம்பிராயரைப் பற்றியும், இறைவன் எழுந்தருளியிருக்கும் தல அமைப்புகள், வரலாறு பற்றியும், இங்கு நடைமுறையிலுள்ள திருவிழாக்கள், வழிபாட்டு முறைகள் பற்றியும் வரலாற்று அடிப்படையில் அறிய முற்படுவதே இவ்வாய்வின் பொதுவான நோக்கமாகும்.

பொதுவாகத் " திருவிழாக்கள் தமிழக மக்களின் நாகரிக, பண்பாட்டு மரபினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன" என்ற கருதுகோளை மையமாக அமைத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் இக்கோயிலில் நடைபெறும்

திருவிழாக்கள் எங்ஙனம் நாகரிக பண்பாட்டுச் சின்னங்களாக அமைகின்றன என்று ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

1.2 ஆய்வின் கருதுகோள்

1. இக்கோயிலில் நம்பிக்கையின் அடிப்படையிலேயே திருவிழாக்களும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன.
2. திருவிழாக்கள் சமுதாய நன்மைக்கு உதவுகின்றன.
3. இக்கோயில் சமுதாயத்துடன் பல்வேறு வகைகளிலும் தொடர்பு கொண்டுள்ளது.
4. வைகாசன ஆகமப்படி வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

வழிபாட்டு முறைகளில் "வைகாசன ஆகம முறைகளும் முன்னோர்களின் மரபு முறைகளும் பின்பற்றுதல்" என்ற கருதுகோளைக் கொண்டு இக்கோயிலில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் எந்த முறைகளைப் பின்பற்றுகின்றன என்று ஆய்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

1.3 ஆய்வின் எல்லை

திருக்குறுங்குடி ஸ்ரீ அழகிய நம்பிராயர் கோயில் திருவிழாக்கள் பற்றியும், வழிபாடுகள் பற்றியும், தற்காலத்தில் பின்பற்றுகின்ற முறைகள் பற்றியும், இக்கோயிலுடன் பொது மக்கள் எவ்விதம் தொடர்பு கொள்கின்றனர் என்பதைப் பற்றியும் விளக்கப்படுகின்றன.

1.4 ஆய்வு முறை

பகுப்பாய்வு முறை, விளக்க முறை, வரலாற்று முறை, சமூகவியல் முறை போன்ற பல்வேறு ஆய்வு முறைகள் இவ்வாய்வில் பின்பற்றப்படுகின்றன.

1.5 ஆய்விற்குரிய ஆதாரங்கள்

இவ்வாய்வில் ஆய்விற்குரிய ஆதாரங்கள் முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் எனப் பகுக்கப்பட்டுள்ளன.

1.6 முதன்மை ஆதாரங்கள்

இவ்வாய்விற்கு இக்கோயிலில் நடைபெறும் விழாக்கள், வழிபாட்டு முறைகளைப் பற்றி கள ஆய்வில் உற்றுநோக்கல், பேட்டி, வினா நிரல் முதலியவற்றின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களும், தேவஸ்தான குறிப்புக்களும் ஆய்வு மூலகங்களாக அமைகின்றன. இக்கோயிலின் தலவரலாறும் ஆய்விற்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

1.7 துணைமை ஆதாரங்கள்

கே. ஆறுமுக நாவலரின் "இந்துமத இணைப்பு விளக்கம் " எஸ். நடராஜன் அவர்களின் " தமிழர்களின் பண்டிகைகளும் பண்பாடும்" இரா. நாகசாமி, மா.சந்திரமூர்த்தி அவர்களின் " தமிழக கோயிற் கலைகள் " ஸ்ரீ கண்ணன் சேவா சங்கத்தின் " திருக்குறுங்குடி திருமலை நம்பி கோவில் பாதயாத்திரை மலர் - 1984" என்பன போன்ற நூல்கள் துணைமை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1.8 ஆய்வுப் பகுப்பு

1. முன்னுரை
2. கோயிலின் அமைப்பு முறை
3. கோயிலின் வரலாறு
4. கோயிலில் நடைபெறும் திருவிழாக்கள்
5. கோயிலில் நடைபெறும் வழிபாடுகள்
6. கோயிலும் சமுதாயமும்
7. முடிவுரை

"முன்னுரை" என்னும் பகுதியில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வின் நோக்கம், ஆய்வின் கருதுகோள், ஆய்வின் எல்லை, ஆய்விற்குரிய ஆதாரங்கள், ஆய்வுப் பகுப்பு என்ற அமைப்புக்களில் செய்திகள் விளக்கப்படுகின்றன.

"கோயிலின் அமைப்புமுறை" என்ற இரண்டாவது இயலில் இக்கோயிலின் முன் தோற்றம், உள் அமைப்பு, கோயிலுக்குள் உள்ள சந்நிதிகள், திரு. ஜீயர் சுவாமிகளின் மடம் தோட்டம் ஆகியன பற்றிய விவரங்கள் விளக்கப்படுகின்றன.

"கோயிலின் வரலாறு" என்ற மூன்றாவது இயலில் புராணம், ரிஷிபிராப்தம், தெய்வீகம், மானுஷம் என்ற அமைப்பில் விளக்கப்படுகின்றன.

"கோயிலில் நடைபெறும் திருவிழாக்கள்" என்ற நான்காவது இயலில் இக்கோயிலில் திருவிழா நடைபெறுகிற காரணம் பற்றியும், விழாவில் பங்கேற்போர் பற்றியும், ஒவ்வொரு விழாக் குறித்த முக்கியத்துவம் பற்றியும்,

கொடியேற்றம் முதல் திருமஞ்சன நீராடல் வரை பதினோரு நாட்கள் நடைபெறுகின்ற திருவிழா நிகழ்ச்சிகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன.

"கோயிலில் நடைபெறும் வழிபாட்டு முறைகள்" என்ற ஐந்தாவது இயலில் இக்கோயிலில் தற்போது நடைபெறும் வழிபாட்டு முறைகள், வழிபாட்டின்போது ஆழ்வாரது பாடல்களுக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் பற்றியும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன.

"கோயிலும் சமுதாயமும்" என்ற ஆறாவது இயலில் மக்கள் கோயிலோடு பக்தி, தொழில், ஊர், என்ற அடிப்படையில் கொண்டுள்ள தொடர்பு நிலைகள், சமுதாய அமைப்பில் திருக்குறுங்குடி பெறும் இடம் ஆகிய செய்திகள் விளக்கப்படுகின்றன.

"முடிவுரை" என்ற பகுதியில் மேற்கூறிய கோயிலின் அமைப்பு முதல் கோயிலும் சமுதாயமும் முடிய உள்ள ஐந்து இயல்களில் தரப்பெற்ற ஆய்வு முடிவுகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

அடுத்து துணைநூற்பட்டியல் அமைந்துள்ளது. பின்னிணைப்பில் தகவலாளர் பட்டியல், கோயிலின் வரைப்படம், திருக்குறுங்குடி பற்றிய ஆழ்வார்களின் மங்களாசாசனப் பாசுரங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

இயல் 2

கோயிலின் அமைப்பு முறை

2.0 முன்னுரை

கோயிலை மையமாகக் கொண்டே எல்லாவூர்களும் அமைந்து இருக்கின்றன. ஒவ்வொரு ஊரும் அங்குள்ள கோயிலைக் கொண்டுதான் சிறப்புப் பெறுகின்றன. ஆழ்வார்களது பாடல்களால் சிறப்புப் பெற்ற 108 வைணவத் தலங்களில் திருக்குறுங்குடியும் ஒன்று ஆகும். இத்தலத்தில் அமைந்திருக்கும் கோயில் பெரிய அளவிலான கோயில் ஆகும். அந்தக் கோயிலின் அமைப்பைப் பற்றி விளக்குதாக இவ்வியல் அமைகிறது.

2.1 இருப்பிடம்

ஸ்ரீ அழகியநம்பி திருக்கோயில் என்னும் வைணவத்தலம் திருநெல்வேலி மாவட்டத்தில் நான்குநேரித் வட்டத்தில் 'திருக்குறுங்குடி' என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. குறுங்குடி என்றே ஆழ்வாரது பாடல்களில் ஊர்ப்பெயர் காணப்படுகிறது. இத்தலம் திருநெல்வேலியிலி ருந்து 28 மைல் தொலைவில் தென்மேற்கில் அமைந்துள்ளது. வள்ளியூர் வழியாகப் பாபநாசம் செல்லும் வழியில் இவ்வூர் அமைந்துள்ளது. அருகிலுள்ள இரயில்வே நிலையம் வள்ளியூர். இது 5 மைல் தொலைவில் உள்ளது. இங்கு வருவதற்குத் திருநெல்வேலி, வள்ளியூர், சேரன்மகாதேவி ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

2.2 ஊர்ப்பெயர் காரணம்

இத்தலத்திற்குக் குறுங்குடி என்றும் தென்குறுங்குடி என்றும் பெயர் வழங்குவது உண்டு. வாமனசேத்திரம் (சேத்திரம் என்பது புராணப்பிரசித்தி பெற்ற தலங்களுக்குப் பெயர்) என்னும் சிறப்பு இப்பகுதிக்கு உண்டு. திருமால் குறுகிய குறள் வடிவம் எடுத்ததால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குறுங்குடி 'திரு' என்னும் அடைமொழியைப் பெற்றுத் திருக்குறுங்குடி என வழங்குகிறது. இவ்வூர் 108 வைணவத்தலங்களில் ஒன்றாகும். இத்தலத்திற்குத் 'தெற்கு வீடு' என்ற பெயரும் உண்டு. ஆழ்வார்களால் பாடப் பெற்ற பிரசித்தி பெற்ற தலம் திருக்குறுங்குடி. நிலையான பரமபதத்திலிருந்து எம்பெருமான் ஓடோடி வந்து எழுந்தருளியிருக்கும் இத்தலம் பூலோக வைகுண்டத்திற்குச் சமமானது என்கிறார்[1]. திருக்குறுங்குடி ஆழ்வார்களால் பாடப் பெற்ற நூற்று எட்டு வைணவத் திருத்தலங்களில் ஒன்றாகவும், மேன்மைக்குரியதாகவும், பெருமைக்குரியதாகவும் விளங்கி வருகிறது.[2]

2.3 சுற்றுப்புறப் பகுதிகள்

ஊரின் சுற்றுப்புறப் பகுதிகளில் பெரிய ஊர்களாகக் களக்காடு, வள்ளியூர், சேரன்மகாதேவி முதலிய ஊர்கள் அமைந்துள்ளன. ஊரின் தெற்குப் பகுதியில் நம்பி ஆறு என்ற ஜீவநதி மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தி ஆகி வருகிறது. மேற்கே மகேந்திரகிரி மலை ஊருக்கு அரணாக விளங்குகிறது. திருக்குறுங்குடி, இந்த வகையில் சீருடனும், சிறப்புடனும் அமைந்துள்ளது.

2.4 நிறுவனங்கள்

திருக்குறுங்குடி டி. வி. சுந்தரம் அய்யங்கார் பிறந்த ஊர் ஆகும். அவர் தொடக்க காலங்களில் மிக ஏழ்மை நிலையில் இருந்தாலும் பின்னால் நல்ல பெயரும் புகழும் பெற்று வாழ்ந்தார். இவர் இவ்வூரில் டி. வி. சுந்தரம் அய்யங்கார் பெண்கள் நல்வாழ்வுச் சங்கத்தையும் தொழிற்சாலையையும் அமைத்துள்ளார். மேலும் டி.வி. சுந்தரம் அய்யங்கார் தொடக்கப் பள்ளியும், உயர்நிலைப்பள்ளியும் அமைத்துள்ளார் தொழிற் சாலைக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் தரும் இவர் கல்வி கற்பிக்கச் செய்வதிலும் அதிக ஆர்வம் காட்டியுள்ளார். டி.வி.எ.ஸ் உயர்நிலைப்பள்ளியை அரசே ஏற்று நடத்துகிறது. மேலும் இங்கு இந்து நடுநிலைப்பள்ளியும், அரசாங்கப் பொது நூல் நிலையமும், காவல்துறை நிலையமும், காட்டு இலாகா அலுவலகமும் உள்ளன.

2.5 கோயில் வளர்ச்சியில் டி.வி.எஸ். நிறுவனத்தின் பங்கு

சுந்தரம் கிளாட்சன், டி.வி.எஸ் சுசிகி, பொது மேலாளர், திரு. வேணுசீனிவாசன் அவர்கள் தற்சமயம் திருக்குறுங்குடி நம்பி கோவிலுக்குப் பல லட்சம் நிதியுதவி செய்து திருப்பணி செய்து வருகிறார்கள். இத்திருகோவிலுக்குரியகோயில்களான திருமலை நம்பி சந்நிதி, திருப்பாற்கடல் சந்நிதி, திருமங்கையாழ்வார் சந்நிதி, திருப்பரிவட்டப்பாறை சந்நிதி எனும் இராமானுசர் சந்நிதி முதலியவைகளுக்கு பல லட்சக்கணக்கில் நிதியுதவி செய்து திருப்பணிகள் செய்து

இருக்கிறார்கள். திருவரங்கம் கோயிலுக்கு அடுத்தபடியாக திருக்குறுங்குடி நம்பிகோவில் இராயர் கோபுரத்தை நிர்மானிக்கத் திட்டமிட்டுள்ளார்கள். மேலும் இவ்வூர்க்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதி, மின்சார வசதி, மருத்துவ வசதி, சாலை வசதி, வாசகசாலை வசதி, போன்றவற்றைச் செய்துள்ளார்கள். அக்காலத்து மன்னர்கள் கூட செய்ய முடியாத கோயில் திருப்பணிகளை டி.வி.எஸ். நிறுவனத்தார் தற்பொழுது செய்து வருவது பாராட்டத்தக்கதாகும்.

2.6 கோயிலின் குறிப்பிடத்தக்க சிறப்பு

வைணவத் திருத்தலத்தில் வேறெங்கும் காணமுடியாத ஒரு சிறப்பு அம்சமாக ஆழ்வாரால் பாடப்பெற்ற மகேந்திரநாதர் சிவன்கோயில் இங்கு உள்ளது.[3] பாணர் வகுப்பைச் சேர்ந்த பரமபக்தனான நம்பாடுவானுக்குத் தரிசனம் கொடுப்பதற்காகக் கொடிமரம் சற்று விலகிப் போகும்படி அருளிக் கோயிலுக்கு வெளியே நிற்கும் நம்பாடுவனுக்கு நம்பி காட்சி கொடுத்தார் என்கிறார்.[4] இப்போதும், இக்கோயிலில் கொடிமரம் சற்று விலகி நிற்பதைக் காணலாம். இதன் மூலம் பக்தர்கள் அனைவருக்கும் இறைவன் அருள்பாலிக்கிறார் என்று உணர முடிகிறது.

2.7 கோயில் அமைப்பு

திருக்குறுங்குடி கிராமத்தை மையமாகக் கொண்டே ஸ்ரீஅழகியநம்பி கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் சுமார் 18 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது என்கிறார்கள். கோயில் ஐந்து திருமதில்களுடனும் இரண்டு கோபுரங்களுடனும், பல சந்நிதிகளுடனும் மிகச் சிறப்பாகக் கட்டப்பட்டு இருக்கிறது.

பிரிட்டானியக் கலைக் களஞ்சியம் "தமிழ் இனம்தான் உலகத்திலேயே கோயில் கட்டுவதில் தலை சிறந்தது" என்று சான்று கூறுகிறது.[5] நாம் கோயிலில் இறைவனைக் கும்பிடும் போது எவ்வாறு இடப்புறத்திலிருந்து வலப்புறம் சுற்றி வருவோமோ அதே அமைப்பிலேயே செய்திகள் இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

2.7.1 நுழைவு வாயில்

திருக்குறுங்குடி வந்து " ஸ்ரீநம்பிக்குப் " பல திருப்பணி செய்து வணங்க நம்பி "வீடு சாதித்தவர்" என்று திருமங்கையாழ்வார் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. பரகால கவிக்குத் திருவரங்கத்தில் தெற்குக் கோபுர வாசல் போலவே, திருக்குறுங்குடியிலும் கீழக்கோபுர வாசல் அமைக்கப் பட்டிருப்பதே இதற்குச் சான்று.[6]

இக்கோயிலின் கோபுரம் கிழக்குப் பார்த்தவாறு அமைந்துள்ளது. கோபுரத்தில் கீழே உள்ள படிகளில் வர்ணம் அதாவது செம்மண் காவியும், சுண்ணாம்பு வெள்ளையும் பூசப்பட்டு உள்ளன. அவ்வர்ண வேலைப்பாடுகள் பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியாக உள்ளன. கோவில் வாசலுக்கு முன்பு பெரிய வீதி ஒன்று கிழக்கு நோக்கிச் செல்கிறது. இந்த வீதிக்கும் கோபுர வாசலுக்கும் இடையில் வடக்கு தெற்காக ஒரு வீதி செல்கிறது. அதில் கோபுர வாசலுக்கு நேரே தேர் நிறுத்துவதற்கெனக் கல்லால் ஆன தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் துவாரங்கள் காணப் படுகின்றன. முகப்பு தோற்றம் குடவரைக் கோயில் என அழைக்கப்படுகிறது. இங்கு இராச கோபுரம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் விஜய நகர மன்னன்

கிருஷ்ணதேவராயரால் இதன் அடித்தளம் அமைக்கப்பட்டதாம். ஆனால் கோபுரம் முழுமை பெறவில்லை. இருப்பினும் இக்கோபுரத்திற்கு 'இராயர் கோபுரம்' என்று பெயர் கூறுகிறார்கள். இதன் நுழைவு வாயிலின் உயரம் சுமார் 32 அடியும், அகலம் சுமார் 24 அடியும் கொண்டதாக அமைந்துள்ளது. மிகப் பெரியதான தேக்கு மரக்கதவு ஒன்று அமைந்துள்ளது. இக்கதவு திரு ஜீயர் சுவாமிகளால் நிறுவப்பட்டது என்கிறார்கள். பல வேலைப்பாடுகளுடன் கூடிய இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக இக்கதவுகள் அமைந்துள்ளன. இக்கதவுகளை ஒருவரால் அடைக்க முடியாது. இரட்டை அடைப்பு கொண்ட அமைப்புடன் இக்கதவு விளங்குகிறது. இது பார்ப்பதற்கு வியப்பைக் கொடுக்கக் கூடிய அளவில் மிகப் பெரியதாக அமைந்துள்ளது. திருவிழாக் காலங்களில் இவ்விடத்தை உற்சவ மண்டபமாகப் பயன்படுத்துகிறார்கள். உள்ளே நுழையும் போது மேலே ஒரு கல்வெட்டு[7] போன்ற அமைப்பு வண்ணத்தால் எழுதப்பட்டுள்ளது. தொடர்ந்து உள்ளே சென்றால் இரதிமண்டபம் பல சிற்ப வேலைகளுடன் கூடியதாகக் காணப்படுகிறது.

2.7.2 இரதி மண்டபம்

இரதி மண்டபம் பார்ப்பதற்குப் பெரிய அளவில் பல பெரிய சிற்பங்களைக் கொண்ட அழகான மண்டபமாகக் காணப்படுகிறது. பாண்டிய நாட்டு மன்னர்கள் காலத்தில் இம்மண்டபம் கட்டப்பட்டதாகக் கூறுகிறார்கள். சுமார் 6 அடி உயரமுள்ள முழு உருவக் கற்சிலைகள் சிற்பிகளின் அழகிய வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ளன. அச்சிற்பங்களில் கர்ணன், அருச்சுனன், இரதி, மன்மதன், கந்தருவன்,

தடாதகைப் பிராட்டி, கந்தர்வ நடனமாது ஆகியன மிகவும் அழகாகத் தத்துவரீதியாக அமைக்கப்பட்டுள்ளன. தடாதகைப் பிராட்டி சிலையில் மற்ற ஊர்களிலுள்ள கோயில்களில் மூன்றாவது தனம் மார்பில் தான் காணப்படுகிறது. ஆனால் இத்தலத்தில் உள்ள தடாதகைப்பிராட்டியின் மூன்றாவது தனம் கையில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைந்துள்ள இரதி மண்டபத்தை அடுத்து உள்ளே சென்றால் சித்திரக் கோபுரம் காணப்படுகிறது.

2.7.3 சித்திரக் கோபுரம்

இரதி மண்டபத்திலிருந்து உள்ளே சென்றால் இராசகோபுரம் காணப்படுகிறது. இக்கோபுரம் சுமார் 80 அடி உயரமும் 45 அடி அகலமும் கொண்டதாகச் சிறப்புடன் அமைந்துள்ளது. ஐந்து நிலைகளை (அடுக்கு) கொண்டதாக உள்ளது இக்கோபுரம். இத்தலத்திலுள்ள எம்பெருமான் நிலைகளும் ஐந்து. கோபுரத்திலுள்ள நிலைகளும் ஐந்து. இந்த அமைப்பு ஒரு ஒப்புமை நோக்கியே அமைந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. இக்கோபுரத்தில் வெளிச் சுற்றுப்புறத்தில் வெள்ளைக் கல்லாலான நுண்ணிய சிற்பங்கள் ஏராளமாக உள்ளன. இச்சிற்பங்கள் தத்துவரீதியாவும் கருத்தாழம் மிக்கதாகவும் காணப்படுகின்றன. இங்குள்ள சிற்பங்களில் கஜேந்திர மோட்சம், அக்னி பகவான், வருணன், ஈசானன், நிருதி, இந்திரன், குபேரன், தட்சிணாமூர்த்தி, சங்கர நாராயணர், வேணுகோபாலன், திருவிக்கிரம அவதாரம், நரசிம்ம அவதாரம், கடலரசன் சரணாகதி, கண்ணனின் நவநீதசோரம், சிவனின் ஊர்த்தவ தாண்டவ லீலைகள், கோபிகைகள், ஜலக்கிரீடை, கும்பபஞ்சரம் போன்ற அழகான அமைப்புகள் காணப்படுகின்றன. இவ்வாறு உள்ள

சிற்பங்களில் சில சிதைவடைந்த நிலையில் காணப் படுகின்றன. கோயில்களைப் பார்க்கும் போது உயரத்தோன்றும் கோபுரமும், அதனைச் சுற்றி அமைந்த பல பிரகாரங்களும் உயர்ந்து ஓங்கும் ஆண்டவனை நடுவிடமாகக் கொண்டு இயங்கி வருகிற அண்டத்தின் ஒருமைப்பாட்டையே விளக்குவதாகக் காண்கிறோம்.[8] கோபுரத்தில் உச்சிக்குச் செல்லும் வழியில் ஐந்து நிலைகளிலும் மரத்தாலான எண்ணிறந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. உள்ளங்கை அளவில் பலவகையான நுணுக்கமான வேலைப்பாடுகளை கொண்டமைந்த சிற்பங்கள் காண்பதற்கு அழகாக உள்ளன. இதனால் இக்கோபுரத்தைச் சித்திரக் கோபுரம் என்றும் கூறுகிறார்கள். கோபுரத்தின் உச்சிக்குச் சென்றால் ஐந்து கலசங்கள் காணப்படுகின்றன. அருகில் ஒரு மரம் முளைத்து வளர்ந்து வருகிறது. கலசம் உள்ள இடத்திற்கு ஏறுவதற்கான வழி மிகவும் குறுகிய அளவிலேயே அமைந்துள்ளது. இருப்பினும் இங்குள்ள சிறுவர்கள் மிக எளிதாகக் கோபுரத்தின் மேலே ஏறுகிறார்கள். பின்பு அடித்தளத்தில் இறங்கி உள்ளே சென்றால் கொடிமர மண்டபத்தைக் காணலாம்.

2.7.4 கொடிமர மண்டபம்

கொடிமரம் சந்தனம், தேவதாரு, செண்பகம், வில்வம், மகிழ், தேக்கு முதலிய மரங்களால் அமைக்கப் பெற்றது என்பார்கள். இத்தலத்திலுள்ள கொடிமரம் தேக்கு மரத்தால் ஆனது.

இக்கோயிலிலுள்ள கொடிமரத்தில் ஒவ்வொரு வருடமும் உத்திர நட்சத்தித்தில் கொடியேற்றப்படும்.

கொடியேற்றுவது திருவிழா தொடங்கிவிட்டது என்று மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்கே ஆகும். கொடிமரத்தையும் பலிபீடத்தையும் வேத ஆகமப்படி நிறுத்திப் பெருமாளுக்கும் நாச்சியாருக்கும் பதினோரு நாள் திருவிழாப் பங்குனி மாதம் நடத்துகிறார்கள். கொடிமரத்திற்குக் கொடியேறும் முன்பு எண்ணெய்க் காப்பு செலுத்துகிறார்கள். கொடிமரத்தில் ஏற்றிய கொடியைத் திருவிழா முடிந்த பின்பு இறக்குகிறார்கள்.

அசுரர்களை அகற்றுவதன் பொருட்டும் சிவகனங்களையும், தேவர்களையும் அழைத்தற் பொருட்டும், ஆலயத்தை காத்தற் பொருட்டும் பக்தர்களைப் பாதுகாக்கவும் கொடிமரம் நிறுவப்படும்.[9]

இக்கோயிலிலுள்ள கொடிமரம் மிகவும் உயரமானது. அதன் அடிப்பகுதி 17 அடி உயரக் கல்லால் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலுள்ள பகுதிகள் மரத்தால் அமைக்கப்பட்டுள்ளது. அந்த மரத்திற்கு வெளியில் தங்க முலாம் பூசிய தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. அத்தகடுகள் சதுரவடிவில் காணப்படுகின்றன. பொதுவாக எல்லாக் கோயில்களிலும் கொடிமரம் மூலவருக்கு நேரே எதிராக அமைக்கப்பட்டு இருக்கும். ஆனால் இத்தலத்திலுள்ள கொடிமரம் மூலவருக்கு எதிராகச் சற்று விலகிய நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரு கதை வழி வழியாகக் கூறப்படுகிறது. நம்பாடுவான் என்னும் அரிசன பக்தன் அரக்கன் ஒருவனைக் கொன்று மக்களைக் காப்பாற்றியதாகக் கூறுகிறார்கள். அவன் மூலவரைத் தரிசிக்க வேண்டும் என்ற நோக்குடன் கொடிமரம் விலகிக் கொடுத்து அழகிய நம்பியைத் தரிசிக்க வழி கொடுத்ததாகக் கூறுகிறார்கள்.

(அக்காலங்களில் பல சிறப்புக்களைப் பெற்ற அரிசன பக்தராக இருந்தாலும் கோயிலின் உள்ளே சென்று மூலவரைத் தரிசிக்க முடியாது. கோயிலுக்கு வெளியே நின்றுதான் தரிசிக்க வேண்டும். இதுசமயக் கட்டுப்பாட்டை வெளிக்கொணர்கிறது) ஆனால் இப்பொழுது இது மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறுவதில்லை. திருவிழாக் காலங்களில் மட்டுமே இம்மண்டபத்தைப் பயன்படுத்துகிறார்கள். இம்மண்டபம் நல்ல காற்றோட்ட வசதியுடனும், வெளிச்சம் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இறைவன் தரிசனம் முடித்த பின்பு மக்கள் இம்மண்டபத்தில் அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொள்கிறார்கள்.

2.7.5 பலிபீடம்

கொடிமரத்திற்கு அருகிலேயே பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது. இது கருங்கல்லால் ஆனது. இதன் அடிப்பகுதி அகன்றும் மேல்பகுதி குறுகியும் காணப்படுகிறது. அதன் நடுவில் சற்றுக் குழிவான அமைப்பு உள்ளது. மூலவருக்கு அபிசேகம் செய்யும்போது முதலாவதாக இப்பலி பீடத்திற்கு அபிசேகம் செய்கிறார்கள். இதன்மூலம் இதனுடைய முக்கியத்துவத்தை அறியமுடிகிறது.

கோயிலுக்குச் செல்லும் பெரியவர்கள் தெய்வத்தை வணங்குவதற்குரிய வழிமுறை தெரிந்தவர்கள் கோயிலுக்குள் நுழைந்ததும் முதலாவதாக பலிபீடத்தின் அடிப்பகுதியில் அடியொட்டிக் கும்பிட்டு விழுந்து வணங்கியே உள்ளே செல்கின்றனர். இதற்குரிய காரணத்தை வினவும் போது "தன்னுடைய அடிமனத்தில் உள்ள ஆணவம் அழியவும், தீய எண்ணங்கள் ஒழியவும், இறைவனுடைய எண்ணம் மட்டுமே

மேலோங்கி நிற்க வேண்டும் என்று சுந்தரராமானுசம் கூறுகிறார்.

27.6 மணிமண்டபம்

நீண்ட சதுரமான வடிவில் மணிமண்டபம் அமைந்துள்ளது. இம் மண்டபத்தில் பல வர்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன. இதில் பிரமாண்டமான மணி ஒன்று தொங்கவிடப்பட்டுள்ளது. இம்மணியை அன்பளிப்பாக அளித்தவர் சேர அரசரான ஆதித்தவர்மன் ஆவார்.[10] மணிக்கூண்டு சுமார் 3 அடி உயரம், $2^1/_2$ அடி அகலமும் உடையதாகும். இம்மணி வெண்கலத்தாலானது. சுமார் 150 கிலோ. எடை இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதனை ஒரு தரம் ஒலித்தால் அதன் ஒலி அலைகள் சுமார் $2^1/_2$ நிமிடம் வரை ஒலித்துக் கொண்டு இருக்கும். இதனை ஆதித்தவர்மன் அரசன் ஞாபகார்த்தமாக ஆலய ஆராதனைகள் நடக்கும் போது ஒலிப்பது வழக்கம். இந்த மணியின் மீது ஒரு பாடல் பொறிக்கப்பட்டுள்ளது.

"செய்துங்க நாட்டு சிறைவாய் சிறைவாய்மன்
ஆதித்தன் தென் வாஞ்சியான்
வியவொன்று அசிகலையாணன் கன்னிவாசகம்
வந்தேன்
நியமொன்று கொல்லம் அறுநூற்று நாற்பத்தி
நாலின்ன பாதம்
அயனும் பணியும் நம்பிக்கு மணி அளித்தான்
அன்பு கொண்டே"

என்பது அப்பாடல்.

திரு ஜீயர் சுவாமிகள் எம்பெருமானைச் சேவிக்க மகா மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் போது அவருடன்

அர்ச்சகர்கள் மட்டுமே உள்ளே இருப்பார்கள். மற்ற பக்தர்கள் எல்லாரும் மணிமண்டபத்திலேயே நின்று இறைவனைச் சேவிக்கிறார்கள்.

2.7.7 மகா மண்டபம்

மணிமண்டபத்திற்கு அடுத்தபடியாக மகா மண்டபம் அமைந்துள்ளது. குலசேகர மண்டபம் என்ற மற்றொரு பெயரும் இதற்கு உண்டு. சேர அரசரான குலசேகர அரசன் இதனைக் கட்டி இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

திருவிழாக் காலங்களில் உற்சவர் இம்மண்டபத்தில் அமர்ந்து இருக்கிறார். பக்தர்கள் இங்கேயே கூடி நின்று எம்பெருமானைச் சேவிக்கிறார்கள். இம்மண்டபத்திற்கு உள்ளே வரும்போது ஆண்கள் மேலாடை இன்றியே வரவேண்டும் என்கிறார்கள். இந்த முறையை அனைவரும் கடைப்பிடிக்கிறார்கள்.

2.7.8 கருவறை

மகாமண்டபத்திற்கு அடுத்து அர்த்த மண்டபம் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக கருவறை அமைந்துள்ளது. பிரதான கருவறையில் அழகிய நம்பி மூலவராகவும் அவருக்கு அருகில் ஸ்ரீ தேவி, பூமி தேவி ஆகியோர் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கின்றனர். மூலவருக்கு இடக் கைப்பக்கம் மூலவரை நோக்கிப் பிரம்ம மார்க்கண்டேயர் என்னும் முனிவர்களும் வீற்றிருக்கிறார். மற்றும் உற்சவ மூர்த்திகளான வடிவழகிய நம்பி, ஸ்ரீ தேவி, பூமி தேவி, குறுங்குடி நாச்சியார், ஆண்டாள்

ஆகியவர்களுடன் தங்க சிம்மாசனத்தில் எழுந்தருளி இருக்கிறார். இங்குள்ள பெருமானின் அழகு மிகவும் போற்றத்தக்கது. இவருக்கு அணிவிப்பதற்காகப் பல வகையான தங்க நகைகள் உள்ளன. மூலவர் மூர்த்தி கல்லாலும் அதற்கு மேல் அழகிய வேலைப் பாடுகளாலும் அலங்கரிக்கப்பட்டும் வேலைப்பாடுகளுக்கு ஏற்றாற் போல வர்ணக்கலவை பூசப்பட்டும் காணப்படுகின்றது. மூலவரது உருவம் பல மூலிகைகள் சேர்ந்த கலவையைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதாம். இம்மூலவருக்கு அபிசேகங்களோ, புஷ்பங்கள் சாத்துதலோ கூடாது. ஆனால் ஆராதனைகள் நிவேதனம் செய்தல் முதலியன நடைபெறுகின்றன.

கருவறையில் அமைந்துள்ள நம்பியை 'வைணவநம்பி' என்று கூறுகிறார்கள். இந்நம்பிகளில் ஒருவர், "திருமண்காப்புச் சாத்திக்கொண்டு பாஷ்யகாரர் (இராமாநுசர்) பக்கத்தில் வேதாந்தம் கேட்டுச் சீடராகி நாமும் நம் இராமாநுஜனை உடையோம்" என்று கூறினாராம். அதனால் அந்நம்பிக்கு "வைணவநம்பி" என்ற திருநாமம் உண்டாயிற்று.

இதற்கு அடுத்தபடியாக வீற்றிருந்த நம்பியின் கருவறையும் அதற்கு அடுத்தபடியாகப் பள்ளி கொண்ட நம்பியின் கருவறையும் அமைந்துள்ளன. இக்கோயிலின் வீற்றிருந்த, நின்ற, கிடந்த ஆகிய மூன்று திருக்கோலங்களுடன் நம்பி எழுந்தருளியுள்ளார். மதுரை கூடல் அழகர் திருக்கோயில், திருகோட்டியூர், மன்னார்கோயில், உத்திரமேரூர், ஸ்ரீ வில்லிபுத்தூர், காஞ்சிபுரம் முதலிய விஷ்ணு தலங்களில் இம்மூன்று மூர்த்திகளையோ அல்லது இரண்டு மூர்த்திகளையோ

கருவறையின் மேல் விமானத்தில் காணலாம். தெற்கில் இருந்து வடக்காக ஒரே கோயிலில் அமைந்திருக்கும் இந்நிலை இக்கோயிலில் மட்டும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது என்கிறார் வைணவப் பெரியார் சுந்தரராமானுசர்.

279. உட்பிரகாரம்

நம்பி ஆண்டவர், வீற்றிருந்த, நின்ற, கிடந்த என்ற மூன்று நிலைகளில் அமைந்துள்ள கருவறையைச் சுற்றி உட்பிரகாரம் அமைந்துள்ளது. இதில் கன்னி மூலையில் கன்னி விநாயகர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. தெற்குப் பக்கம் குறுங்குடி நாச்சியார் சந்நிதி உள்ளது. வட பக்கத்தில் ஆண்டாள் சந்நிதியும், திருவேங்கடமுடையான் சந்நிதியும் தசாவதார சந்நிதியும் அமைந்துள்ளன. தெற்கு உட்பிரகாரத்தில் வீற்றிருந்த நம்பி சந்நிதிக்குச் சற்றுக் கிழக்கே பக்கம் நின்ற சிவன் சந்நிதி அமைந்துள்ளது. பக்கம் நின்ற சிவன் சந்நிதியைப் பற்றித் திருமங்கையாழ்வார் தம்முடைய பெரிய திருமொழி பதிகத்தில் ஒன்பதாவது பத்தில்,

"அக்கும் புலியின் அதளும் உடையார் அவர் ஒருவர்
பக்கம் நிற்க நின்ற பண்பரூர் போலும்
தக்க மரத்தின் தாழ்சினை ஏறிதாய் வாயில்
கொக்கன் பிள்ளை வெள்ளிற உண்ணும்
குறுங்குடியே"[11]

எனப்பாடி மகிழ்ந்திருக்கிறார். இவ்வொற்றுமை ஒரு சில இடங்களில் தான் காண முடிகிறது. இவ்வமைப்பு சைவ, வைணவ ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக அமைக்கப் பட்டுள்ளது என அறியலாம். இங்கு சிவனும் விஷ்ணுவும் இருப்பதால் "துவிமூர்த்தி ஸ்தலம்" என இவ்வூர்

ஸ்தலபுராணத்தில் கூறப்பட்டுள்ளது[12]

இங்குள்ள சிவன் கோவில் பற்றி வைணவர்களிடையே ஒரு கதை வழங்கப்படுகிறது. சிவன் அரக்கனுக்கு வரம்கொடுத்தான். அந்த வரத்தின் பலனைப் பரிசோதிக்க அரக்கன் சிவன் தலையிலேயே கை வைக்க முயன்றானாம். உடனே சிவன் பயந்து தெற்கு நோக்கி ஓடி வந்து இக்கோயிலுக்குள் நுழைந்தான் என்றும் அவனுக்குத் தக்கப் பாதுகாப்புத் தந்து தனக்கு அருகிலேயே அவனை அமர்த்திக் கொண்டார் நம்பி என்றும் கூறுகிறார்.[13]

2.7.10 காலபைரவர் சந்நிதி

பள்ளி கொண்ட நம்பியின் சந்நிதியின் கிழக்கே காலபைரவர் சந்நிதி அமைந்துள்ளது. இவர் மூர்த்தமுடைய தேவதை. இவர் சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு இக்கோயிலுக்கு உரிய கொடிமரம் மலையாளதேசத்திலிருந்து கொண்டு வந்த போது அதனுடன் வந்த தேவதையாகக் கருதி வருகிறார்கள். 14 இவருக்கு நிபந்தமாக வடமாலை சார்த்துவது வழக்கம். இப்படிச் செய்தால் தங்கள் துன்பங்கள் நீங்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது.

2.7.11 சேவை முதல்வர் சந்நிதி

பள்ளி. கொண்ட நம்பியின் சந்நிதியின் வடகிழக்கு மூலையில் சேனை முதல்வர் சந்நிதி அமைந்துள்ளது. இவர் முக்கிய தேவதைகளில் ஒருவராக போற்றப்படுகிறார். அரசனுக்கு தானைத்தலைவன் எப்படியோ, அதைப் போல இவர் விஷ்ணுவுக்கு உரிய பரிவார தேவதை எனலாம்.

வைணவ சம்பிரதாயத்தில் இவரே ஒரு ஆச்சரியர் என்று குறிப்பிடுவர். ஆழ்வார்களில் தலையாயவரான நம்மாழ்வாருக்கு ஞான உபதேசங்கள் செய்து திருவிழச்சினைச் செய்தவர். பிரம்ம உற்சவத்திற்கு முதல் நாள் இவர் வீதிகளில் வலம் வந்து சுற்றிப்பார்த்து அஷ்டதிக்கு பாலர்களையும், மற்றும் பரிவார தேவதைகளையும் இவ்விழாவின் போது ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்வது சம்பிரதாயம்.

2.7.12 மணவாளமாமுனிவர் சந்நிதி (வீரப்ப நாயக்கர் மண்டபம்)

நாயக்க அரசர்களின் ஒருவரான வீரப்ப நாயக்கரால் இம்மண்டபம் நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இங்கு சுமார் 6 அடி உயரத்தில் கற்சிலைகள் காணப்படுகின்றன. இம்மண்டபத்தில் மணவாளமாமுனிகள் எழுந்தருளியுள்ளார். இம்மண்டபத்தில் நரசிம்ம அவதாரம், அனுமார், கருடன், புருசா மிருகம் (வியாக்கரபாதர்) வீமன், நாயக்க அரசர்கள், குறவன், குறத்தி, வாலி, சுக்கிரீவன், வேடுவன் அரச குமாரியை கடத்தல், வேட்டுவச்சி அரசகுமாரனைக் கடத்தல் ஆகிய சிற்பங்கள் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் ஆதாரபீடத்தில் நுண்ணிய கல்லால் ஆன சிற்பங்கள் மலிந்து கிடக்கின்றன.

2.7.13 கண்ணன் சந்நிதி

மூன்றாவது பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் கண்ணன் சந்நிதி அமைந்துள்ளது. இங்கு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி அன்று சிறப்பான முறையில் கொண்டாடுகிறார்கள்

நடைபெறுகின்றன. இக்கோயிலுக்கு அருகில் வடக்குப்பக்கம் 'திருமஞ்சனக் குளம்'[8] அமைந்துள்ளது. இக்குளத்தின் தென் பகுதியில் பனைமரம் ஒன்றும் காணப்படுகிறது.

2.7.14 திருமஞ்சனக் குளம்

திருமஞ்சனக் குளம் சிறியதாக அழகாக அமைந்துள்ளது. இக்குளத்திற்குத் தெற்குப் பக்கம் வெறும் வெளியாகவே உள்ளது. குளத்திற்கு மேல் தென்கிழக்கு திசையில் ஒரு பனைமரம் உள்ளது. திருமழிசைப் ஆழ்வார் திருச்சந்த விருத்தம் என்னும் பிரபந்தத்தில்,

"கரண்ட மாடு பொய்கையுள் கரும்பனை பெரும்பழம்
புரண்டு வீழ வாளைபாய் குறுங்குடி நெடுந்தகாய்"[15]

என்று இப்பனையைப் போற்றி இருக்கிறார். முன்னொரு காலத்தில் ஒரு கந்தர்வன் ஒரு ரிஷியின் சாபத்தால் காகமாகப் பிறந்து இக்குளக்கரையில் வாழ்ந்து வந்தான். அப்பொழுது பனையின் பழம் அத்தடாகத்தில் வீழ்ந்தது. அதை அக்காகமானது கொத்த நீரில் பாய்ந்தது. அங்கிருந்த வாளை மீன்கள் காக்கையை கொத்த வந்தன. அம்மீன்களுக்குத் தப்பியதாம். அக்காக்கை நீரில் மூழ்கி வெளியே வந்ததும் சாபவிமோசனமாகி கந்தர்வனாகச் சென்றான் என்பது ஸ்தல வரலாறு. இங்குள்ள பனைமரம் ஒன்று அழிய, மற்றொன்று அழிந்த மரத்தின் விதையின் மூலமே தோன்றி மரமாக வளர்ந்து வருகிறது. தொடர்ந்து இங்கு ஒரு பனைமரம் வளர்ந்து வருகிறது என்று கூறுகிறார்கள்.

2.7.15 திருவாய்மொழி மண்டபம்

கோயிலில் மூன்றாவது பிரகாரத்தில் 'திருவாய்மொழி மண்டபம்' அமைந்துள்ளது. இங்கு மார்கழி மாதத்தில் இராபத்து உற்சவம் 10 நாள் நடைபெறுகிறது. விழா நடைபெறும் நாட்களில் நம்மாழ்வார் அருளிச் செய்த திவ்வியபிரபந்தத்தில் முதன்மை பெற்ற திருவாய்மொழி என்னும் தமிழ்மறை வைணவர்களால் அனுசந்திக்கப்பட்டு வருகிறது. ஆகவே இம் மண்டபம் திருவாய்மொழி மண்டபம் என வழங்கப்படுகிறது. இம் மண்டபத்தில் சிறு மண்டபம் கொங்கிணி அரசர்களால் நிர்மாணிக்கப் பட்டதாக சொல்கிறார்கள். இதற்குச் சான்றாக அரசர்கள், அரசகுமாரிகள் ஆகியோர்களின் கற்சிலைகள் இம்மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

2.7.16 திரு ஜீயர் சுவாமிகள் மடம்

இரதி மண்டபத்திற்கு வடக்குப் பக்கம் ஜீயர் சுவாமிகள் மடம் அமைந்துள்ளது. இம்மடத்திலேயே பேராருளாளர் ஜீயர் சுவாமிகள் வழி வழி பட்டம் பெற்றவர்கள் தங்கிக் கோவில் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இம்மடம் மிகப் பெரிய அளவில் உள்ளது. இதன் வடக்குப் பகுதியில் உடையவர் சந்நிதி உள்ளது. இந்த சந்நிதியில் ஜீயர் சுவாமிகள் மட்டும் வழிபாடு நடத்தி வருவதாகக் கூறுகிறார்கள். ஜீயர் சுவாமிகள் கிழக்கு பார்த்தவாறு சந்நிதிக்கு முன்பாகப் மான்தோலில் அமர்ந்து இருக்கிறார். அழகிய நம்பி கோயிலுக்கு பெருமானை

சேவிக்க வருபவர்கள் காலை 10.30 மணிக்குள் ஜீயர் சுவாமிகளைப் பார்க்க வந்தால் அவர் தீர்த்தம் கொடுத்து ஆசிர்வாதம் கூறி அனுப்புகிறார். காலை 10.30 மணிக்கு மேல் சென்றால் வெறும் அட்சதை மட்டும் தூவி ஆசீர்வாதம் செய்கிறார். ஜீயர்சுவாமிகளைப் பார்க்கப்போகும் போது பக்தர்கள் கையில் பழவகைகள், வெற்றிலை, பாக்கு, கற்கண்டு ஆகியவற்றைக் கொண்டு செல்கிறார்கள். இப்பொழுது உள்ள ஜீயர்சுவாமிகள் 48வது பட்டம் பெற்றவர். இவரது இயற்பெயர் வேங்கடாச்சாரியார். இவர் அமர்ந்துள்ள இடத்திற்கு மேல் பகுதியில் இதற்கு முன்பு இங்கு இருந்த ஜீயர் சுவாமிகளின் படங்கள் இருக்கின்றன. ஜீயர் சுவாமிகள் எம்பெருமானைச் சேவிக்கச் செல்லும்போது கையில் திருத்தண்டம் ஒன்றினைக் கொண்டு செல்கிறார். இது பச்சை (இளம்)யாலான நான்கு அடி உயரமுடைய ஒரு பிரம்பு ஆகும். திருத்தண்டத்தில் மேல் பகுதியில் தூய வெண்மையான துணி ஒன்று கட்டப்பட்டுள்ளது. இதனை ஜீயர் சுவாமிகள் எம்பெருமானைச் சேவிக்க வரும்போது அவரோ அல்லது உதவியாளரோ எடுத்து வருகிறார்கள். ஜீயர் சுவாமிகள் மடத்தின் கிழக்குப் பகுதியில் அவர் பயணம் செய்வதற்கான பல்லக்குகள் காணப்படுகின்றன. மடத்திற்குள் நுழையும் போது மேற்குப் பகுதியில் கோயில் மேலாளர் அலுவலகம் அமைந்துள்ளது. அதற்கு நேராக கிழக்குப் பக்கத்தில் தோட்டத்திற்குச் செல்வதற்குரிய பாதை அமைந்துள்ளது.

2.7.18 தோட்டம்

கோயிலுக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களும், இத்தோட்டத்தில் பயிர் செய்கிறார்கள். இங்குள்ள நெல்லி மரம் மிக உயர்ந்த தோற்றத்துடன் காணப்படுகிறது. மாமரம்

பெரிய அளவில் அமைந்துள்ளது. வாழை மரங்கள் சிறப்பாக உள்ளன. எம்பெருமானுக்கு சேவா காலத்திற்கு வேண்டிய புஷ்பங்கள் (மலர்கள்) இங்கேயே எடுத்துக் கொள்கிறார்கள்.

தோட்டத்திலிருந்து வெளியே வந்தால் இரதி மண்டபம் வரும் அதன் வழியாக வெளியாக வந்தால் கோயிலுக்கு வெளியே வரலாம்.

2.7.19 மலைமேல் நம்பி

இத்தலத்திற்கு மேல்புறம் ஒரு மலை காணப்படுகிறது. இம்மலைக்கு மகேந்திரசிரிமலை என்று பெயர் வழங்குகிறது. இம்மலைக்கு அருகிலேயே மலைமேல் நம்பி அமர்ந்துள்ளார். மலைமேல் நம்பியைச் சீனிவாசன் என்று வழங்குவர். எனவே, மலைமேல் நம்பி சந்நிதி சீனிவாசன் சந்நிதியாக மகேந்திரசிரிமலையின் மீது உள்ளது.[16] இப்பகுதியிலுள்ள மக்களுள் பலர் தங்கள் குழந்தைகளுக்கு சீனிவாசன் என்று மலைமேல் நம்பியின் பெயரை வைத்து இருக்கிறார்கள். இக்கோயிலுக்குச் செல்லும் வழியில் ஒரு ஆறு ஓடுகிறது. அது கண்ணுக்கு இனிமையாகவும் உடலுக்கு குளிர்ச்சியாகவும் இருக்கிறது. மலைமேல் எம்பெருமான் அமர்ந்துள்ள காரணத்தால் இவரை 'மலைமேல் நம்பி' என்று ஊர் மக்கள் கூறுகிறார்கள்.

2.7.20 திருப்பாற்கடல் நம்பி

ஸ்ரீ அழகிய நம்பி கோயிலுக்கு வரும் வழியில் திருப்பாற்கடல் நம்பி அமைந்துள்ளார். மகேந்திரகிரி

மலையிருந்து ஓடி வருகின்ற ஆறானது இவ்வழியாகச் செல்கிறது. இந்த ஆற்றின் தென்கரையில் 'திருப்பாற்கடல் நம்பி' திருப்பாற்கடலில் உள்ளது போலவே இங்கேயும் காட்சி அளிக்கிறார்.

இத்தலத்தில் ஐந்து நம்பிகள் சிறப்பான முறையில் கோயில் கொண்டுள்ளனர்.

திருப்பாற்கடல் நம்பிக்குச் சமீபத்தில் இராமானுசர் அமர்ந்து இருந்த பாறை அமைந்துள்ளது. இதற்கு "திருப்பரிவட்டப் பாறை" என்று பெயர் வழங்கப்படுகிறது.

திருப்பாற் கடல் நம்பி கோயிலில் செண்பகராமன் காலத்தில் சுமார் 1627இல் திருப்பாற்கடல் நம்பி அன்னதானச் சத்திரம் நிறுவி ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், தேசாந்திரிகளுக்கும் உணவு அளித்ததாகக் கல்வெட்டுச் சாசனம் கூறுகிறது.[17] இக்கல்வெட்டு கோயிலுக்கு வெளியில் அமைந்துள்ளது. இதை ஊர் மக்கள் இப்பொழுது சுமை தாங்கிக் கல்லாகப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே இன்று இக்கல் சிதைவடைந்து அதிலுள்ள எழுத்துக்கள் உருச்சிதைந்து காணப்படுகிறது.

குறிப்புகள்

1. பேட்டி. திரு நாராயணன், திருக்குறுங்குடி.
2. திருக்குறுங்குடி நம்பி கோயில் பாதயாத்திரை மலர், 1984 ப. 1.
3. திருக்குறுங்குடி நம்பி கோயில் பாதயாத்திரை

மலர் 1984 ப. 3.
4. பேட்டி. திரு சுந்தரராமானுசம், மேலதேவநெல்லூர்.
5. இராசமாணிக்கம், நெல்லைக் குடைவரைக் கோயில்கள், ப. 2.
6. மஷாத்மியம் - ஸ்தலபுராணம், ப. 2.
7. கல்வெட்டு

ஸ்ரீ திருக்குறுங்குடி
ஸ்ரீ பேரருளாள ரா
ராஙுஜ ஜீயர் ஹாரி
மடம்சயருவது யட்டம்
மடாதிபதி ஸ்ரீ ரா8ஙுஜ ஜீயர்

8. தமிழர் திரு நாள், ப. 106.
9. கே. ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், ப. 47.
10. மணிமண்டபத்தில், இப்பெரிய மணி கேரள அரசன் (தென்வஞ்சி நாடு ஆதித்தியவர்மனால் (கல்வி--விசாகம்) கொல்லம் ஆண்டு 644-ல் (கிபி 1468) சுவாமி அழகிய நம்பிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
11. திருமங்கையாழ்வார், திருமொழி, பாடல் எண். 1. ப. 135.
12. மஹாத்மியம், ஸ்தலபுராணம், ப. 2.
13. பேட்டி. திரு நடராஜன், மதுரை காமராசர் பல்கலைகழகப் பணியாளர், திருக்குறுங்குடி.
14. பேட்டி திரு ஆழவந்தார் இராமானுசம் - சோதைசேரி.
15. திருமழிசை ஆழ்வார் பாடல் எண். 62, ப. 144.
16. சி. முத்துப்பிள்ளை, புகழ்மணக்கும் வைணவத்தலங்கள், ப. 143.
17. தேவஸ்தானக் குறிப்பேடு

இயல் 3

கோயிலின் வரலாறு

3.0 முன்னுரை

ஸ்ரீ அழகிய நம்பி எம்பெருமான் திருக்குறுங்குடியில் தோன்றியதைக் கொண்டே இவ்வூரின் சிறப்பு மேலோங்கி உள்ளது. எம்பெருமானின் வரலாறு மிகவும் தொன்மையானது. இத்தலத்தின் பெருமைகளைக் கீழ்க்கண்ட நான்கு நிலைகளில் பிரித்துக் கூறலாம்.

1) புராணம் - (பௌராணிகம்)

2) ஆர்சேயம் - (ரிஷிபிராப்தம்)

3) தெய்வீகம் - (தெய்வமாக விரும்பி உறையக்கூடிய இடம்)

4) மானுஷம் - (பெருமையுள்ள மனிதர்களாலே பிரகாசப்படுத்தப்பட்டது)

என்ற நான்கு நிலைகளிலும் பெருமை உடையது இத்தலம். இறைவனுடைய பெருமை அவன் தோன்றியுள்ள தலத்தைக் கொண்டே மதிப்பிடப்படுகிறது. இங்குள்ள எம்பெருமான் மிகவும் சீரும் சிறப்பும் உடையவர் என்பதற்குத் தல வரலாறு சான்று பகர்கிறது. இறைவன் குடி கொண்டு இருக்கின்ற தெற்கு வீடாகிய இத்தலத்தின் வரலாற்றுச் சிறப்புக்களைக் கூறுவதாக இவ்வியல் அமைந்துள்ளது.

தல வரலாறு

திருக்குறுங்குடி என்னும் தலம் வராக அவதார காலத்தில் ஏற்பட்டது. இந்தத் திருத்தலத்தில் பெருமான் பிராட்டிக்குக் கைசிக புராண வரலாற்றை எடுத்துக் கூறினார் என்று கூறப்படுகிறது. தென்பாண்டி நாட்டிலுள்ள 18 வைணவ தலங்களில் மிகவும் பரமபாவமானது (முக்கியமானது) சுவாமி அழகிய நம்பியை 78 பிரம்மாக்கள் ஆராதனை பண்ணியதாகத் தலபுராணம் கூறுகிறது. இந்தப் பெருமாளையும் தலத்தையும் ஆழ்வார்கள் 12 பேரில் 4 ஆழ்வார்கள் மட்டும் பாடியிருக்கிறார்கள். நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய நான்கு ஆழ்வார்களும் இத்தலத்தைப் பாடிய பெருமைக்குரியவர்களாவார்கள். இவர்கள் பாடிய பாடல்கள் நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளன. இத்தலத்தில் சிறப்பு நிலையான பரமபதத்திலிருந்து எம்பெருமாள் ஓடோடி வந்து எழுந்தருளியிருப்பது.[1] இது வைகுண்டத்திற்குச் சமமானது. இங்கு எம்பெருமான் ஸ்ரீ நாராயணன் ஐந்து நிலைகளில் கோயில் கொண்டுள்ளார்.

1) பரத்துவம் - மோட்சமான ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை.

2) வியூகம் - திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் நிலை.

3) விபவம் - தச அவதார நிலைகள்

4) அந்தரியமித்துவம் - உலகெங்கும் பரவியுள்ள நிலை[2]
கரந்தெங்கும் பரந்துள்ளான்.

5) அர்ச்சா அவதாரம் - விக்ரக ரூபமாக 108 வைணவ திவ்விய தேசங்களிலும் மற்றும் கோயில்களிலும் எழுந்தருளியிருக்கும் நிலை.

3.2 புராண வரலாறு (பௌராணிகம்)

தலத்தின் பெருமை பிரமாண்ட புராணத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது. இத்தலம் அவதார காலங்களும் முன்னாலேயே இங்கு இருந்ததாகவும், தேவர்களும், ரிஷிகளும் வழங்கி வந்ததாகவும் கூறுவார்கள். இத்தலத்து எம்பெருமானைப் பிரமன் ஆராதித்தாகவும் புராணம் கூறும். பிரம்மன் ஆராதித்ததை இன்றும் மறவாமல் இங்கு பொற்றி வருகிறார்கள். இத்திருக்கோயிலில் தைமாதப் பிறப்பன்று " பிர்ம்ம- ஆராதனம் " என்ற ஆராதனை நடத்துகிறார்கள். மற்ற ஆராதன நிகழ்ச்சிகளிலிருந்து இது மாறுபட்டு அமைந்துள்ளது. ஒப்வொரு ஆராதனை நிகழ்ச்சிகளையும் அர்ச்சகர்கள் நின்று கொண்டே செய்வார்கள். பிரம்ம ஆராதனத்தை மட்டும் அமர்ந்த நிலையிலிருந்து செய்கிறார்கள்.

" பூசித்து இனிதேத்து எழுபத்தென் பிரமர் ...."

என்று நம்பி உலா இதற்குச் சான்று பகரும்.

3.21 ரிஷி பிராப்தம் (ஆர்சேயம்)

ரிஷிகளாலும் இத்தலத்திற்குப் பெருமை உண்டு என்று கூறுகிறார்கள். இத்தலத்தின் பெருமையைச் 'சுகர்' என்னும் மகரிஷி எடுத்துக் கூறியதாகவும், அகத்திய முனிவருக்கு இத்தலத்து எம்பெருமான் காட்சி கொடுத்தகாகவும் ஒரு மரபு கூறப்படுகிறது.

நம்பிமலையில் உற்பத்தியாகிவரும் நம்பியாறு இத்தலத்தின் வழியாகவே செல்லுகிறது. இது ஒரு புண்ணிய நதியாகும். இதுவே இங்குத் திருப்பாற்கடல் துறை, தீர்த்தமாகக் கொள்ளப்படுகிறது. இத்தலம் புராணச் சிறப்புப் பெற்ற மகேந்திரகிரிமலையின் அடிவாரத்தில் உள்ளது. இதற்கு நம்பிமலை என்ற பெயரும் உண்டு. முற்காலத்தில் இராமாயணத்தில் ஆஞ்சனேய பகவான் கேகனம் (வானம்) மார்க்கமாகச் செல்வதற்குமுன் இம்மகேந்திரகிரிமலையில் நின்றுகொண்டு தன்னுடைய உருவத்தைச் சுருக்கி இராமபகவானைத் தியானித்துச் சென்றதாகப் புராணம் கூறும். இம்மலை இத்தலத்திலிருந்து சுமார் 5 மைல் தொலைவில் உள்ளது. இங்கு அழகிய நீர் வீழ்ச்சிகளும், மடுக்களும், வகை வகையான சிறப்பு வாய்ந்த மலர்களும் மிகுந்து காணப்படுகின்றன. இம்மலையில் வைத்திய மூலிகைகள் காணப்படுவதாகப் பெரியவர்கள் கூறுகிறார்கள்.[3] சித்தர்கள் பலரும் வாழ்ந்து வருவதாக இவ்வூரில் கூறுகிறார்கள். இவ்விடத்தில் திருமலை நம்பி சந்நிதி அமைந்துள்ளது. இது ஒரு வைணவ வழிபாட்டுத் தலமாக விளங்குகிறது. ஏராளமானவர்கள் பிரதி மாதம் இறுதிச் சனிக்கிழமையன்று இங்கு வந்து தரிசித்துச் செல்வது வழக்கமாக உள்ளது.

3.2.2 கைசிக விருத்தம்

வராகபுராணத்தில் பூமிபிராட்டியை வெளிக்கொணர்ந்து பின் அவருக்கு வராக நயினார் (பெருமாள்) பல உபதேசங்களைச் சொல்லும்போது, ஜீவாத்துமாக்கள் உய்ய ஒரு வழிவகை அருளிச் செய்ய வேண்டுமாறு பூமிபிராட்டி இறைவனை வேண்ட, வராக நயினாரும் யாரொருவர் கானத்தால் என்னை படிக்கிறானோ (தியானத்தால்) அவன் என்னை அடைகிறான் என்று சொன்னார். இதற்குச் சான்றாக, ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது.

திருக்குறுங்குடியில் உள்ள இறைவனைப் பாணர் குலத்தில் பிறந்த நம்பாடுவான் என்னும் ஒரு பரமபக்தன் வழிபட்டு வந்திருக்கிறான். இவன் யாழிசை மீட்டித் தினமும் விடிவோரையில் (அதிகாலையில்) திருப்பள்ளி எழுச்சிப் பாடிக் கொண்டு வந்திருக்கிறான். அவன் மகேந்திரசிரி மலையின் வழியாக வரும்போது கோர முகத்தை உடையவன் (அரக்கன்) வழிமறித்து அவனை உண்ணப் போவதாகப் பயமுறுத்த அதற்கு நம்பாடுவான் "இன்று ஏகாதசி விரதம். நான் இறைவனை வழிபட வேண்டும். வழிபட்டு வந்த பின்பு நீ வேண்டுமானால் என்னை உட்கொள்ளலாம்" என்று கூறினானாம். இதைக் கேட்ட அரக்கன் உன்னை நான் எப்படி நம்புவது என்று கேட்டான். அதற்கு நம்பாடுவான் சத்தியம் செய்து கொடுத்துச் செல்கிறான். இறைவனை வழிபட்டு மீண்டும் அந்த அரக்கனை நம்பாடுவான் சந்தித்தான். அந்த அரக்கன் "உன்னுடைய திறமையைப் பாராட்டுகிறேன். இன்று நீ எனக்கு உணவாக வேண்டாம் சென்று வா"என்று கூறி விடுகிறான். உடனே நம்பாடுவானும் செல்கிறான். கார்த்திகை மாதத்துச் சுக்கிலபச்சத்து

ஏகாதசியன்று இறைவனை வழிபட்டுத் திரும்பவும் அதே போல யாழிசையை மீட்டிக் கொண்டு நம்பியைப் பற்றிப் பாடியவாறு நம்பாடுவான் வந்தான். அப்பொழுது எம்பெருமான் ஒரு கிழவன் உருவில் தோன்றி "நீர் இவ்வழியாகச் செல்ல வேண்டாம் இவ்வழியில் அரக்கன் இருக்கிறான்" என்று புத்திமதி கூறினார். அதற்கு நம்பாடுவான் "நான் ஏற்கனவே அந்த அரக்கனிடம் சபதம் செய்து விட்டுத்தான் வந்திருக்கிறேன். எனவே நான் இந்த வழியாகத்தான் செல்வேன் என்று கூறி அதன்படியே சென்றான். எம்பெருமானும் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. அரக்கனிடம் சென்று தன்னை உண்ணுமாறு வேண்ட, அதற்கு அவன் மறுக்கிறான். உடனே அரக்கன் அவனுடைய முற்பிறப்பினைத் தெரிந்து கொண்டு "தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் மனிதனின் தன்மையை அடைய விரும்புகிறேன். எனக்குத் தாங்கள் உணவாக வேண்டாம். தங்களது கானத்தில் பலனை மட்டும் தர வேண்டும்" என்று வேண்டி நின்றான். அதைக் கேட்ட நம்பாடுவானும் கைசிகராகத்தின் சிறுபலனை கொடுத்தான். பலனைப் பெற்றதும் அரக்கன் கோர உருவம் நீங்கினான். அதே இடத்தில் இருவரும் முக்தி அடைந்தனர்.

3.3 மானுசிகப் பெருமை

மானுசிகப் பெருமையால் இத்தலம் சிறப்புப் பெற்றதென்றால் அதற்குக் காரணம் ஆழ்வார்களே. ஆழ்வார்கள் என்ற சொல்லுக்கு இறைவனுடைய கல்யாண குளங்களிலே ஈடுபட்டு அழுந்தினவர்களாதலால் ஆழ்வார்கள் எனப்பட்டனர் எனலாம்.[4]

3.31 நம்மாழ்வார் வரலாறு

வைணவ ஆழ்வார்களில் தலையானவர் நம்மாழ்வார். இத்தலத்து நம்பியின் கருணையால் அவதரித்தார் என்பது வைணவ மரபு. திருவன் பரிசாரம் என்னும் திருப்பதியில் காரிமகாராஜன் உடைய நங்கையார் என்னும் குறுநில மன்னர் தம்பதிகள் புத்திரப்பேறு வேண்டி சேத்திராடனம் (தீர்த்த யாத்திரை) செய்து வருகையில் இத்தலத்திற்கு வருகை புரிந்தார்கள். இத்தலத்து எம்பெருமானிடம் தங்கள் குறையைத் தெரிவிக்க நம்பியும், 'நாமே உமக்குப் புத்திரராக வந்து அவதரிக்கிறோம்' என்று திருவாய் மலர்ந்து அருளினார். அதன்பிறகு தம்பதிகள் ஆழ்வார் திருநகர் சென்று மகப்பேறு பெற்றார்கள். வைகாசி மாதத்தில் பௌர்ணமி அன்று விசாக நட்சத்திரத்தில் அவர்களுக்கு ஒரு தெய்வீகக் குழந்தை அவதரித்தது. பிறந்தவுடன் அழுதல், பால் உண்ணல் முதலிய லோக விவகாரங்களில் ஈடுபடவில்லை. சோதிடரை அழைத்துக் குழந்தையின் நிலை பற்றிக் கேட்க அவரும், அது தெய்வீகக் குழந்தை என்று கூறி அதை எடுத்து "பொலிந்து நின்ற பிரான்" சந்நிதியில் விட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். அவர்கள் அக்குழந்தையை அத்திருக்கோயிலில் அதன்படி கொண்டு போய் விட்டார்கள். கோயிலைச் சேர்ந்ததும் பால் மணம் மாறாத அக்குழந்தை தவழ்ந்து அங்குள்ள ஸ்தல விருட்சமான புளியமரத்தின் பொந்து ஒன்றில் இருக்கை கொண்டது. இவரே சடகோபர் என்ற நம்மாழ்வார் ஆவார்.

இன்னும் ஆழ்வார் திருநகரில் உள்ள பொலிந்து நின்ற பிரான் சந்நிதியில் புளியமரம் உள்ளது. அது எல்லா மக்களாலும் வழி படப்படுகிறது.

நம்மாழ்வார் வடமொழி வேதங்களைத் தமிழ்மொழியில் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் பிரபந்தங்களாக அருளிச் செய்தார். ஆழ்வார்கள் பதின்மர்களுள் தலையாயவர் நம்மாழ்வார். இவருடைய பிரபந்தம் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. நம்மாழ்வார் திருக்குறுங்குடி நம்பியை திருவாய்மொழியில் முதல் பத்தில்

'நம்பியைத் தென் குறுங்குடி நின்ற அச்
செய்யபோவேதிக முந்திரு மூர்த்தியை
உம்பர் வானவ ராதியஞ் சோதியை
எம்பி ரானையென் சொல்லி மறப்பனோ'

என்று மங்களாசாசனம் செய்கிறார்.[5] இவருக்குக் குருகூர் நம்பி என்ற திருநாமமும் உண்டு. இவர் நம்பியை நாயக நாயகி பாவத்தில் பாவிக்கிறார். நாயக நாயகி பாவத்தில் திருவாய்மொழி ஐந்தாம் பத்தில் ஐந்தாவது திருவாய்மொழியாகப் பாடி ஈடுபடுகிறார்.

'எங்ஙனேயோ? வன்னைமீர்காள்: என்னை முனிவது நீர்
நங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்
சங்கிலோடும் நேமியோடுந் தாமரைக் கண்களொடும்
செங்கனிவா பொன்றிவோடுஞ் செய்கின்ற
தென்நெஞ்சமே'[6]

இவ்வாறாக இத்தலத்து எம்பெருமானைப் பாடியுள்ளார்.

நம்மாழ்வார் கூறியதையெல்லாம் பகவானே தம்முடைய பெருமைகளை எல்லாம் தன் வாயாலேயே கூறியதாகக் கூறுவார்கள்.

3.3.2 திருமங்கையாழ்வார்

ஆழ்வார்களில் இறுதியான ஆழ்வார் திருமங்கையாழ்வார். இவர் நம்பி எம்பெருமானைப் பற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார். இவர் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்தில் திருவாலி திருநகரி என்னும் ஊரில் மறக்குலத்தில் தோன்றிய ஒரு குறுநில மன்னர். இவர் தஞ்சை சக்கரவர்த்திக்குச் செலுத்தவேண்டிய வரிப்பணத்தை எல்லாம் ஸ்ரீ வைணவ பக்தர்களுக்கு அன்னம் இட்டும், வைணவத் திருத்தலங்களுக்குத் திருப்பணி செய்தும் செலவு செய்தார். இதைப் பார்த்த தஞ்சை மன்னர் இவருடன் போர் தொடுக்க வேண்டினன். அவருடைய ஞான பக்தியைக் கண்டு அவ்வாறு செய்யாது விட்டார். பின்பு மன்னர் பதவியிலிருந்து நீங்கி வழிப்பறிகள் செய்து தன்னுடைய புனிதச் செயல்களை நடத்தி வந்தார். ஒரு நாள் திருநறையூர் நம்பி எம்பெருமானும் அவரது பிராட்டியும் மன்னர் தம்பதிகளாக இவரைச் சோதிக்கத் திருவுள்ளம் கொண்டு நடுநிசியில் காட்டில் வரும்போது திருமங்கை மன்னர் இவரை வழிமறித்துக் கொண்டு ஆடை ஆபரணங்கள் அனைத்தையும் வழிப்பறி செய்தார். இன்னும் ஏதாவது உள்ளதா என்று சோதிக்கும் போது அரசியின் திருக்காலில் ஒரு தங்க மிஞ்சி மின்ன அது இவர் கண்ணில் ஞானப் பிரகாசத்தை ஏற்படுத்த அவரும் இதைக் கொண்டால் நல்லது என்று நினைக்க அது எடுக்க வராமல் தம்முடைய வாயினால் அவ்விரலில் உள்ள மிஞ்சியைக் கழற்றி எடுத்தார் திருமங்கையாழ்வார். இறைவன், இறைவி திருவருளால் இவருக்கு 'மயர்வற மதிநலம்' ஏற்படக் காரணம் ஆயிற்று. பறித்த ஆபரணங்களை மூட்டையாகக் கட்டித்தூக்க முடியாமல் சந்தேகிக்க இதற்கு என்ன மந்திரம் போட்டீர்

என்று அரசனிடம் வினவ அவர் திருமங்கை ஆழ்வாரை அழைத்து அவருடைய வலது செவியில் "முக்திக்கு வித்தாகி நின்ற திரு அஷ்டாக்ஷரத்தை" (திருமந்திரம்) உபதேசித்து மறைந்தார். ஞானம் ஏற்பட்ட ஆழ்வார் உடனே,

'வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் பெருந்துயர்
இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு அவர்தரும் கலவியே
கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால் உணர்வெனும்
பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் நாராயணா
எனும் நாமம்' [7]

என்று பாடினார். இப்பாடல் பாடியது முதல் இவருக்கு நாலுகவிப் பெருமாள் (சித்ரம், விஸ்தாரம், ஆசு, மதுரம்) ஆகிய கலைகளில் வல்லவர் என்று பெயர் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. [8]

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பிரபந்தங்கள் பெரிய திருமொழி, பெரிய திருமடல், சிறிய திருமடல், திருவெழுக்கூற்றிருக்கை, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் என்னும் ஆறு ஆகும்.

இவர் கால்நடையாகவே வைணவ தலங்களுக்குச் சென்று (சுமார் 80 தலங்கள்) பாடல்களைப் பாடியிருக்கிறார். திருவரங்கத்தில் பற்பல கைங்கரியங்களைச் செய்து தனக்கு வீடுபேறு வேண்டுமாறு அரங்கனிடம் வேண்ட அதற்கு அவரும் (நம்பி) "நம்முடைய தெற்கு வீட்டிற்குச் செல்லுக" என்றார். திருக்குறுங்குடிக்கு அருகில் தான் வைகுண்டம்

உள்ளது என்பதை

'குறுகைக்கு வைகுண்டம் கூப்பிடும் தூரம்'[9]

என்றும் கூறினார். அவரும் அதைக்கேட்டு இங்கு வந்து எம்பெருமானை வேண்டினார். எம்பெருமானும் திருவுள்ள முகந்து அவருக்கு வீடு அளித்தார். அவருடைய சமாதி இன்றும் கழனிகளுக்கு நடுவே ஊருக்குக் கிழக்கே அமைந்துள்ளது.

திருமங்கையாழ்வார் அரசனாக வந்த போது எம்பெருமானிடம் கொள்ளை அடித்த பொருளைக் கொண்டே திருக்குறுங்குடியில் உள்ள எம்பெருமான் கோயிலுக்குப் பெரிய திருமதிலும், கோயிலும் பற்பல கைங்கரியங்களும் செய்தார் என்று இவ்வூரில் செவிவழிக் கதையாகக் கூறுகிறார்கள்.

இறைவனைத் தாம் கண்டதாகத் திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

" பேரானைக் குறுங்குடியெம் பெருமானைத் திருத்தங்கால்
ஊரானைக் கரம்பனூர் உத்தமனை முத்திலங்கு
காரார்திண் கடலேழு மலையேழிவ் வுலகேழுண்டும்
ஆராதென் றிருந்தானைக் கண்டதுதென் அரங்கத்தே"[10]

3.3.3 இராமானுசர்

விசிட்டத்துவைத சித்தாந்தத்தைப் பிரபலப் படுத்தியவர் இராமானுசர். இராமானுசருக்கு உடையவர். எம்பெருமானார், பாஷ்யக்காரர் என்றும் பெயர்கள் உண்டு.

இவரது ஊர் ஸ்ரீ பெரும்புதூர். தலயாத்திரையாக இவ்வூருக்கு சுமார் 930 வருடங்களுக்கு முன்பு எழுந்தருளினார். நம்பி எம்பெருமானைத் தொழும்சமயம் எம்பெருமானும் "ராமகிருஷ்ண அவதாரங்களில் நாம் திருத்திப் பணிகொள்ள முடியாத விசயத்தை நீர்எப்படி திருத்திப் பணி கொண்டீர்?" என்று கேட்க அதற்கு இராமானுசர் "கேட்கும் அடைவில் கேட்டால் சொல்லும் சிரமத்தில் (முறையில்) சொல்லுவோம்" என்று கூறினார். அதுமுதல் ஆச்சாரிய சிசிய முறை ஏற்பட்டு இறைவன் இராமானுசரிடம் உபதேசம் கேட்க அவரும் துவயம் என்னும் மந்திரத்தை உபதேசித்து அருளினார். ஆகவே இத்தலத்து எம்பெருமான் நம்பி இராமானுசரிடம் மாணவனாக இருந்ததாக வைஷ்ணவ சம்பிரதாயம் கூறுகிறது. அதற்குச் சான்றாக இவ்வூரில் இராமானுசருடைய விக்ரம் உபதேச சிரமான ஞானமுத்திரைகையுடன் விளங்குகிறார். நம்பியின் நியமனத்தின்படி ஸ்ரீ ரங்கம் போலே இங்கும் ஸ்ரீ பண்டார, ஸ்ரீ காரிய நிர்வாகத்திற்கு ஒரு சீயர் நியமித்தருள வேண்டுமென்று திருவாய் மலர்ந்தபடி இராமானுசர் வேண்டி, அதன்படி பெரியநம்பி திருவம்சத்தில் உதித்த ஸ்ரீ பூர்னசாரியர் என்பவருக்குத் திருதண்ட காவியங்களை அளித்து அவருக்குப் பேரருளாளர் ராமானுசசீயர் என்ற திருநாமத்தையும் சாற்றி, மற்ற தலையாத்திரைக்காகப் புறப்பட்டார். அதன்படி இராமானுசரால் நியமிக்கப்பட்ட பேரருளாளர் இராமானுசர் சீயர் சுவாமிகள் ஸ்தானப் பரம்பரையாக நம்பி எம்பெருமானுக்குப் பற்பல கைங்கரியங்களும் செய்து வருகிறார்கள். இந்த ஆஸ்தானத்தில் இப்பொழுது எழுந்தருளியிருக்கும் கலியன் இராமானுசர் சீயர் சுவாமிகள் 48ஆவது பட்டம் ஆவார்கள். சீயர் சுவாமிகள் கோயில் திருவிழா நாட்களில் நம்பி எம்பெருமானுக்கு முன் செல்கிறார்கள்.

3.3.4 மணவாளமாமுனிகள்

13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இராமானுசரின் மறு அவதாரமாக ஸ்ரீமணவாள மாமுனிகள் அவதரித்தார். இவர் வைணவ சம்பிரதாயத்தில் ஓராள்வழி ஆச்சாரியார்களுள் இறுதியானவர். இவர் திருத்தல யாத்திரையாகத் திருக்குறுங்குடிக்கு எழுந்தருளினார். திருக்குறுங்குடியில் அழகிய நம்பியையும், திருமாலிருஞ் சோலை அழகரையும் மங்களாசாசனம் செய்துவிட்டுத் திருவேங்கடமுடையான் என்னும் ஒரு பிராமண உத்தமரைக் கைங்கரியத்திற்காகக் கிருபை செய்தார். இந்தத் திருவேங்கடமுடையார் என்பவரே திருக்குறுங்குடியில் உள்ள ஜீயர் சுவாமிகள் மடத்தில் 19 ஆவது பட்டம் மடாதிபதியாக ஸ்ரீ விஷ்ணுசித்தர் சீயர்சுவாமி என்ற திருநாமத்துடன் விளங்கியவர்.

திருக்குறுங்குடி 'பராங்குச பரகால எதிவரதிகளால்' (நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ராமானுசர், மணவாள மாமுனிகள் உகந்து போற்றப்பட்ட தலமாகும்.)

3.4 பக்கம் நின்ற சிவன் வரலாறு

பத்மாசுரன் என்னும் அசுரன் சிவனிடம் வரம் பெற்றவன். அவன் பெற்ற வரம் "தான் பிறரது தலையில் கை வைத்தால் அவர்கள் எரிந்து சாம்பலாக வேண்டும்" என்பது. இதைச் சோதிக்கச் சிவன் தலையிலியே கையை வைக்க முயன்றான். சிவனுக்கு வரம் கொடுக்க மட்டும்தான் முடியும். அதை எடுக்க முடியாது. எனவே பயந்து கொண்டு மகாவிஷ்ணுவிடம் பிரார்த்தித்தார். சிவனுடைய குறையைத் தான் தீர்த்து வைப்பதாக மகாவிஷ்ணு அபயம் அளித்தார்.

இந்தக் காரணத்தைக் கொண்டே இறைவன் இத்தலத்தில் சிவனை பக்கத்தில் வைத்துக் கொண்டு அருள்பாலித்து வருகிறார்.

திருக்குறுங்குடி சைவ, வைணவ ஒற்றுமை உள்ள இடம். பெருமாள் கோயிலில் நடப்பது போலவே சிவனுக்கும் ஆராதனைகள், அபிசேகங்கள் முதலியவை சேர்ந்தே நடக்கின்றன. இன்னும் அபிசேகம் ஒன்றாக நடைபெற்று வருவதைக் காணலாம். இங்கும் ஆருர்த்திரா தரிசனம், திருக்கல்யாணம், சிவராத்திரி முதலியவை நடைபெறுகின்றன.

குறிப்புகள்

1. பேட்டி. திரு. நாராயணன், திருக்குறுங்குடி.
2. திருவாய்மொழி பாடல். எண். 7. ப. 5
3. பேட்டி. திரு. துரைசாமி, குட்டுவன்குளம்.
4. பேட்டி. திரு. இராமானுசம், மேலதேவநெல்லூர்.
5. நம்மாழ்வார் திருவாய்மொழி பாடல் எண். 9., ப. 19.
6. நம்மாழ்வார் பாடல் எண். 1. ப. 79.
7. திருமங்கையாழ்வார் பாடல் எண். 1, ப. 2.
8. பேட்டி. திரு. நாராயணன், திருக்குறுங்குடி.
9. பேட்டி. திரு. நடராஜன், திருக்குறுங்குடி.
10. திருமங்கையாழ்வார் பாடல் எண். 2, ப. 73.

இயல் 4

கோயிலில் நடைபெறும் திருவிழாக்கள்

4.0 முன்னுரை

திருவிழா என்பது எல்லா மக்களும் தங்களிடம் உள்ள கருத்து வேற்றுமைகளைக் களைந்து ஒன்று கூடி நடத்தப்படும் ஒரு நிகழ்ச்சி ஆகும். திருவிழா நடத்துவதின் மூலமே மக்களின் உள்ளம் தூய்மை அடைகிறது. திருவிழாக் காலங்களிலேயே இறைவனுக்குச் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. தமிழ் இலக்கியங்களில் திருவிழா சிறப்பு,[1] சாறு [2] என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருக்குறுங்குடி நம்பி கோயிலில் பதினோரு நாட்கள் மிகச் சிறப்பான பூசைகள் நடத்தி, அங்குள்ள மூலவரின் திருவுருவங்களைப் பலவிதமான வாகனங்களில் எழுந்தருளச் செய்து, கோயில் மண்டபங்களிலும், வீதிகளிலும் நடத்தும் நிகழ்ச்சிகளை திருவிழாக்கள் என்று கூறுகிறார்கள்.

எந்தவொரு ஆலயம், எந்த ஆகமத்தையொட்டி அமைக்கப்பட்டு உள்ளதோ அந்த ஆகமத்தை அடிப்படையாகக் கொண்ட, நித்திய நைமித்திக காமியப் பூசைகளும், திருவிழாக்களும் நடத்த வேண்டும் என்பதே ஆகமவிதி. [3] நம்பி கோயில் வைகாசன ஆகமப்படியே திருவிழா நடைபெறுகிறது. திருவிழா எடுத்து இறைவனை வழிபட்டால் மக்களுக்குப் பல நன்மைகள் உண்டாகும் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுகிறது.

மக்களிடையே காணப்படும் ஒற்றுமை மட்டுமல்லாது, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை, பிறருக்குத் தீங்கு செய்யாமை, பொய் சொல்லாமை, கல்லாமை போன்ற உயர்ந்த பண்பாடுகள் வளர்வதற்கு நிலைக்களன்களாகத் திருவிழாக்கள் அமைகின்றன எனலாம்.

4. 1. 1. வசந்த உற்சவம்

வசந்த உற்சவ விழா சித்திரை மாதம் பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. பத்தாவது நாள் சித்ரா பௌர்ணமி தினமாகும். இந்த உற்சவத்தின் போது உற்சவர் ஒவ்வொரு நாளும் வெளியே புறப்பாடு கண்டு அருளி, பின்பு கிளிக்குரடு மண்டபத்தில் காற்று வாங்குவதற்காக எழுந்தருளுகின்றார். நறுமணப்பூக்கள் சந்தனம் முதலியவற்றை இறைவன் மீது சாத்துகின்றனர். நாள்தோறும் உற்சவத்தின் போது தயிர்ச்சாதம் நிவேதனம் செய்யப்பட்டு, வரும் சேவார்த்திகளுக்கு விநியோகிப்பது வழக்கம். இது இத்திருவிழா வசந்த காலத்தில் நடப்பதால் இதனை 'வசந்த உற்சவம்' என்றும் 'பருவ உற்சவம்' என்றும் 'திருவாதிரை உற்சவம்' என்றும் கூறுவர். திருவாதிரை நட்சத்திரத்தில் இராமானுசர் அழகிய நம்பிக்குக் குருவாக இருந்து திருமந்திர உபதேசம் செய்ததால் திருவாதிரை உற்சவம் என்றும் கூறுவர். உற்சவ நாட்களில் திருமஞ்சனம், அலங்கார ஆசனம், போச்சியாசனம், செய்யாசனம் முதலான காலச்சேபங்கள் நடைபெறும். மேலும் இந்நாட்களில் திருவாய்மொழி ஆயிரமும், இராமானுசர் நூற்றாந்தாதியும் சேவாகாலமாகும் (உபதேசமாகும்)

4. 1. 2. விசாக உற்சவம்

விசாக உற்சவ நட்சத்திரத்திற்குப் பத்து நாட்களுக்கு முன்பு திருக்குறுங்குடி அழகிய நம்பி காரிமகாராஜாவுக்கும், உடையநங்கைக்கும் நம்மாழ்வார் என்ற புத்திரனாகத் தோன்றினார். அவர் தாய்ப்பால் அருந்தாமல் பதினாறு வருடம் கண்ணன் நாமமே ஆகாரமாக யோகத்திலிருந்து திருக்குருகூரில் அவதரித்த மதுரகவியாழ்வாருக்குக் குருவாக வந்து நாலாயிர திவ்விய பிரபந்தத்தை உபதேசம் செய்தார். நவதிருநட்சத்திரம் குலகுருவாக இருந்து 108 திவ்விய தேசங்களில் மார்கழி மாதம் அத்தியயன உற்சவம் நடத்தினார்கள். பின்பு பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத்தையும் நாதமுனிகள் உபதேசம் செய்தார். அந்த விசாக உற்சவம் திருக்குறுங்குடியில் வைகாசி மாதம் நடைபெறுகிறது. இம்மாதத்தில் சேஷ்டாபிசேகம் உற்சவமும் நடக்கிறது. இத்திருவிழா அன்று உற்சவருடைய அங்கிகளைக் களைந்து துப்புரவு செய்து விக்கிரகத்தின் மீது அபிசேகம் செய்வதால் சேஷ்டாபிசேக உற்சவம் என்ற பெயரில் இவ்விழா நடத்தப்படுகிறது.

41.3. பெரியாழ்வார் உற்சவம்

ஆனி மாதம் ஜோதி நட்சத்திரத்தில் பெரியாழ்வார் உற்சவம் நடக்கிறது. இவ் உற்சவத்தின் போது பெரியாழ்வாருடைய பாசுரங்களை எம்பெருமான் முன்பு பாடுவார்கள். அதாவது, திருப்பல்லாண்டு பன்னிரண்டும், திருமொழி நானூற்று அறுபத்தொன்றும் சேவா காலமாகும்.

4.1.4. ஆண்டாள் உற்சவம்

ஆண்டாள் உற்சவம் ஆடி மாதம் திரு ஆடிப்பூர நட்சத்திரத்தில நடைபெறுகிறது. பூமி பிராட்டி ஸ்ரீ வில்லிபுத்தூர் பெரியாழ்வார் நந்தவனத்தில் திருத்துளாய் வேரில் பெண்பிள்ளையாய்ப் பிறந்து பெரியாழ்வாருக்குப் புத்திரியானாள். ஆண்டாள் அருளிய திருப்பாவை 30 பாசுரங்களையும், நாச்சியார் திருமொழி 143 பாசுரங்களையும் பாடி அடியார்களுக்குப் பிறப்பு, இறப்பு என்ற வியாதியை நீங்கும்படி பாடிய ஆண்டாள் உற்சவம் நடைபெறுகிறது.

4.1.5. திருநட்சத்திர உற்சவம்

ஸ்ரீ ஜெயந்தி கிருஷ்ண பட்ச அஷ்டமிதிதி ரோகிணி நட்சத்திரத்தில் கண்ணபிரான் அவதரித்தார். ஆவணி மாதத்தில் இந்த விழாவினைக் கொண்டாடுவார்கள். மேலும் சுக்லபச்சதுவ திசையிலிருந்து ஏழு தினங்கள் திருநஷத்திர உற்சவம் நடைபெறும். இதற்குப் பூர்வங்கமாகக் கோமங்கள் தேவபாராணயம், திவ்வியபிரபந்த பாராயணம் முதலியன நடைபெறும். மாலையில் திருவீதிப் புறப்பாடு செய்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்தில் எழுந்தருளுவார் எம்பெருமான். ஒவ்வொரு வருசமும் நித்திய நைமித்திக ஆராதனை உற்சவம் முதலியவைகளில் குறைபாடு இருந்தால் அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு பிராயச் சித்தமாக ஆவணி மாதத்தில் பவித்திர மாலை(நூல்) மந்திரங்களால் ஆவணம் செய்து பகவானுக்குப் பஞ்சவர்ணத்தில் அளிப்பது வழக்கம். இரவில் திருவாய்மொழிப் பாராயணம் நடைபெறும். இவ்வாறு திருபவித்திர உற்சவம் நடைபெறுகிறது.

4.1.6. கருட உற்சவம்

கருட உற்சவம் புரட்டாசி மாதம் நான்கு சனிக்கிழமையும் நடைபெறும். நம்பியை வழிபடுவதற்குச் சனிக்கிழமையே உகந்த நாள்.[4] கருட வாகனத்தில் எம்பிரான் அமர்ந்து நான்கு வீதிகளின் வழியாகவும் வருவார். இந்த உற்சவத்தின் போது சிறப்பான பூசைகள் நடைபெறும்.

4.1.7. ஊஞ்சல் உற்சவம்

ஐப்பசி மாதத்தில் ஊஞ்சல் உற்சவம் நடக்கிறது. இந்த மாதத்தில் திருவோணம் நட்சத்திரம் முடிவாக உள்ள பத்து நாட்களும் இந்த உற்சவம் நடக்கிறது. உற்சவ காலங்களில் ஊஞ்சல் சமர்ப்பிக்கப்பட்டு அதில் தாயாரையும் பெருமாளையும் எழுந்தருளச் செய்வர். அவர்களுக்கு விசேட ஆடை ஆபரணங்கள் அணிவித்து நல்ல நறுமலர்கள் அனுபவித்து விசேட ஆராதனைகள் நடைபெறுகின்றன. இவ்வேளையில் திருவாய்மொழி சேவாகாலமாகும். கோவிலில் உள்ள சந்நிதி பிரகாரங்களில் ஊஞ்சல் பாட்டு பாடுவார்கள். அதைத் தொடர்ந்து நாதஸ்வர வித்வான் ஊஞ்சல் பாட்டு வாசிக்கிறார். சேவார்த்திகளுக்குப் பிரசாதம் வழங்கி விழாவை முடிப்பார்கள்.

மூல நட்சத்திரத்தில் மனவாளமாமுனிகள் உற்சவம் நடைபெறுகிறது. இவ்வுற்சவத்தின் போது திருவோணம், அவிட்டம், சதயம் ஆகிய மூன்று நட்சத்திரத்தின் வரிசைக் கிரமப்படி முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி என்ற முறையில் சேவா காலமாகி உற்சவம் நடக்கிறது.

41.8. கைசீக உற்சவம்

கார்த்திகை மாதம் கைசீக ஏகாதசியன்று கைசீக உற்சவம் நடைபெறுகிறது. ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து அரையர் சுவாமி எழுந்தருளி கைசீகராகத்தில் இவ்வூர் பாசுரங்களை இசைத்தும் அனுபவித்தும் சேவிப்பது வழக்கமாக உள்ளது. பின்பு கைசீக புராணம் சொல்லுகிறார்.

திருக்குறுங்குடி ஜோதிபுரியை ஆண்டு கொண்டிருந்த சுகனவான் என்ற அரசனும், சோமசர்மா என்ற வேதியரும் சந்திரயாகம் ஒன்று நடத்தினார்கள். அதில் சில தவறுகள் ஏற்பட்ட காரணத்தால் இருவரும் தேவர்களால் சபிக்கப்பட்டார்கள். சாபத்தின் காரணமாக சுகலவான் என்கிற அரசன் திருக்குறுங்குடிக்கு அருகில் சுமார் 5 மைல் தொலைவில் உள்ள நரிப்பாறை கொம்பந்தன் என்கிற சேரியிலே நம்பி சாம்பானாய்ப் பிறந்தார். அந்த சோமசர்மா என்ற வேதியர் மகேந்திரகிரி மலைச்சாரல் பக்கம் ராட்சதனாய்ப் பிறந்தார். ராட்சதன் மிருகங்களையும், மனிதனையும் பிடித்துச் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். நம்பி சாம்பான் ஆகிய நம்பாடுவான் பன்னிரண்டு ஏகாதசி காலம் நம்பியை சேவிக்க பண்பாடி வருகிறான். அவ்வேளை அந்த ராட்சதன் மனிதனை ஆகாரத்திற்காக வழி மறிக்கிறான். அப்பொழுது நம்பாடுவான் "நான் இன்று ஏகாதசி விரதம் நம்பியைச் சேவித்து வருகிறேன் பின்பு என்னை நீ உட்கொள்ளலாம்" என்கிறான். அதன்படி அவன் சென்று விரதம் முடித்துப் பெருமானைச் சேவித்து அந்த ராட்சதனிடம் மீண்டும் வருகிறான். நம்பாடுவானைக் கண்டதும் ராட்சதன் ஞானம் பெற்றதைப் போன்ற உணர்வு கொண்டான். நம்பாடுவான் என்னை

உட்கொள்ளும் என்று ராட்சதனை வேண்டுகிறார். ஆனால் ராட்சதனோ உங்களால் நான் புண்ணியம் பெற்றேன் என்றும் உங்கள் உடலைச் சாப்பிடச் சம்மதம் இல்லை. ஏகாதசி பலனை மட்டும் தரும்படி வேண்டி நின்றான். இவ்வேளையில் அழகிய அந்தணர் ஒருவர் வந்து இருவருக்கும் மத்தியம் கூறினார்.

ஏகாதசி விரதம் மேற்கொண்டதனால் தானே உனக்கு (ராட்சதன்) இந்தப் பலன் கிடைத்தது. அதனாலே நீ சேவித்து 16 ஏகாதசியில் ஒவ்வொரு ஏகாதசியிலும் பதினாறில் ஒரு பங்கு சேர்ந்தால் ஒரு ஏகாதசி சேரும் என்று மத்தியம் பேசினார். அதன்மூலம் ஒரு ஏகாதசியைக் கொடுத்தார். அந்தப் புண்ணிய பலத்தால் தேவர்களின் சாபம் பெற்ற ராட்சதனும், நம்பி சாம்பான் என்ற இருவரும் தம்முடைய நிலை மாறி பழைய நிலையை அடைந்தனர். அதாவது நம்பி சாம்பான் அரசனாகவும், ராட்சதன் வேதியராகவும் பழைய நிலையைப் பெற்றனர். இந்த நேரத்தில் அந்தணர் எம்பெருமான் வேடம் கொண்டு கருட வாகனத்தில் சேவை செய்து இருவருக்கும் வைகுண்டபதவி கொடுத்தார். இந்த நிகழ்ச்சி கைசிகபுராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. இதைத் திருவிழா நிகழ்ச்சியாக ஒவ்வொரு வருடமும் சிறப்பான முறையில் கொண்டாடுகிறார்கள்.

419. தீப உற்சவம்

கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று தீப உற்சவ விழாவும் நடைபெறுகிறது. அன்று நாச்சியார்களை திருமடப் பள்ளிக்கு எழுந்தருளச் செய்து தீபம் ஏற்றி வழிபாடு நடத்தி விழாவினை தொடங்குகிறார்கள். அன்றைய தினம் தீப அலங்காரம் மிகச் சிறப்பாகக் காணப்படுகிறது.

சொக்கபனைக் கொளுத்தும் போது திருமடப்பள்ளியில் உள்ள தீபத்தில் தான் கொளுத்திக் கொள்ள வேண்டும். இதையும் ஒரு திருவிழாப் போன்றே நடத்துகிறார்கள்.

4.1.10. பகல் பத்து உற்சவம்

கார்த்திகை மாதம் அமாவாசை கழித்து மறுநாள் ஆரம்பமாகி வைகுண்ட ஏகாதசி முடிவாக உள்ள பத்து நாட்களும் பகலில் நடைபெறும் திருவிழா நிகழ்ச்சியாக இந்த உற்சவம் அமைகிறது. ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்விய பிரபந்தத்தை ஒவ்வொரு நாளும் ஒரு பிரபந்தமாக அனுசந்தித்து இரண்டாயிரம் பாடல்களைப் பூர்த்தி செய்வது திருவிழாவின் நோக்கம். இத்திருவிழா நடக்கும்போது அந்த அந்த திவ்விய பிரபந்தப் பாடல்களுக்குகேற்பப் பகவானுக்கு கிருஷ்ண, ராம, கஜேந்திர மோட்சம், ஆண்டாள், ரங்கமன்னார், மோகினி அவதாரம், நம்மாழ்வார் அவதாரம், வாமன திருவிக்கிரம அவதாரங்கள் முதலிய திருக்கோலங்கள் செய்கின்றனர். பகவானுக்கு சுதேசமான ஆராதனைகள் நிவேதனங்கள் செய்வது வழக்கமாக நடைபெறுகிறது. இவ்வுற்சவம் "ஆழ்வார்களின் அருளிச் செயல் வழக்குகளை" நன்கு போற்றும் பொருட்டு ஸ்ரீராமானுஜர் இவ்வுற்சவத்தை முதன் முதலாக ஸ்ரீ ரங்கத்தில் ஏற்படுத்தி அதன்படியாக எல்லா இடங்களிலும் (வைணவ தலங்களில் மட்டும்) நடைபெற்று வருகிறது என்கிறார் கோயில் அர்ச்சகர்.

4.1.11. இராப்பத்து உற்சவம்

இராப்பத்து உற்சவம் வைகுண்ட ஏகாதசி ஆரம்பமாக தொடர்ந்து பத்து நாட்கள் அதாவது பகல் பத்து உற்சவம் முடிந்த மறு நாளிலிருந்து நடைபெறுகிறது. இந்த

உற்சவத்தின் போது மாலை வேளையில் பகவான் சொர்க்கவாசல் வழியாகத் திருவாய்மொழி மண்டபத்திற்கு எழுந்தருளுகிறார். அவ்வேளையில் நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி 1000 பாடல்கள் இறைவன் சந்நிதி முன்பு ஓதப்படுகிறது. இதனால் இதனைத் 'திருவாய்மொழி உற்சவம்' என்றும் கூறுகிறார்கள். இவ்வுற்சவத்தை ஏற்படுத்தியவர் திருமங்கையாழ்வார். இவர் தாம் வாழ்ந்த காலத்தில் ஆழ்வார் திருநகரியில் உள்ள நம்மாழ்வாருடைய விக்கிரகத்தை ஸ்ரீ ரெங்கத்திற்கு எழுந்தருளச் செய்து ரங்கநாதன் திருமுன்பு தாம் ஆழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியை அரையர் மூலம் இசைத்தும் அபிநயத்தும் இவ்வுற்சவத்தை சிறப்பாக நடத்தி வைத்தார். இந்நிகழ்ச்சி திருக்குறுங்குடியில் முதல் நாள் நிகழ்ச்சியாக அமைகிறது மறுநாள் "வீடுவிடை" என்னும் திருவிழா நடக்கிறது. இதன் பொருள் பரமபதத்திற்குச் சென்ற ஆழ்வார் குளத்துக்கும் கைங்கரியத்திற்கும் இந்நில உலகத்திலேயே பூர்த்தியாக இருக்கிறது என்று நினைத்து இப்பூமிக்கே எழுந்தருளியாக வேண்டும் என்பார்கள் ஆழ்வார்கள். பகவானும் அவருடைய ஆசையை நிறைவேற்றி அவரே நில உலகத்திற்கு வந்தார் என்பது ஒரு மரபாக உள்ளது. இரவு நேரத்தில் அழகிய நம்பி சொர்க்க வாசல் வழியாக உள்ளே வருகின்ற போது ஏராளமான பக்தர்கள் கூடி நின்று சேவிக்கிறார்கள். பின்பு ஜீயர் சுவாமிகள் கோயில் பரிகாரம் அனைத்தையும் கூட இருந்தே கவனித்து வருகிறார். இது ஒரு வழக்காகவே உள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஒரு உற்சவமாகப் பத்து நாட்களும் நடத்துகிறார்கள். இராப்பத்து உற்சவம் சிறப்பான முறையில் நடைபெறுகிறது.

4.1.12. எண்ணைக்காப்பு உற்சவம்

மார்கழி மாதம் 23-ஆம் தேதி முதல் ஏழு நாட்களுக்கு எண்ணைய்க்காப்பு உற்சவம் நடைபெறுகிறது. இவ்வுற்சவத்தின் போது ஆண்டாள் கூறிய திருப்பாவை 30 பாசுரங்களும் தினமும் அதிகாலை 5.00 மணி முதல் 7.00 மணிக்குள் சேவிக்கிறார்கள். இவ்வேளையில் எம்பெருமான் மண்டபத்தில் விஸ்வரூபமாகியிருப்பார்.

4.1.13. திருப்பங்குனி உற்சவம்

திருக்குறுங்குடி ஸ்ரீ அழகிய நம்பி திருக்கோயிலில் நடைபெறும் திருவிழா நிகழ்ச்சிகள் திருப்பங்குனி உற்சவமே சிறப்பான உற்சவமாகும். இதைப் "பெரிய திருவிழா" என்றும் குறிப்பிடுவார்கள்.

இவ்வுற்சவம் பங்குனி உத்தரத்தன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இவ்விழாத் திருவோணம் முடிய உள்ள பதினோரு நாள்களாக நடைபெறும். திருவிழா நிகழ்ச்சியாக உள்ளது இவ்வுற்சவம். இவ்விழாவின் போது காலையிலும் மாலையிலும் வாகனத்தில் இறைவன் திருவீதிப் புறப்பாடு நடைபெறுகிறது. விழாவில் பிரபந்தமவேத பாராயணங்கள் நடைபெறுகின்றன. விழாவின் ஐந்தாவது நாளன்று திருக்குறுங்குடியில் உள்ள ஐந்து நம்பிகளும் ஐந்து கருட வாகனத்தில் திருவீதி பவனி வருகிறார்கள். இவ்விழாவே சிறப்புக்குரியதாகக் கருதப்படுகிறது. உற்சவத்தின் பத்தாவது நாளன்று திருத்தேரோட்டம் நடைபெறுகிறது. திருத்தேர் நான்கு வீதிகளிலும் பக்தர்களால் இழுத்துச் செல்லப்படுகிறது.

அச்சமயத்தில் 'கோவிந்தா', 'நாராயணா' என்ற சப்தம் வானைப் பிளக்கும் அளவிற்கு எல்லா மக்களும் சேர்ந்து ஒலிக்கிறார்கள்.

திருவிழா நாட்களுக்கு முன்பே இவ்வூரில் உள்ள மக்கள் தங்களுடைய உறவினர்களை அழைக்கிறார்கள். கோயில் நிர்வாகத்தினர் மூலம் பக்கத்திலுள்ள ஊர்களுக்கு விழாக்குறித்த அழைப்பிதழ் அனுப்பப்படுகிறது. அதை ஏற்று விழாவின்போது அனைத்து மக்களும் தங்களிடையே உள்ள வேறுபாடான எண்ணங்களை மறந்து ஒன்று சேர்ந்து விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள். பகவானது திருவிழாவைத் தங்களுடைய வீட்டுத் திருவிழாவாக எண்ணி சிறப்பான புதிய ஆடை அணிகலன்கள் அணிந்து கொண்டு குடும்பத்துடன் விழாவில் கலந்து கொள்கிறார்கள். விழா நாட்களில் அருகிலுள்ள ஊர் மக்கள் பாதயாத்திரையாக எம்பெருமானைத் தரிசிக்க வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். திருநெல்வேலி ஸ்ரீ கண்ணன் சேவா சங்கத்தின் மூலம் பாதயாத்திரை நடத்தி பாதயாத்திரை மலர் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்கள்.

4. 2. விழா நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு நாளும் நடைபெறும் திருவிழா நிகழ்ச்சிகளை விரிவாகக் காணலாம்.

4. 2. 1. முதல் நாள் உற்சவம்

திருவிழா நிகழ்ச்சிக்காகப் பெருமான் வீதிகளில் வருவதற்கு முன்பே காலபைரவர் சுவாமிகள் வீதிகளில் வலம்

வருகிறார். இதன் நோக்கம் வீதியிலுள்ள துஷ்டர்களை அகற்றுவதற்கும், சுவாமி வந்து செல்லும்போது பிற தாக்குதல் இல்லாமல்இருப்பதைப் பார்ப்பதற்கும் என்கிறார்.[5]

திருவிழாவின் முதல் நாளன்று காலையில் கொடி ஏற்றுவது வழக்கமாக உள்ளது. கொடி ஏறிய பின்பே திருவிழா நிகழ்ச்சிகளைத் துவங்க வேண்டுமாம். அன்று மாலையில் பிரம்பு நாற்காலியில் திருவீதி புறப்பாடு நடைபெறுகிறது. முதல் நிகழ்ச்சியாகத் திருவீதி புறப்பாடு உள்ளதால்அன்று வீடுதோறும் எம்பெருமானைச் சிறப்பாக வரவேற்று உபசரிப்பார்கள். ஒரு வருடத்திற்குப் பின்பு இந்நிகழ்ச்சி நடைபெறுவதால் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொள்கிறார்கள். மற்ற மாதங்களில் நடைபெறும் திருவிழா நிகழ்ச்சிகளுக்கு இந்தளவு முக்கியத்துவம் தருவதில்லை.

4. 2. 2.இரண்டாவது நாள் உற்சவம்

இரண்டாவது நாள் உற்சவத்தின் போது சுவாமி மண்டகப் படிகள் எழுந்தருளுவார். முதலாவதாக ஜீயர் சுவாமிகள் மண்டபத்திற்கு வருகை தருகிறார். அங்கு சிறப்பாகப் பூசைகள் நடத்தி எம்பெருமாளை அனைவரும் வணங்குகிறார்கள். பின்பு கோயிலிலுள்ள மற்ற மண்டகப்படிகளுககு எம்பெருமாள் எழுந்தருளுகிறார். இரவில் சிம்மவாகனத்தில் திருவீதி உலா புறப்படுகிறார்.

4.2.3 மூன்றாம் நாள் உற்சவம்

காலையில் எம்பெருமான் கோயிலுக்குள் புறப்பாடாகி வருவார். எம்பெருமான் இரவில் தங்க அனுமார் வாகனத்தில் திருவீதி புறப்பட்டு மக்களுக்கு காட்சி தருகிறார். இரண்டு பையதாரர்கள் மண்டகப்படிக்குச் செல்கிறார். இது கோயிலுக்கு வெளியில் உள்ள மண்டகப்படிகள் ஆகும்.

4.2.4 நான்காம் நாள் உற்சவம்

காலையில் சுவாமி கோயிலுக்குள் புறப்பாடாகி வருவார் இரவில் தங்க ஆதிசேசன் வாகனத்தில் சுவாமி திருவீதி புறப்பட்டு வருகிறார். அன்றைய தினம் டி. வி. எஸ். சாரிடிஸ் மண்டகப்படியில் எழுந்தருளுகிறார் சுவாமி அழகிய நம்பி.

4.2.5 ஐந்தாம் நாள் உற்சவம் அல்லது ஐந்து கருட சேவை

திருக்குறுங்குடியிலுள்ள நின்ற நம்பி, பள்ளி கொண்ட நம்பி, திருப்பாற்கடல் நம்பி, இருந்த நம்பி ஆகிய நம்பிகளின் உற்சவ விக்கிரகங்களுக்கு சிறப்பான ஆராதனைகள் நடைபெறுகின்றன.

இரவில் ஐந்து பெருமாளும் ஐந்து வாகனத்தில் வருவார்கள் (ஐவரும் கருட வாகனத்தில் வருவார்கள்) விழாவின் போது மேலவீதி யாதவர் தெருவில் ஐந்து பேரையும் மேற்கு முகமாக வைத்து கற்பூர ஆரத்தி செய்கிறார்கள் மகரிஷிகளுக்கும், தேவர்களுக்கும்,

அடியார்களுக்கும் அவர்கள் நினைத்த காரியங்களை இறைவன் நிறைவு செய்து தருவதாக கூறுகிறார்கள்.

இந்த உற்சவ நிகழ்ச்சியை இங்கு சிறப்பான முறையில் கொண்டாடுகிறார்கள். கருட சேவை அன்று அருகிலுள்ள ஊர் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு திரளாக வருகை புரிகிறார்கள். அன்றைய நிகழ்ச்சியே திருவிழாவிற்கு உரிய பெரிய கூட்டத்தை ஏற்படுத்துகிறது.

4.2.6 ஆறாவது நாள் உற்சவம்

ஆறாவது நாளன்று மாலையில் தண்டியல் (பல்லக்கு) வாகனத்தில் சுவாமியின் திருவீதி புறப்பாடு நடைபெறுகிறது. அன்று இரவு யானை வாகனத்தில் பெருமாள் வீதி உலா வருகிறார். அவ்வேளையில் மண்டகப்படி எழுந்தருளலும் நடைபெறுகிறது.

4.2.7 ஏழாவது நாள் உற்சவம்

ஏழாவது நாளன்று காலை, மாலை, இரவு என்று மூன்று நேரங்களிலும் திருவீதி புறப்பாடு நடைபெறுகிறது. மாலையில் இந்திர விமானம் என்ற மஞ்சள் சப்பரத்தில் சூரிய அஸ்தமன சமயம் திருவீதி புறப்பாடு நடைபெறுகிறது. அன்றைய தினம் மஞ்சள் தண்ணீர் தெளிப்பது வழக்கமாக உள்ளது. இறைவன் திருவீதி புறப்பாடாகி வரும்போது தேவதாசிகள் சோபனம், கும்மி, சிந்து முதலிய பாடல்கள் பாடிக் கொண்டு வீதிகளில் வருகிறார்கள். இந்த நிகழ்ச்சி பார்ப்பதற்கு இனிமை பயப்பதாகும். இரவில் எம்பெருமான் மலர்ப் பல்லக்கில் பவனி வருகிறார்.

4.2.8 எட்டாவது நாள் உற்சவம்

எட்டாவது நாள் காலையில் அழகிய நம்பி திருப்பாற்கடல் நம்பிராயர் சந்நிதிக்கு எழுந்தருளுகிறார். அங்குக் களக்காடு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் மண்டகப்படி நடைபெறுகிறது. அன்று பகல் முழுவதும் சுவாமி இங்கேயே தங்கிவிடுகிறார்.

அன்று இரவு குதிரை வாகனத்தில் கோயிலுக்கு எழுந்தருளுகிறார். திருவேடுபரி என்ற திருவிழா இரவு நடைபெறுகிறது.

திருமங்கையாழ்வார் கள்ளர் கோலத்தில் பகவானை வழிமறித்து ஆடைகளைக் கொள்ளை கொண்டு சென்று, அம்மூட்டையை எடுக்க முடியாமல் யார் மந்திரம் கொண்டு இம்மூட்டையை எடுக்கவிடாமல் செய்தீர் என்று பகவானிடம் கேட்க அதற்குப் பகவான் 'ஓம் நமோ நாராயண' என்னும் மந்திரத்தை உபதேசிக்கவே ஆழ்வாருக்கு ஞானம் பிறக்கிறது. இந்நிகழ்ச்சி திருமங்கையாழ்வாருடைய வாழ்நாட்களில் ஆழ்வார் திருநகரி என்னும் ஊரில் அரசமரத்தடியின் கிழ் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். அதன் ஞாபகார்த்தமாக அஷ்டோத்ர மந்திரத்தின் பெருமையினை விளக்கும் திருவிழாவாக இதனைக் கொண்டாடுகிறார்கள்.

4. 2. 9 ஒன்பதாவது நாள் உற்சவம்

காலையில் அழகிய நம்பி தங்கப் பல்லக்கில் திருவீதி புறப்பட்டு வருகிறார். திருவீதி புறப்பாடு முடிந்து திரும்பவும் கோயிலுக்கு எழுந்தருளுகிறார். அவ்வேளையில் கோயில்

கதவுகள் சாத்தப்பட்டு இருக்கும். பின்பு நாச்சியாருக்கும் பெருமாளுக்கும் வாக்கு வாதங்களை அரையர்கள் பாசுரங்கள் மூலம் இசைத்தும் அபிநயத்தும் செல்வார்கள். பின்பு சமாதானம் ஆகி அபிசேகம் ஆராதனைகள் நடைபெறுகின்றன. சந்திரப் பிரபேகை வாகனத்தில் திருத்தேர் கடாட்சமாகி திருவீதி நடைபெறுகிறது. அன்று இரவு பாதி நேரத்திற்குப் பின்பு திருத்தேர் அடியில் மாறன் கொடைவிழா வில்லுப்பாட்டு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

4.2.10 பத்தாவது நாள் உற்சவம்

பத்தாவது நாளன்று நல்ல வேளையில் தேரினை வடம் பிடித்து இழுத்துத் திருத்தேர்த்திருவிழா நிகழ்ச்சி நடத்துகிறார்கள். தேரோட்ட நிகழ்ச்சியே இந்த 'பெரிய திருவிழா' நாட்களில் முக்கியமானது. அன்று அனைத்து மக்களும் (வெளியூர், அருகிலுள்ளவர்கள்) திரளாகக் கூடியிருப்பார்கள். ஜீயர் சுவாமிகள் தலைமையில் பொது மக்கள் திருத்தேரை நான்கு வீதிகளின் வழியாகவும் இழுத்துச் செல்கிறார்கள். திருத்தேர் அழகிய கோலம் பூண்டிருக்கும். அதில் எம்பெருமான் சிறப்பாக அமர்ந்திருப்பார். தெருக்களிலுள்ள மண்டகப்படிதோறும் சிறப்பாகப் பூசை நடத்துகிறார்கள்.

4.2.11 பதினோராவது நாள் உற்சவம்

பதினோராவது நாளில் அதிகாலையில் சுவாமி திருத்தேரிலிருந்து நீங்கி வீதிகளில் புறப்பட்டு வருகிறார். அதன்பின்பு நம்பியாற்றுக்கு எழுந்தருளி தீர்த்தத்தில்

விக்கிரகத்தை முழுக்கிடச் செய்கிறார்கள். அந்த வேளையில் அனைத்து மக்களும் இங்கே கூடி இருப்பார்கள். இந்நிகழ்ச்சியில் பெருமாளுக்கு அணிவிக்கப்பட்டிருக்கிற காப்புக் கயிறுகளை கழற்றி ஆற்றுத் தண்ணீருடன் விட்டுவிடுகிறார்கள். திருவிழாவில் முதல் நாள் போடப்பட்ட முளைப்பாரியில் முளைத்த பயிர்களையும் ஆற்றுடன் விடுகிறார்கள். அன்று இரவில் சப்த பெருமாள் வெட்டிவேர் சப்பரத்தில் எல்லா வீதிகளிலும் எழுந்தருளுகிறார். அரையர்கள் வாழி மங்களம் இசைப்பார்கள். இறுதியாகச் சுவாமி, சீயர் சுவாமிகளுக்கு ராஜமரியாதைகளுடன் மடத்துக்கும் சென்று திரும்புகிறார்கள். அதன் பின்பு எம்பெருமான் தன்னுடைய இருப்பிடம் சென்று சேருகிறார். விழா நிகழ்ச்சிகள் இனிதே முடிவடைகின்றன. விழா முடிந்த பின்பு கோவிலில் ஏற்றப்பட்டிருந்த கொடி உடனடியாக இறக்கப்படுகிறது.

உத்திர நட்சத்திரன்று பெரிய நாச்சியார் பிறந்த தினமாகும். அன்று நாச்சியாருக்கு எண்ணெய்க்காப்பு செய்து பிரபந்தசேவா காலங்கள் நடத்துகிறார்கள். பின்பு பெருமாளுக்கும் தாயாருக்கும் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது.

'பெரிய திருவிழா' நிகழ்ச்சிகள் அனைத்தும் முடிந்த பின்பு பக்தர்கள் வெளியூர் புறப்பட்டுச் செல்வதற்காகப் பேருந்து வசதிகள் அதிகமாக உள்ளன. பெரிய மரங்களிலிருந்து அதிகாலையில் பறவைகள் பறந்து செல்வதைப் போல திருவிழா முடிந்த மறுநாள் அதிகாலையில் வெளியூர் மக்கள் பிரிந்து செல்கிறார்கள்.

குறிப்புகள்

1.திருக்குறள் வான்சிறப்பு - பா. 8

2. முடத்தாமக் கண்ணியர், பத்துப்பாட்டு - (பொருநராற்றுப்படை) அடி. 2

3. கே. ஆறுமுக நாவலர் - இந்து மத இணைப்பு விளக்கம் பக் 143-144.

4. திருக்குறுங்குடி திருமலை நம்பி கோயில் பாதயாத்திரை மலர் 1984 ப. 5

5. பேட்டி திரு. ராமானுஜம் - மேலதேவநல்லூர்.

இயல் 5

கோயிலில் நடைபெறும் வழிபாடுகள்

5.0 முன்னுரை

மனிதன் நம்பிக்கையின் அடிப்படையிலேயே தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான். நம்பிக்கையில்லாத மனிதனை நடைப்பிணம் என்று கருதுகிறார்கள். ஒவ்வொரு மனிதனும் தான் கொண்டுள்ள நம்பிக்கைக்கு இறைவனைத் துணைவனாகக் கொண்டு வாழ்கிறான். தான் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு செயலிலும் வெற்றி பெற வேண்டும் அதற்கு உற்ற துணைவனாக ஒருவன் வேண்டும் என்ற போது தான் அவன் மனிதனை நம்பாமல் இறைவனை நம்பி வழிபாடு நடத்துகிறான் வழிபாட்டை இரு நிலையில் பிரித்துக் கூறுவர். ஒன்று இல்ல வழிபாடு. மற்றொன்று ஆலய வழிபாடு எனப்படும்.

இல்ல வழிபாடு என்பது நாமே ஒரு விதியை ஏற்படுத்திக் கொண்டு அதன்படி நாள்தோறும் காலை, மாலை, ஆகிய இரு வேளைகளிலும் இல்லங்களில் நடத்துகின்ற பூசை முறைகளே ஆகும்.

ஆலய வழிபாடு என்பது ஆலயங்களில் உறைந்துள்ள இறைவனுடைய பெருமைக்கு ஏற்றாற் போல் சைவ, வைணவ ஆகமங்களின்படி நடத்துகின்ற பூசை முறைகளை ஆலய வழிபாடு எனக் கூறலாம். திருக்குறுங்குடி ஸ்ரீ அழகிய நம்பிராயர் திருக்கோயிலில் வைணவ ஆகமப்படியே வழிபாட்டு முறைகள் நடைபெறுகின்றன.

பூசை ஆத்மார்த்தம் எனவும் பரார்த்தம் எனவும் இருவகைப்படும். ஆத்மார்த்த பூசை என்றால் பூசிப்பவன் தனக்கும் தன் குடும்பத்திற்கும் நன்மை உண்டாவதன் பொருட்டுத் தன் வீட்டில் தன் சக்திக்கு இயன்றவாறு பூசிப்பதாகும். பரார்த்த பூசை என்பது ஆலயத்தில் இருக்கும் மூர்த்திகளுக்கு ஆகம முறைப்படி அர்ச்சகர்களைக் கொண்டு பூசை செய்வித்தல் ஆகும்.[1]

பரார்த்த பூசை நித்தியம், நிமித்திகம், காமிகம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்று ஆறுமுக நாவலர் கூறுகின்றார். நித்திய பூசை என்பது நாள்தோறும் செய்யப்படும் பூசையாகும். திருவிழா பிரதிட்டை முதலியன நைமித்திகம் பேற்றினை அவாவி செய்து காமிகம்.[2]

5.1 நம்பிகோயில் வழிபாடுகள்

நம்பி கோயிலில் நடைபெறும் வழிபாட்டு முறைகளை நாள்வழிபாடு, வாரவழிபாடு, மாத வழிபாடு என்ற மூன்று முறைகளில் கூறலாம்.

5. 1. 1. நாள் வழிபாடுகள்

நாள்தோறும் செய்யப்படும் பூசையே நித்திய பூசையாகும். ஒவ்வொரு வைணவக் கோயிலிலும் பொருளாதார வசதியைப் பொறுத்தே பூசை நடைபெறும் காலங்களை அமைக்கின்றனர். முற்காலத்தில் இக்கோயிலில் சிறப்பான முறையில் வழிபாடு நடந்திருக்கிறது. அப்பொழுது கோயிலுக்குரிய மானியத்திலிருந்து கிடைக்கும் வருவாயை அப்படியே கோயிலுக்குக் கொடுத்து விடுவார்கள். அதைக்

கொண்டு சிறப்பான பூசைக்கு ஏற்பாடு செய்வர். தற்காலத்தில் கோயில் மானியத்திலிருந்து வரக்கூடிய வருமானத்தைத் தனிப்பட்டவர்களே அனுபவிக்கிறார்கள். எனவே இப்பொழுது சிறப்பான முறையில் பூசை நடத்த முடியவில்லை. இருப்பினும் கோயிலுக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தைக் கொண்டு, தமிழ்நாடு அரசு இந்து அறநிலையத் துறையிலிருந்து கிடைக்கும் சிறிதளவு வருமானத்தைக் கொண்டுமே இங்கு வழிபாடு நடத்தகிறார்கள்.

5.11.1 ஸ்ரீ அழகிய நம்பிராயர் கோயிலில் நடைபெறும் வழிபாட்டு முறைகள்

இங்குள்ள வழிபாட்டு முறைகள் அனைத்தும் வைணவ ஆகமங்களின் படியே நடைபெறுகின்றன. ஆகமங்கள் அனைத்தின் அடிப்படைத் தத்துவம் ஒன்றே. மனிதன் தான் உடுப்பதும், உண்பதும், கேட்பதும், காண்பதும், களிப்பதும், ஆண்டவனின் அருளால் என்று கருதினான். எனவே அவையனைத்தையுமே கடவுளுக்குப் பின்னரே தான் கொண்டான்.[3] இதுவே அக்கால மக்களின் வாழ்வியல் அடிப்படைத் தத்துவமாகும்.

ஸ்ரீ அழகிய நம்பிராயர் கோயிலில் காலையில் விஸ்வரூபம், காலசந்தி, சம்பா என்ற மூன்று காலங்களிலும், மாலையில் சாயரட்சை பலி சாதித்தல், அர்த்தசாமம் ஆகிய மூன்று காலங்களிலும் வழிபாடு நடத்தி வருகிறார்கள். மார்கழி மாதம் திருப்பள்ளி எழுச்சி, பங்குனி பிரமோற்சவம் ஆகிய காலங்களில் சிறப்பான முறையில் வழிபாடுகள்

நடைபெறுகின்றன. இப்பகுதியில் வாழுகின்ற மக்கள் கோயிலில் நடைபெறும் ஒவ்வொரு வழிபாட்டிலும் விருப்பத்துடன் கலந்து கொள்கிறார்கள்.

5.1.1.2 விஸ்வரூபம்

கடவுள் தொடர்பான சமயச் சடங்குகளும் பண்டிகைகளும் அவர்களின் வாழ்வியலோடு ஒன்றியுள்ளன. ஸ்ரீ அழகிய நம்பிராயர் சுவாமி திருக்கோயிலில் காலையில் நடைபெறும் பூசைக்கு விஸ்வரூபம் என்று பெயர். காலை எட்டு மணிக்கு இப்பூசை தொடங்குகிறது. இப்பூசையின் போது கோயில் அர்ச்சகர் முதலில் கோயிலின் பெரிய நடைக்கதவைத் திறந்து, முன் மண்டபத்திலுள்ள ஜீயர் சுவாமிகளிடம் அனுமதி பெற்றுப்பின் திருக்கோயிலில் கதவுகளைத் திறந்து கொண்டு கருவறை செல்கிறார். கருவறையில் ஏற்கனவே மூடியிருக்கின்ற திரையை நீக்கிவிட்டு அங்கு எரிந்து கொண்டு இருக்கின்ற நந்தா விளக்கைக் காண்கிறார். எம்பெருமான் மேனியில் முதல் நாள் சார்த்தப்பட்டிருக்கும் மலர்களை எடுத்துவிட்டு திருமஞ்சனக் குடத்தை எடுத்துக் கொண்டு ஜீயர் சுவாமி மடத்திற்குச் செல்கிறார். அங்கிருந்து திருமஞ்சனம் ஒலி முழக்கத்துடன் எடுத்து வரப்படுகிறது அதைக் கொணர்ந்து எம்பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்கிறார்கள். பின்பு, அங்குள்ள துளசித் தீர்த்தக் கிண்ணத்தில் சிறிது பால், சர்க்கரைப் பொங்கல் முதலான நிவேதனங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார். அந்த வேளையில் ஜீயர் சுவாமிகள் இங்கு வருகை தருகிறார்கள். உடனே தீபாராதனையும், நைவேத்தியமும் நடைபெறுகின்றன. முதலில் ஜீயர் சுவாமிகளுக்கு முதல் சேவையும், பின்பு திவ்விய பிரபந்த

சேவையும் முடிந்தவுடன் ஜீயர் சுவாமிகளுக்கு மரியாதை செலுத்துகிறார்கள். சேவார்த்திகளாக வருபவர்களுக்கு நிவேதனம் தரப்படுகிறது.

5.1.1.3 காலசந்தி

காலசந்தி பூசை காலை 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள் நடைபெறுகிறது. முக்கிய தேவதைகளுக்குப் பூசை முடிந்ததும், சுற்று கோயில்களில் ஆராதனம் நடக்கிறது. இதற்கு நிவேதனமாக நான்குபடி அரிசியில் உணவு சமைத்து அதை வில்லைகளாகத் தட்டிச் சுற்றுக் கோயில்களுக்குப் பகிர்ந்து நிவேதனம் செய்கிறார். பூசை முறைகள் முடிந்த பின்பு நிவேதனமானவற்றை சிப்பந்திகளுக்கு வழக்கப்படி கொடுக்கிறார்கள்.

5.1.1.4 சம்பா

காலந்தி ஆனவுடன் பரிவார தேவதைகளாக உண்டான பலி பீடங்களுக்குப் பிரசாதமும் சுத்த அன்னமும் இறைவனது தீர்த்தமும் மந்திர பூர்வமாக தெளிக்கப்படுகின்றன. நித்திய உற்சவ புறப்பாடு முடிந்தவுடன் சம்பா திரு ஆராதனைகள் நடைபெறுகின்றன. இவ்வேளையில் இரண்டுபடி அரிசியைக் கொண்டு சுத்த அன்னம் சமைத்துக் கோன் வடிவத்தில் தளிகை செய்து நிவேதனம் வழங்குவது வழக்கமாக உள்ளது. இத்துடன் நெய், பருப்பு, தயிர் முதலியவற்றை ஜீயர் சுவாமிகள் ஆராதனைப் பெருமாளுக்கு நிவேதனம் செய்வதற்காகக் கொடுக்கிறார். இவற்றைக் கொண்டு இப்பூசை நடைபெறுகிறது. இப்பூசை முடிந்தவுடன் கோயில் திருக்காப்பிடப்படுகிறது.

5.11.5 சாயரட்சை

மாலையில் நடைபெறும் பூசைக்கு சாயரட்சை பூசை என்று பெயர். இப்பூசை மாலை ஆறு மணிக்கு நடைபெறுகிறது. இக்காலத்தில் இறைவனுக்கு முதலில் நைவேத்தியம் செய்து தீபாராதனை காட்டுகின்றனர். பூசைக்கு வரும் சேவார்த்திகளுக்குத் தீர்த்தம், துளசி, பிரசாதமும் கொடுக்கப்படுகிறது. இவ்வேளையில் தோசை, சம்பா சாதம் நிவேதனமாக உள்ளன.

5.11.6 பலிசாதித்தல்

பலி சாதித்தல் என்னும் பூசை இரவு 7.30 மணிக்கு மேல் 8.00 மணிக்குள் நடக்கிறது. அப்பொழுது நித்திய உற்சவ புறப்பாடு, பலி சாதித்தல் முதலியன நடைபெறுகின்றன. நிவேதனங்களை வெற்றிடங்களில் தெளிப்பது தான் பலிசாதித்தல் ஆகும்.

5.11.7 அர்த்த சாமம்

அர்த்த சாமம் என்னும் வழிபாடு இரவு 8.00 மணிக்கு மேல் 8.30 மணிக்குள் நடக்கிறது. இதில் நெய்யில் செய்த அப்பம், திருப்பணியாரம், பால், வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல் முதலியன நிவேதனமாகக் கொடுக்கப்படுகின்றன. இதற்குத் "திருவற்ற சாமம்" என்று பெயர். இது மருவியே "அர்த்த சாமம்" ஆகியிருக்க வேண்டும். லெட்சுமியுடன் இறைவன் துயில் கொள்ளச் செல்லும் வேளை இது. எனவே இதற்குத் "திரு உற்ற சாமம்" எனவும் பெயர் உண்டு. இதில் படைக்கப்பட்ட நிவேதனம் பிரசாதங்களை ஜீயர் சுவாமிகள்

கைங்கரிய சிப்பந்திகளுக்கு வழங்குவது மரபாக உள்ளது.

5.1.2 வார வழிபாடு

ஒவ்வொரு சனிக்கிழமையும் உற்சவ மூர்த்திக்குச் சிறப்புப்பூசைகள் செய்யப்படுகின்றன. இன்றைய தினம் துளசியை இறைவன் மீது போட்டுக் கொண்டே மந்திரம் ஓதுகிறார்கள். இதனை "மந்திர புஷ்பம்" அல்லது "துளசி அர்ச்சனை" என்பர்.[5] ஒவ்வொரு மாதமும் இறுதிச் சனிக்கிழமை தோறும் மலைமேல் நம்பிக்குச் சிறப்புப் பூசை செய்யப்படுகின்றது. மற்ற நாட்களைவிட சனிக்கிழமை மட்டுமே மலையில் மேல் உள்ள கோயிலுக்கு அனைவரும் செல்லுகின்றனர். அங்குச் சிறப்புப் பூசை நடத்துகின்றனர். மற்றும் நேர்த்திக்கடன் மேற்கொண்டவர்களும் வெளியூரிலிருந்து சனிக்கிழமை இங்கு வருகிறார்கள். பேருந்திலிருந்து இறங்கிச் சிறிது தூரம் மலைமேல் நடக்க வேண்டியிருக்கிறது. இக்கோயிலுக்கு அவ்வாறு நடந்து செல்வதை சிலர் மிகச் சிறப்பாகக் கருதுகிறார்கள். மக்கள் கூட்டம் கூட்டமாக நடந்து செல்கின்றனர். அப்படி வருகிறவர்கள் மதிய உணவையும் கையில் கொண்டு வருகிறார்கள். இவர்கள் நடந்தே கோயிலுக்குச் சென்று திருமலை நம்பியைச் சேவிக்கிறார்கள். தீபாராதனையின் போது முதலில் சாம்பிராணிப்புகை போட்டு, பின் பத்தி, சூடன் இவற்றால் தூப தீபம் காட்டி வணங்குகிறார்கள். கோயிலுக்கு வருப்வர்களில் பலர் வழிபாட்டிற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருகிறார்கள். இறைவனை வழிபட்டு முடித்ததும் தாங்கள் கொண்டு வந்த உணவை உண்ணுகிறார்கள். அப்பொழுது அனைவரும் மிகுந்த உற்சாகம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

திருமலை நம்பிக்குத் திருவிழா மற்றும் விசேட தினங்கள் தவிர ஒவ்வொரு மாதமும் இறுதிச் சனிக்கிழமை மட்டுமே தீபாராதனை செய்து வழிபாடு நடத்துகிறார்கள்.

5.1.3 மாத வழிபாடு

ஸ்ரீ அழகிய நம்பிக்கு நாள் வழிபாடு, வார வழிபாடு தவிர மாத வழிபாடும் நடைபெறுகின்றது. ஒவ்வொரு மாதமும் சில குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே இந்த விழா நடத்தப்படுகின்றது. அவ்வாறு ஒவ்வொரு மாதமும் நடைபெறும் சிறப்பு வழிபாட்டுத் தினங்களைப் பின்வருமாறு அமைத்துள்ளார்கள்.

வ. எண்	வழிபாடு நடைபெறும் மாதங்கள்	வழிபாடுகள்	வழிபாடு நடைபெறும் நாட்கள்
1.	சித்திரை	வசந்த உற்சவம்	10
2.	வைகாசி	விசாக உற்சவம்	1
3.	ஆனி	பெரியாழ்வார் உற்சவம்	1
4.	ஆடி	ஆண்டாள் உற்சவம்	1
5.	ஆவணி	திருப்பவித்திர உற்சவம்	1
6.	புரட்டாசி	கெருட உற்சவம்	4

7.	ஐப்பசி	ஊஞ்சல் உற்சவம்	10
8.	கார்த்திகை	கைசீக உற்சவம்	1
		பகல்பத்து உற்சவம்	10
		இராப்பத்து உற்சவம்	10
9.	மார்கழி	எண்ணைக்காப்பு உற்சவம்	7
10.	தை	தேர் முகூர்த்தம்	1
11.	மாசி	மகம்	1
12.	பங்குனி	பிரமோற்சவம்	11

5.1.3.1 வசந்த உற்சவம்

சித்திரை மாதம் மிகப் பெரிய அளவில் வசந்த உற்சவம் பத்து நாட்கள் நடைபெறுகின்றது. இவ்வுற்சவத்தின் போது உற்சவ மூர்த்தி ஒவ்வொரு நாளும் வெளியே புறப்பட்டுக் கிளிக்குரடு மண்டபத்திற்கு வருகிறார். இவ்விழா நடைபெறும் போது இறைவன் முன்பு திருவாய்மொழி ஆயிரமும், இராமானுசர் நூற்றந்தாதியும் பாராயணம் செய்து வழிபாடு நடத்துகிறார்கள்.

இராமானுசர் நூற்றந்தாதி கூறுவதற்கு காரணம் சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்தித்தன்று இறைவனுக்கு இராமானுசர் குருவாக இருந்து உபதேசம் கூறியதாகக் கூறுகிறார்கள். ஆகையால் சித்திரை மாதம் கோயில் திருவாய்மொழி ஆயிரமும், இராமானுசர் நூற்றந்தாதியும் கூறி

வழிபாடு நடத்துகிறார்கள்.

5.1.3.2 நம்மாழ்வார் அவதாரம்

வைகாசி மாதம் விசாக நட்கத்திரத்தில் காரி மகாராஜாவுக்கும், உடைய நங்கைக்கும் மகனாகத் தோன்றியவர் நம்மாழ்வார். இவர் மதுர கவியாழ்வாருக்குக் குருவாக வந்து உபதேசம் கூறினார். இதே நாளில்தான் ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத்தையும் நாதமுனிகள் உபதேசம் செய்தருளினாராம். விசாக நட்சத்திரத்தன்று இறைவனுக்கு சேஷ்டாபிசேகம் நடத்துகிறார்கள். அன்றைய தினம் முழுவதும் வழிபாட்டில் நம்மாழ்வார் பாடல்களையே பாடி வழிபாடு செய்கின்றனர்.

5.1.3.3 பெரியாழ்வார் பாசுரங்கள்

ஆனி மாதம் ஜோதி நட்சத்திரத்தன்று பெரியாழ்வார் உற்சவம் ஸ்ரீ அழகிய நம்பி கோயிலில் நடக்கிறது. அந்த நாளில் பெரியாழ்வாருடைய திருப்பல்லாண்டு பன்னிரண்டும், திருமொழி நானூற்று அறுபத்து ஒன்றும் கூறி வழிபாடு நடத்துகிறார்கள்.

5.1.3.4 ஆடிப்பூரம்

ஆடிப்பூர நட்சத்திரம் ஆண்டாள் அவதரித்த நட்சத்திரமாகும். அந்நாளை அனைத்து வைணவக் கோயில்களிலும் கொண்டாடுகிறார்கள். இந்த மாதம் ஆண்டாள் அம்மனுக்கும், கமலவள்ளித் தாயாருக்கும் சிறந்த மாதமாகக் கருதப்படுகிறது. அன்றைய தினம் ஆண்டாள்

பாடிய திருப்பாவை 30 பாசுரங்கள், நாச்சியார் திருமொழி 143 பாசுரங்களையும் பாடி இறைவனிடம் வழிபாடு நடத்துகின்றனர். இதனால் இவ்வழிபாட்டினை ஆண்டாள் வழிபாடு என்று கூறுவதும் உண்டு.

5.1.3.5 கண்ணன் வழிபாடு

ஆவணி மாதத்தில் ரோகிணி நட்சத்திரமும், அஷ்டமி திதியும் கூடிய நாள் கண்ணனுடைய அவதார நாளாகும். இந்நாளில் இறைவனுக்கு சிறப்பான முறையில் பூசை செய்கிறார்கள். பெரும்பாலும் யாதவர் இனத்தைச் சேர்ந்த மக்கள் சிறப்பாகக் இப்பூசையில் ஈடுபடுகின்றனர். கண்ணன் திருவீதிப் புறப்பாடு மாலையில் நடைபெறுகிறது. ஊர் மக்கள் அனைவரும் உற்சாகத்துடன் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர். இவ்விழா திருக்குறுங்குடியில் ஏழு தினங்களுக்கு நடக்கிறது. இவ்வேழு நாட்களிலும் தேவபாராயணம், திவ்விய பிரபந்த பாராயணம் முதலியன கூறி இறைவழிபாட்டில் மக்கள் கலந்து கொள்கின்றனர்.

5.1.3.6 புரட்டாசி சனிக்கிழமை வழிபாடு

புரட்டாசி மாதத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் இறை வழிபாட்டிற்கு உகந்த நாள் என்று கருதப்படுகிறது. இம்மாதத்தில் சனிக்கிழமைதோறும் இறைவன் திருவீதி புறப்பட்டு வருகிறார். அவர் வரும்போது எல்லா மக்களும் வழிபாடு செய்கின்றனர். சனிக்கிழமை தோறும் இறைவனுக்குச் சிறப்புப் பூசைகள் செய்து வழிபாடு செய்கின்றனர். நம்பியை வழிபடச் சிறந்த நாள் சனிக்கிழமைதான்.

5.1.3.7 ஐப்பசி மாத வழிபாடு

இறைவனுக்கும் இறைவிக்கும் ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகின்ற மாதம் ஐப்பசி மாதம். அன்று கோயிலிலுள்ள ஊஞ்சலில் பெருமாளையும் நாச்சியாரையும் புத்தாடைகளை அணிவித்து இருக்கச் செய்கிறார்கள் அப்பொழுது இறைவன் முன்பு ஏராளமான மக்கள் ஒன்று கூடி வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர். இவ்வேளையில் திருவாய்மொழி கூறி இறைவனை வழிபடுகின்றனர். திருக்கோயிலின் வெளிப்பிரகாரங்களிலெல்லாம் ஊஞ்சல் பாட்டே ஒலிக்கிறது. ஐப்பசி மாதத்திலேயே மணவாளமாமுனிகள் உற்சவமும் நடத்துகிறார்கள். இவருடைய உற்சவத்தைச் சிறப்பிக்கும் பொருட்டு முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி ஆகியன கூறி வழிபடுகின்றனர்.

5.1.3.8 கார்த்திகை மாத வழிபாடு

திருக்கார்த்திகையன்று திருக்குறுங்குடி கோயிலில் தீப வழிபாடு நடைபெறுகிறது. அன்று சிறுவர் முதல் பெரியவர் வரை சொக்கப்பனைக் கொளுத்தி தங்களது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்கள். கோயிலில் உள்ள தீப அலங்காரத்தைப் பார்ப்பதற்காக ஊர்மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி தீப வழிபாட்டில் கலந்து கொள்கிறார்கள். "தீப வழிபாடு எல்லா ஜாதியினராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. சைவர், வைணவர், புத்த ஜன மதத்தினர் எல்லாருமே இவ்வழிபாட்டை மேற்கொண்டு இருந்தனர்" [6]

கைசீக புராணம் பற்றிக் கார்த்திகை மாதம் சிறப்பாக உற்சவமே நடத்துகிறார்கள். கார்த்திகை மாதம் கைசீக

ஏகாதசி அன்று கைசீக உற்சவம் நடக்கிறது. இந்நாளில் ஸ்ரீ வில்லியுத்தூரிலிருந்து அரையர் சுவாமிகள் எழுந்தருளி கைசீக ராகத்தில் இவ்வூர் பாசுரங்களைக் இசைத்து இறைவனுடைய வழிபாட்டில் ஈடுபடுகின்றனர்.

கைசீக புராணத்தில் எம்பெருமானது சிறப்பியல்புகள் கூறப்பட்டிருக்கின்றன. நம்பி சாம்பான், அரக்கன் ஆகிய இருவரது கதைகளும் கைசீக புராணத்தில் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கின்றன. கைசீக புராணத்தின் மையக் கருத்தாகக் கூறிய வாக்கை நிறைவேற்றுதலும், ஏகாதசி பலனை வற்புறுத்துவதும் அமைகின்றன. இக்கருத்தைப் பின்பற்றி நடந்த நம்பி சாம்பான் தனது வாழ்க்கையில் இறைவனை நேரில் காணும் பேறு பெற்றான்.

நம்பி சாம்பானைப் போன்றே அனைவரும் தங்களுடைய வாழ்க்கையில் கூறிய வாக்கை நிறைவேற்றியும், ஏகாதசிப் பலனைப் பெற்றும் முடிவில் இறைப்பேறு பெற வேண்டும் என்ற காரணத்தினால் கைசீக புர்ாணம் அடிப்படையில் கார்த்திகை வழிபாட்டை இக்கோயிலில் நடத்துவதாகக் கூறுவர்.[7]

5.1.3.9 திவ்விய பிரபந்த வழிபாடு

மார்கழி மாதத்தில் "பகல் பத்து உற்சவம்" என்னும் விழாவை ஒரு பெரிய திருவிழாவாகத் திருக்குறுங்குடியில் கொண்டாடி வருகிறார்கள். இவ்விழாவின் போது ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்விய பிரபந்தங்களை இறைவன் முன்பு பாடுவதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு நாளும் ஒரு பிரபந்தமாகக் கூறி இரண்டாயிரம்

பாடல்களையும் பூர்த்தி செய்வதே இந்தத் திருவிழாவின் நோக்கமாக அமைகிறது.

5.1.3.9.1 திருவாய்மொழி வழிபாடு

பகல் பத்து உற்சவம் முடிந்த பின்பு 'இராப்பத்து உற்சவம்' நடத்துகிறார்கள். இவ்வுற்சவத்தின் போது மாலை நேரத்தில் இறைவன் திருவாய்மொழி மண்டபத்திற்கு எழுந்தருளுகிறார். அவ்வேளையில் இறைவன் முன்பு திருவாய்மொழி கூறி வழிபாடு நடத்தப்படுகிறது. நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியின் ஆயிரம் பாடல்களையும் இறைவன் முன்பு ஒவ்வொரு நாளும் நூறு பாடல்கள் விதம் பத்து நாட்களும் கூறுகிறார்கள்.

இவ்வாறு ஆழ்வார்கள் பாடல்கள் மூலம் நடைபெறும் வழிபாட்டில் பாடல்களை நன்கு கற்றவர்கள் இறைவன் முன் நின்று உபதேசம் செய்கிறார்கள். மற்ற பொதுமக்கள் அனைவரும் கூடி நின்று இறைவனை வழிபட்டுச் செல்கின்றனர்.

5.1.3.9.2 மார்கழி மாத வழிபாடு

மார்கழி மாதம் எண்ணெய்க் காப்பு உற்சவம் என்ற ஒரு உற்சவம் திருக்குறுங்குடியில் சிறப்பாக நடக்கிறது. இந்த விழா மார்கழி மாதத்தின் இறுதி ஏழு நாட்களும் நடத்தப்படுகிறது. அவ்வேளையில் ஒவ்வொரு நாளும் அதிகாலை 5.00 மணி முதல் 7.00 மணிக்குள் இறைவன் முன்பு ஆண்டாள் கூறிய திருப்பாவை 30 பாசுரங்களையும் கூறி வழிபாடு நடத்துகிறார்கள்.

5.1.3.10 தைப்பூசமும், மகமும்

ஒவ்வொரு மாதமும் நடைபெறும் வழிபாட்டின்படி தை மாதம் தைப்பூசம் நாளன்று இறைவனுக்குச் சிறப்புப் பூசை செய்து வழிபடுகிறார்கள். தைப்பூசத்திருநாள் அன்று மீனவர்கள் கடலுக்குப் பாடு நிமித்தம் போகும் வழக்கம் இல்லை. அத்திருநாள் கடவுள் வழிபாட்டிற்குரிய தினமாகும்.[8] மாசி மாதம் மக நட்சத்திரத்தன்று சுவாமிக்கு மாத வழிபாடு நடத்துகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் இறைவனைக் தரிசிப்பதாலும் மாத வழிபாட்டின் போது தரிசிப்பதாலும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதாவது, மற்ற நாட்களில் இறைவன் சாதாரண உடை அலங்காரத்தில் இருப்பார். மாத வழிபாட்டு நாட்களிலும் விசேட தினங்களிலும் இறைவனுக்குச் சிறப்பான புதிய ஆடைகளை அணிவித்துச் சிறப்புப் பூசைகள் நடத்துகிறார்கள். ஆகையால்தான் மற்ற நாள் வழிபாட்டிற்கு வரும் மக்களை விட மாத வழிபாட்டு நாட்களில் ஏராளமான மக்கள் வந்து கூடுகிறார்கள். மாத வழிபாட்டு நாட்களில் கோயிலே திருவிழாக் கோலம் பூண்டு காணப்படுகிறது. திருக்குறுங்குடியைப் பொறுத்தவரை அனைவரும் எல்லா நாட்களும் இறைவழிபாட்டில் ஈடுபடுகின்றனர். ஸ்ரீ அழகிய நம்பிராயர் கோயில் தினமும் திருவிழாக் கோலம் கொண்டதாகவே காணப்படுகிறது.

5.1.3.11 பங்குனித் திருவிழா

பங்குனித் திருவிழா எல்லாக் கோயில்களிலும் சிறப்பாக நடத்தப்படுகிறது. இவ்விழா விவசாயிகள்

இறைவனுக்கு நன்றி செலுத்துகின்ற முறையில் நடைபெறுகிறதாம். விவசாயிகள் தங்களுடைய பயிர்களை எல்லாம் அறுவடை செய்து முடித்த பின்பு இவ்விழா நடப்பதால் ஒவ்வொருவரும் புதிய மகிழ்ச்சியுடன் தங்களுடைய வீட்டில் நடைபெறும் திருவிழா போல உற்சாகத்துடன் ஈடுபடுகின்றனர். பங்குனி மாதம் உத்திரத்தன்று கொடியேற்றத்துடன் பங்குனித் திருவிழா தொடங்குகிறது. இவ்விழா பதினோரு நாட்கள் நடைபெறுகின்றது.

இந்தப் பதினோரு நாட்களில் பத்தாவது நாளன்று திருத்தேர் நான்கு வீதிகளிலும் ஓடுகிறது. அப்பொழுது வெளியூரில் இருந்தெல்லாம் ஏராளமான மக்கள் வந்து கூடி நின்று திருத்தேருக்குப் பின் செல்கின்றனர். அப்படிச் செல்லும் போது இறைவனுடைய திரு நாமமான 'கோவிந்தா' 'நாராயணா' என்று வானைப் பிளக்கும் அளவிற்கு உரக்கச் கூறிக் கொண்டே திருத்தேரைத் தொடர்ந்து கோயிலுக்குள் செல்கிறார்கள்.

5.2 வழிபாடுகள் குறையக் காரணங்கள்

இறைவனுக்குத் தொண்டு செய்வதற்கே தங்களுடைய வாழ் நாட்களை அர்ப்பணித்துக் கொண்டனர் சிலர். ஸ்ரீ நம்பிகோயிலை மையமாகக் கொண்டே திருக்குறுங்குடி என்ற ஊரே தோன்றியதாகக் கூறுகிறார்கள். அவ்வாறு தோன்றியதிலிருந்து உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் கோயிலுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தனராம்.[9] ஆரம்ப காலங்களில் பணத்தின் பெருமை அதிகளவில் தோன்றவில்லை போலும். ஊரிலுள்ள அனைவரும் கோயிலேயே வந்து உட்கார்ந்து கோயில்

திருப்பணியில் கவனம் செலுத்தினார்களாம். ஆனால் இன்று சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் ஊருக்கு அருகிலுள்ள நகருக்கும், வெளியூருக்கும் சென்று வேலை செய்வதில் ஈடுபடுகின்றனர். இதன்மூலம் பெறுகின்ற பணத்தைக் கொண்டு தங்களது குடும்பத்தைக் கவனிக்கிறார்கள். இந்நிலையில் உள்ள பலரும் கோயிலுக்கு நாள் தவறாமல் செல்வதில்லை.

வேலைக்குச் செல்லாத நாட்களிலும், மற்றும் கோயிலில் திருவிழாக்கள் நடைபெறுகின்ற நாட்களிலும் இவ்வூர் மக்கள் கோயிலுக்கு செல்கின்றனர். இதனால் பொதுவாக மக்களிடையே உள்ள இறை வழிபாட்டுத் தன்மை சிறிது குறைந்து வருகிறது.

ஸ்ரீ அழகிய நம்பி திருக்கோயிலுக்குச் கோதசேரி, ஆலங்குளம், ஊச்சிகுளம், கேசவநேரி, திருக்குறுங்குடி ஆகிய கிராமங்களில் மானிய நிலங்கள் இருக்கின்றன. முன்பு இந்நிலத்தின் மூலம் வந்த வருமானம் அனைத்தையும் கோயிலின் வழிபாட்டிற்கே செலவு செய்தனர். இன்று கோயில் தமிழக அரசின் இந்து அறநிலையத்துறையைச் சேர்ந்ததாக அமைந்துவிட்டது. இதனால் அறநிலையத் துறையின் சார்பில் வழங்குகின்ற மிகச் சிறிய தொகையைக் கொண்டே கோயிலில் அனைத்து வழிபாடுகளையும் நடத்த வேண்டியிருக்கிறது. வழிபாட்டிற்குப் பணம் போதாத காரணத்தினால் பெரியளவில் நடத்தப்படவேண்டிய வழிபாடுகளைக் கூடச் சிறியளவில்தான் நடத்துகின்றனர். இதன்மூலம் வழிபாடுகள் குறைந்து கொண்டே வருகின்றன.

கோயில் நிலங்களை உழுது வருபவர்கள் அந்நிலத்தின் மூலம் கிடைக்கும் வருவாயை அவர்களே எடுத்துக் கொள்கின்றனர். கோயிலுக்கு என்று சிறிதளவு பணம் கூடக் கொடுப்பதில்லையாம். இதனாலும் கோயிலில் நடைபெறுகின்ற வழிபாடுகள் குறைந்து கொண்டே வருகின்றன.

குறிப்புகள்

1. கே. ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், ப. 118
2. மேலது, ப. 121
3. இரா. நாகசாமி : மா. சந்திரமூர்த்தி, தமிழகக் கோயிற்கலைகள், ப. 33
4. ப. சங்கர நாராயணன், தமிழர் பண்டிகையும் பண்பாடும்
5. பேட்டி, இராமானுசர் (அர்ச்சகர்)
6. ப. சங்கரநாராயணன், தமிழர் பண்டிகையும் பண்பாடும், ப. 56
7. பேட்டி, சுந்தரராமாநுசம்.
8. 14வது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி - 3, ப . 324
9. பேட்டி, நடராசன்.

இயல் 6

கோயிலும் சமுதாயமும்

6.0 முன்னுரை

தொடக்க காலங்களிலிருந்தே கோயில்கள் மிகச் சிறந்த சமுதாய நிறுவனங்களாக விளங்கிவருகின்றன. கோயிலில் நடத்தப்படும் திருவிழாக்கள், வழிபாடுகள் போன்றன தனித்தனியாக வாழும் மக்களைச் சமுதாயத்தோடு இணைக்கும் ஒரு பாலமாக அமைந்துள்ளன. ஸ்ரீ அழகிய நம்பிராயர் திருக்கோயிலுடன் திருக்குறுங்குடியும் இவ்வூரைச் சுற்றியுள்ள சிற்றூர்களும் பல்வேறு வகைகளில் தொடர்பு கொண்டுள்ளன.

ஒரு நாட்டின் கலாச்சாரமும், பண்பாடும் அதில் வசிக்கும் ஆண்கள், பெண்கள், அவர்களைச் சுற்றி ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்கள் இவைகளைப் பொறுத்தே அமைவதாகும்.[1] திருக்குறுங்குடியும் அதைச் சுற்றியுள்ள சிற்றூர்களும் கோயிலை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன.

ஆலயப்பணி செய்தே தங்களுடைய வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்கின்ற எண்ணத்துடன் சிலர் இப்பணியை மேற்கொள்கின்றனர். தங்கள் வாழ்க்கைக்கு என ஆலயப்பணி செய்கின்றவர்களும் உண்டு. இவ்வகையில் தொடர்பில்லாத சிலர் தங்களின் ஆன்ம சாந்திக்காக ஆலயங்களோடு மிகுந்த தொடர்பு கொண்டு உள்ளனர்.

6.1 மக்கள் கோயிலோடு கொண்டுள்ள தொடர்பு

திருக்குறுங்குடியிலுள்ள பொதுமக்களில் சிலர் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் கோயிலில் நடைபெறும் வழிபாட்டில் கலந்து கொள்கிறார்கள். சிலர் வார வழிபாடு, மாத வழிபாடு, நடைபெறும் நாட்களிலும் இந்துக்களின் சிறப்பான நாட்களிலும் (மாதப்பிறப்பு) வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர். பங்குனி மாதம் நடைபெறும் திருவிழாவின் போது திருக்குறுங்குடியைச் சுற்றியுள்ள கிராம மக்கள் இங்கு வந்து கூடி, இறைவனுக்கு நடத்தப் பெறும் திருவிழாவில் பங்கு கொள்கின்றனர். முன்னோார் மரபுகளைப் பின்பற்றி திருவிழாவின் போது சிலர் மண்டகப்படி நடத்துகிறார்கள். பங்குனித் திருவிழா பதினோரு நாட்கள் நடத்தப்படுகின்றன. இந்நாட்களில் ஒன்பதாம் நாள், பத்தாம் நாள் திருவிழாவன்று திருத்தேர் ஓட்டம் நடக்கிறது. இத்திருவிழாவின்போது அருகிலுள்ள கிராம மக்கள் எல்லாரும் ஒன்று திரண்டு திருக்குறுங்குடியில் வந்து தங்குகிறார்கள். அவர்கள் வரும் போது தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் முதல் எல்லாவற்றையும் தங்களுடனே கொண்டு வருகிறார்கள், "இயற்கையாகிய அன்னை பல சக்திகளாகத் தோன்றி மனிதனை வாழ வைக்கிறாள். கதிரவனும், வெண்ணிலவும், நீரும், நிலமும், தீயும், காற்றும் இன்றேல் வாழ்வு இல்லை. சக்திகளை எப்பொழுதும் தனக்கு நல்வாழ்வு மலர வேண்டும் என்று மனிதன் வணங்குகிறான். இச்சக்திகளைப் பல்வேறு உருவங்களில் கண்டு, அவற்றிற்குக் கோயில் எழுப்பி நாள்தோறும் வழிபட்டான்".[2]

திருக்குறுங்குடியில் நம்பி எம்பெருமான் வந்து தங்கியிருப்பதாகவும் வைணவர்களுக்கு வழிகாட்டியாகவும், அனைவருக்கும் அருள் பாலிப்பவராகவும் விளங்குகிறார். நம்பி இங்கு தோன்றிய பின்பே ஊர் என்ற ஒரு அமைப்பே தோன்றியதாகக் கூறுவர். [3] இதனாலேயே இங்குள்ள ஒவ்வொருவரும் கோயிலுடன் பூர்வீகத் தொடர்புடையவர் களாகவே காணப்படுகின்றனர்.

6.2 பக்தி அடிப்படையில் கொண்டுள்ள தொடர்பு

வைணவர்களின் 108 திருத்தலங்களில் திருக்குறுங்குடி வைணவ நம்பி கோயிலும் சிறப்பிடம் பெறுகின்றது. இத்தலத்தை வைணவர்களின் 'தெற்குவீடு' என்றும் கூறுகிறார்கள். வைணவர்களில் சிலர் பெருமாள் கோயிலுக்கு மட்டுமே செல்கின்றனராம். வெளியூர் சென்றால் எதிர்பாராத நிலையில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் நெற்றியில் திருமண் காப்பு (திருநாமம்) அணிந்திருப் பவர்களின் வீட்டில் தான் தங்குவார்களாம். இவர்கள் வைணவ நம்பிக்கு நடைபெறும் எல்லா வழிபாட்டிலும் கலந்து கொள்கின்றனராம் "எங்களைப் பொறுத்தவரையில் வைணவ நம்பிதான் எங்களுக்கு உயிர்" என்று கூறுகிறார். [4]

பொதுமக்கள் தாங்கள் கொண்டுள்ள பக்தியினால் தான் இறைவனுக்கு நேர்த்திக்கடன் செய்கின்றனர். இறைவனுடைய அருளைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திலேயே நேர்த்திகடன் செய்கிறார்கள். திருவிழா நாட்களில் மண்டகப்படி நடத்துகிறவர்கள், தங்களிடம் பொருளாதாரம் குறைவாக இருந்தாலும், பிறருக்கு விட்டுக் கொடுக்காமல் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியினால்

தாங்களே மண்டகப்படியை நடத்தி வருகின்றனர். கோயிலில் வேலை செய்பவர்களில் சிலர் வசதியுள்ளவர்களாக இருந்தும் தங்களுடைய பக்தியினால் இங்கு தொடர்ந்து வேலை செய்கிறார்கள்.

6.3 தொழிலின் அடிப்படையில் கோயிலுடன் கொண்டுள்ள தொடர்பு

அர்ச்சகர்கள்	- 3
ஸ்தானிகர்கள்	- 2
திருமுடி விவாகம்	- 1
சுற்று விளக்கு	- 1
ஸ்ரீ காரியம்	- 1
ஸ்ரீ பண்டாரக் கணக்கு	- 1
மஞ்சன அறை	- 1
சம்பிருதி	- 1
திருப்பணகம்(மடப்பள்ளி)	- 3
திருமேனி காவல்	- 2
பக்கம் நின்றார் பூசை	- 1
பல வேளை	- 2
நாதஸ்வரம்	- 1
தவில்	- 1
காணியாச்சி	- 1
இரட்டச் சின்னம்	- 1
ஒத்து	- 1
கைமணி	- 1
இடுமெலி (தூற்பவர்)	- 1

தேவஸ்தான குறிப்பின்படி கோயிலில் தொழிலின் அடிப்படையில் மேற்கூறியவாறு உள்ள அனைவரும் கோயிலுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.[5] இவர்களைத் தவிர

அரையர்கள்
துறவிகள்
இராமாநுஜ ஜீயர் மடத்தைச் சேர்ந்தவர்கள்
தேவதாசிகள்
கோயில் இசை வல்லுநர்கள்

அர்ச்சகர்களும் பிற கோயில் பணியாளர்களும் ஆகியோரும் கோயிலுடன் தொழில் அடிப்படையில் தொடர்பு கொண்டு உள்ளனர்.

6.3.1 அரையர்கள்

அரையர்கள் இசையுடன் பாடவும் பாடல்களில் வரும் கருத்தைக் குறிப்பாக விளக்கவும் திறனுடையவர்கள். இவர்கள் பாட்டுப்பாடும் போது நடிக்கவும் செய்கிறார்கள். முதன்முதலில் நாதமுனிசுவாமிகள் திவ்விய பிரபந்தத்தை வகுத்துப் பாடல்களைக் கோயில்களில் ஓதுவதற்கு ஏற்பாடு செய்தார். அரையர்கள் தங்களது மக்களையும் இத்தொழிலில் ஈடுபடுத்தி வருகிறார்கள். பூசைக்குரிய மந்திர மாயம் வேதாந்தப் பொருளாகவும் உள்ள பிரபந்தத்துக்கு அரையர்களைப் பாடுவோராயும் ஆடுவோராயும் நாதமுனிகள் நியமித்தார்.

திருக்குறுங்குடி நம்பிராயன் சந்நிதியில் நெடுங்காலம் அரையர்கள் வாழ்ந்து வந்ததாகக் கூறுகிறார்கள். திருக்குறுங்குடியில் வாழ்ந்த அரையர்களைத் திருக்குறுங்குடி

அரையர்கள் என்று வழங்குவர். இப்போது அரையர்கள் திருகுறுங்குடியில் இல்லை. ஆனால், திருவிழாக்களின் போது அரையர்கள் சேவைக்காக ஆழ்வார்திருநகரி, ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆகிய ஊர்களில் இருந்து வருகிறார்கள். பிரமோற்சவம், கைசீக உற்சவம் முதலிய உற்சவ காலங்களில் அபிநயம், வியாக்கியானம் முதலானவைகளைச் செய்ய அவர்கள் திருக்குறுங்குடிக்கு வருகிறார்கள். பல ஆண்டுகளாக "அரையர்கள் விட்டுச் சென்ற தாளங்களை ஒழுங்கு சேர்த்து மணியாக அமைத்து இறைவனுக்கு அமுது செய்யும் நேரங்களில் இசைக்கிறார்கள்'' இங்கு அரையர்களின் தாளம் ஒன்று இங்கு வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. அழகிய நம்பி ஒரு அரிசனப் பெண்ணுக்கு முக்தி கொடுத்ததாக வரலாறு வழங்கப்படுகிறது. இவ்வரலாற்று நிகழ்ச்சியை அரையர்களின் சேவையின் போது "பாடும் பறைச்சிக்கி ஆரம் கொடுத்த பெருமான்" என்றும், வயல் தனிலே களை பறியில் வாழ்த்தும் ஒரு நீசை பெற வரங்கொடுத்த பெருமான் என்றும் இசைப்பது உண்டு. ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி ஆகிய மூன்று தலங்களில்தான் இப்போது அரையர்கள் உள்ளனர். உடையவர் என்னும் இராமாநுசரை அடுத்திருந்த பெரியோர்களில் அரையர்கள் இருந்திருப்பதால் அக்காலத்தில் பல கோயில்களில் அரையர்கள் இருந்தனர் எனத் தெரிகிறது.

6.3.2 துறவிகள்

இந்து மதம் ஆன்ம விடுதலை பெறுவதற்குத் துறவு நிலையை உயர்வாகப் போற்றியதனால் ஆதிகாலம் முதல் இந்தியாவில் துறவிகள் இருந்து வந்திருக்கின்றனர் எனலாம். துறவு நிலையிலுள்ளவர்கள் ஒரே இடத்தில் வாழாமல்

ஏதேனும் நிலையான தொழில் செய்யாமலும் இருந்தனர். கோயிலிலுள்ள மடங்கள் மற்ற மடங்களைப் போல் துறவிகள் நிலையாகத் தங்குமிடங்களாக இருக்கவில்லை. துறவிகள் யாத்திரை சமயத்தில் சில நாட்கள் தங்கிச் செல்லும் (கோயிலிலுள்ள மடங்கள்) இடங்களாகவே இருந்து வந்திருக்கின்றன.

பொதுவாக இந்து சமயத்தில் அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூன்று சாதியினர் மட்டுமே துறவிகளாக இருந்தனர் என்று கூறுவர். ஆனால், இன்று எல்லா மக்களும் துறவு மேற்கொள்கின்றனர். இவர்கள் முதலில் ஒன்று சேர்ந்து தங்காதிருந்த போதிலும் நாளடைவில் மடங்கள் அமைத்து வாழும் வழக்கத்தை அமைத்துக் கொண்டனர்.

வடநாட்டில் அரித்துவார், காசி ஆகிய இடங்களில் பெரிய மடங்கள் உள்ளன. ஒவ்வொரு மடத்திலும் துறவிகளுடைய சீடர்களாக சிலர் உள்ளனர். வைணவ சமயத்தைப் பரப்புவதற்காக இராமாநுசர் சில மடங்களை 12ஆம் நூற்றாண்டிலே நிறுவினார். இராமாநுசருக்குப் பின்பும் தோன்றிய மடங்களில் முக்கியமானவையாகத் திருக்குறுங்குடி அகோபில மடம், ஸ்ரீரங்க நாராயண சீடர் மடம், திருநாராயணபுரம் யதிராசன் மடம் என்பனவாம். இம்மடங்கள் எல்லாம் திரு ஜீயர் சுவாமிகள் மடம் நிரந்தரமாகத் தோன்றிய பின்பு பெயர் மங்கி விட்டன. இன்று மடங்களைப் பற்றிய செய்தியே கிடையாது. துறவிகள் இன்றும் இக்கோயிலுக்கு வந்து செல்கின்றனர். இப்பொழுது துறவிகள் யாரும் வந்தால் திரு ஜீயர் சுவாமி மடத்திலேயே தங்கிச் செல்கின்றனர். வைணவத் துறவிகள் பாதயாத்திரையாகச் செல்லும்போது திருக்குறுகுடிக்கு வந்து இறைவனைச்

சேவித்துச் செல்கின்றனர்.

6.3.3 திரு இராமானுச ஜீயர் மடம்

அழகிய நம்பிராயர் கோயிலின் பரம்பரை தர்மகர்த்தா திருக்குறுங்குடி திருமடம் மடாதிபதி ஸ்ரீ பேரருளாளரான ஸ்ரீ இராமானுஜ ஜீயர் சுவாமிகள் ஆவார்கள். இம்மடம் வைணவ ஆச்சாரியரான இராமானுஜரால் இன்றைக்கு 900 ஆண்டுகளுக்கு முன்பாகத் தோற்றுவித்ததாகக் கூறுகிறார்கள். இப்பொழுது உள்ள மடாதிபதி 48ஆவது பட்டம் கலியன் இராமானுஜ ஜீயர் சுவாமிகள் ஆவார்கள். ஜீயர் சுவாமிகள் பட்டம் ஏற்கும் முன்பு குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டு பின்பு சன்னியாச ஆசிரமம் ஏற்றுக் கொண்டார். துறவு நிலைக்கு முன்பு இவருக்கு வேங்கடாச்சாரியார் என்று பெயர் இருந்ததாம். வைணவ சன்னியாச முறைப்படி சடங்குகள் நடத்தி ஜீயர் சுவாமிகளுக்குப் பட்டம் கொடுத்திருக்கிறார்கள். இம்மடத்திற்குரிய சொத்துக்கள் முழுவதும் இவருடைய பராமரிப்பிலேயே இருந்து வருகின்றன. மேலும் சொத்துக்கள் வாங்கவும் விற்கவும் அவருக்கு உரிமை உண்டாம். இவருக்கு அடுத்த ஜீயரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு இப்பொழுது இருக்கும் ஜீயருக்கு உரிமையளிக்கப்பட்டுள்ளது. இம் மடத்தின் கிளைமடங்களாக ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற இடங்களில் உள்ளன.

திரு ஜீயர் சுவாமிகள் மடத்திற்குச் சொந்தமாக நன்செய் நிலங்கள் சுமார் 700 ஏக்கரும், புன்செய் நிலங்கள் சுமார் 4000 ஏக்கரும் உள்ளனவாம். இனாம் ஒழிப்புச் சட்டங்களினால் நிலங்கள் அழிக்கப்பட்டு

அந்நிலங்களிலிருந்து வருகின்ற வருமானத்திற்கு அரசு சட்டக் கொள்கையினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பெரும் பகுதி நிலப்பரப்புக்களை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. மீதியுள்ள நிலங்களும் குத்தகையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்பொழுது குத்தகையாளர்களும் குத்தகை செலுத்த மறுக்கின்றனர். இருப்பினும் நிலங்களின் மூலம் வருகின்ற வருமானத்தையெல்லாம் ஜீயர் சுவாமிகள் கோயிலுக்கே செலவு செய்கிறார். இப்பொழுது இருக்கும் ஜீயர் சுவாமிகளுக்கு முன்பிருந்தவர்கள் ஸ்ரீவைகுண்டம், மன்னார்கோயில், சேரன்மகாதேவி போன்ற இடங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்மடத்திலுள்ள ஜீயர் சுவாமிகள் ஐயங்கார் வம்சத்தைச் சேர்ந்தவராகவே இருக்கவேண்டுமாம். திருக்குறுங்குடி வைணவ நம்பி கோயிலைச் சுற்றி ஐயங்கார் இனத்தவரே நிறையவுள்ளனர்.

6.3.4 தேவதாசிகள்

இசையிலும் கூத்திலும் வல்லுநரான பெண்கள் பலர் கோயில் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். கல்வெட்டுக்களில் இவர்கள் தேவரடியார்கள் என்று குறிக்கப்பட்டுள்ளனர். கோயில்களில் திருவலகிடுவதும், மலர் தொடுத்தலும் தேவரடியார்கள் மேற்கொண்டிருந்த திருத்தொண்டுகளில் சில ஆகும். தேவரடியார்கள் கல்வி, கேள்விகளிலும் சிறந்து விளங்கினார்கள். தேவதாசிகள் எல்லாக் கோயில்களிலும் சேவை செய்து வந்தனர் என்று தெரிகிறது.

இத்தலத்தில் தேவதாசிகள் பெரும்பாலும் கோயில்களில் சில கைங்கரியங்களுக்காக நியமிக்கப்பட்டு

வந்து இருக்கிறார்கள். குடதீபத்தை எடுத்துக்கொண்டு வருதல் கோயில்களில் நர்த்தனம் செய்தல், ஊஞ்சல் முதலிய உற்சவ காலங்களில் ஊஞ்சல் பாட்டுப்பாடுதல், படியேற்றம், கீதம் இசைத்தல் தேவதாசிகளுடைய கடமைகளாகும். இத்தலத்திற்குப் பரம்பரை பரம்பரையாகத் தேவதாசிகள் கைசிக நாடகத்திற்கு "நம்பாடுவான்" வேடம் தாங்கியும், நம்பி கிழவன் வேடம் தாங்கியும் நாடகம் நடத்துகிறார்கள். இந்நாடகம் கார்த்திகை மாதம் சுக்கிலபச்சம் ஏகாதசி அன்று நடக்கிறது. அரசின் தேவதாசிகள் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் இங்கிருந்த தேவதாசிகள் நீக்கப்பட்டனர். பின்பு இவ்வூரில் இந்நாடகம் வேடம் தாங்கி நடிப்பதற்கு இத்தேவதாசிகள்தான் சிறப்புடையவர்கள் என்பதனால் அதற்கு அரசின் அனுமதி பெற்று நடத்தி வருகிறார்கள். தேவதாசிகள் திருக்குறுங்குடியிலேயே குடியிருந்து குடும்பப் பெண்களாக வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அவர்கள் இசை வேளாளர் மரபைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

6.3.5 கோயில் இசை வல்லுநர்கள்

கோயிலில் நாதஸ்வரம், தவில், தடமானம், நகரா, பேரிகை, ஜெயகண்டி, முகவீணை, புல்லாங்குழல், ஒத்து, தாளம், மிருதங்கம், கிண்ணம், சங்கு முதலிய இசைக் கருவிகள் உள்ளன. இக்கருவிகள் திருவிழாக்காலங்களில் இசைக்கப்படுவது உண்டு. இசை கருவிகளை இசைப்பதற்குத் தனித்தனியாகப் பணியுரிபவர்கள் உள்ளார்கள். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஆறு மூடை தானியமாகவும், சிறிய அளவிலான சம்பளமும் கொடுக்கப்படுகின்றன. அத்துடன் நிவேதன பிரசாதமும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இவர்கள் கம்பர்கள் பிரிவைச் சார்ந்தவர்கள். கோயில் இசை

வல்லுநர்கள் திருக்குறுங்குடியிலேயே தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

6.3.6 அர்ச்சகர்களும் பிற கோயில் பணியாளர்களும்

இக்கோயில் வைகாசன ஆகமத்தின்படி அமைந்துள்ளது. இங்கு பூசை செய்பவர்களுக்கு வைகாசன அர்ச்சகர்கள் என்று பெயர். இறைவனின் திருமேனி முன்பு நடத்தப்படும் அனைத்துக் கைங்கரியங்களையும் இந்த அர்ச்சகர்கள் தான் செய்கிறார்கள். இத்தலத்தில் வைகாசன ஆகமத்திலுள்ள அர்ச்சகருடைய பரம்பரை வாரிசுகள்தான் தொழில் நடத்தி வருகிறார்கள். அர்ச்சகர்களுக்குக் கோயிலிருந்து மாதம் நபர் ஒன்றுக்கு ஒரு மூடை நெல்லும், ஐம்பது ரூபாய் சம்பளமும் கொடுக்கிறார்கள். சிறப்பு ஆராதனை மற்றும் காணிக்கைகள் மூலம் மாதம் ஒருவருக்கு ரூ. 200 வரை கிடைக்கிறது. அர்ச்சகர்களுக்கு உதவி செய்வதற்காகப் பரிச்சாரர்கள் மூன்று பேர் இருக்கிறார்கள். இவர்கள் பூசைக்குரிய பாத்திரங்களைச் சுத்தம் செய்தல், பூசைக்குரிய சாமான்களைச் சேகரித்தல் கருவறைகளில் மற்ற குற்றேவல் வேலைகளைச் செய்தல் இவர்களுடைய வேலையாக உள்ளது. இவர்களுக்கு கோயிலின் மூலம் மாதம் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ஒரு மூடை நெல்லும் சம்பளமாக ரூபாய் 50/- ம் கொடுக்கப்படுகிறது.

திருப்பனாக பரிசாரர்கள் ஐந்து பேர்கள் உள்ளனர். இவர்கள் யாக சாலையில் நிவேதனங்களைச் செய்து அவைகளை எடுத்துக் கொண்டு போய் ஆராதனத்திற்குக் கொடுக்கிறார்கள். கோயிலிருந்து இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூபாய் 100/- கொடுக்கிறார்கள்.

சந்நிதியில் திருவிளக்கு, பார்த்தல், இறைவனுக்கு ஏற்பட்ட பரிவட்டங்களைக் கவனித்துச் சுத்தம் செய்து வைப்பதற்குத் தனி பரிசாரர்கள் உள்ளனர்.

கோயிலுக்குச் சொந்தமான நகைகளைக் கருவூலத்தில் வைத்துப் பத்திரப்படுத்தித் தேவையான சமயங்களில் எடுத்துக் கொடுத்து திரும்பி வாங்கி வைத்தல் போன்ற வேலைகளைச் செய்யக் கருவூலக்காரர்கள் உள்ளனர். இவர்கள் எல்லோரும் அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

கோயில்களைத் திறந்து, திருக்காப்பிட்டுப் பாதுகாத்தல் போன்ற வேலைகளைத் திருமேனி காவல்காரரும் , கைவிளக்குப் பிடித்தல், குறிப்பிட்ட இடங்களில் திருவிளக்கு இடுதல், திருமுன் பந்தம் பிடித்தல் மற்றும் கோயில் சம்பந்தப்பட்ட குற்றேவல் செய்ய நான்கு பேர்கள் உள்ளனர். இவர்கள் இத்தலத்தைச் சேர்ந்த மலைக்கோயிலில் வேலை பார்க்கிறார்கள். இக்குழுவில் மறவர், வேளாளர் போன்ற வகுப்பைச் சேர்ந்தவர்களே உள்ளனர். கோயிலில் இருந்து இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 100 வீதம் கொடுக்கிறார்கள். கோயிலில் நடைபெறும் பணிகள் அனைத்தையும் செய்யும் பணியாளர்களை நியமிக்கும் அதிகாரம் திரு ஜீயர் சுவாமிகளுக்கே உள்ளதாம்.

6.4 ஊர் அடிப்படையில் கொண்டுள்ள தொடர்பு

ஊர் அடிப்படையில் ஏராளமான மக்கள் சுற்றுக் கிராமங்களிலிருந்து நம்பி கோயிலுடன் தொடர்பு

கொண்டுள்ளனர். கிராமத்தில் சிலர் திருவிழாக் காலங்களில் மண்டகப்படி நடத்துகிறார்கள். திருவிழாக் காலங்களிலும், மற்ற விழாக் காலங்களிலும் உள்ள சில பொறுப்புக்களைச் சுற்றுக் கிராம மக்கள் ஏற்கின்றனர்.

கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் கீழ்க்கண்ட கிராமங்களில் உள்ளன.

திருக்குறுங்குடி, ஆலங்குளம், ஊச்சகுளம், கேசவநேரி மற்றும் கோதைசேரியைச் சுற்றியுள்ள ஏழு கிராமங்கள் ஆகிய ஊர்களிலிருந்து சில வருடங்களுக்கு முன்பு வருடத்திற்கு நான்கு ஆயிரம் மூடை நெல்லும் இதர தானியங்களும் இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அளவிற்குக் கிடைத்தனவாம்.[6] அண்மைக் காலங்களில் இவ்வூர்களிலிருந்து எவ்விதமான வருமானமும் கோயிலுக்குக் கிடைப்பதில்லை. குத்தகை எடுத்தவர்கள் நிலங்களில் மூலம் வரும் வருவாயை அனுபவித்து வருகிறார்கள்.

6.5 திருக்குறுங்குடியில் வாழும் மக்கள்

திருக்குறுங்குடியிலுள்ள பெரும்பாலான மக்கள் விவசாயத் தொழிலை நடத்தி வருகிறார்கள். இவ்வூரைச் சுற்றி வயல்வெளிகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. இங்கு விவசாயத்தொழில் சிறப்பாக நடைபெறுவதற்கு வசதியாக நம்பியாறு என்ற ஜீவநதி வற்றாது ஓடி வருகின்றது. அந்தணர், வேளாளர், மறவர், யாதவர், நாடார், ஆசாரியர் முதலான பல இனத்தவர்கள் இவ்வூரில் வசிக்கின்றனர். கோயிலைச் சார்ந்துள்ள நிலங்களை ஊர்மக்கள் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்கின்றனர்.

அந்தணர்கள், வைணவர்கள் முதலியோர் கோயிலில் ஊழியம் செய்து வருகிறார்கள். விழாக் காலங்களிலும் மற்ற முக்கிய தினங்களிலும் எல்லோரும் கலந்து கொள்கிறார்கள். தேர்த் திருவிழாவன்று பொதுமக்கள் அனைவரும் சுற்றியுள்ள ஊர்மக்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்கிறார்கள். இந்துக்களைத் தவிர ஏனைய மதத்தவர்களைக் கோயிலின் உள்ளே அனுமதிப்பது இல்லை.[7] உற்சவ காலங்களில் வீதிகளில் உற்சவ விக்கிரகம் புறப்பாட்டிற்காக எடுத்துச் செல்லும்போது எல்லா இனத்தவரும் கலந்து கொள்கிறார்கள். இந்த வகையில் திருக்குறுங்குடியில் வாழும் மக்கள் கோயிலுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு உள்ளனர்.

6.6 சமுதாய அமைப்பில் திருக்குறுங்குடி பெறும் இடம்

வைணவ அடியார்கள் வாழ்க்கையில் திருக்குறுங்குடி நம்பி கோயில் நீங்காத இடம் பெற்று விளங்குகிறது. வைணவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் பெருமானை வணங்குதலையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். வைணவர் போற்றும் 108 திருத்தலங்களில் ஸ்ரீரங்கம் வைணவர்களுக்கு வடக்குவீடு என்றும், திருக்குறுங்குடி 'தெற்குவீடு' என்றும் கருதுகிறார்கள். இதனால் வைணவ வகுப்பைச் சேர்ந்த அனைவரும் இங்குள்ள எம்பெருமானைத் தரிசித்துச் செல்கின்றனர்.

வைணவர்கள் என்று மட்டும் அல்லாமல் சமுதாயத்திலுள்ள எல்லா இனத்து மக்களும் இக்கோயிலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு உள்ளனர். திருக்குறுங்குடி சிறிய ஊராக இருந்தாலும் இங்கு கல்வி

நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் உள்ளன. இந்நிறுவனங்களில் வேலை செய்பவர்களில் வெளியூர் மக்கள் இங்கேயே தங்கி வாழ்க்கை நடத்துகிறார்கள்.

திருக்குறுங்குடி செல்ல திருநெல்வேலி, வள்ளியூர், சேரன்மகாதேவி போன்ற ஊர்களிலிருந்து போக்குவரத்து வசதிகள் உள்ளன. இதனால் வெளியூரிலிருந்து வருபவர்கள் விரைவில் வந்து செல்வதற்கு வசதியாக இவ்வூர் உள்ளது.. திருக்குறுங்குடி நம்பி கோயிலில் பெருமாளுடன் சிவனும் உள்ளதாலும் இக்கோயிலுக்கு சைவ, வைணவ வேறுபாடின்றி எல்லோரும் வருவதாலும் ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். இக்கோயிலுக்குச் சைவ வைணவர்கள் வேறுபாடின்றி வருவதால் இக்கோயில் சமுதாயத்தை இணைக்கும் பாலமாக அமைந்துள்ளது. திருவிழாக் காலங்களில் பல சாதியினர் சேர்ந்து மண்டகப்படி நடத்துவதால் சமுதாய அமைப்பில் ஒற்றுமை வளர வாய்ப்பு ஏற்படுகிறது.

குறிப்புகள்

1. ப. சங்கரநாராயணன், தமிழர் பண்டிகையும், பண்பாடும், ப. (5)

2. இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி, தமிழகக் கோயிற்கலைகள், ப. 22

3. பேட்டி - மணி - திருக்குறுங்குடி.

4. பேட்டி - சுந்தரராமாநுசம் - மேலதேவநல்லூர்.

5. பேட்டி - மணி மேலாளர் - திருக்குறுங்குடி.

6. பேட்டி - கோபால் இராமாநுசம் - மேலதேவநல்லூர்.

7. பேட்டி - மணிமேலாளர் - திருக்குறுங்குடி.

இயல் 7

ஆய்வு முடிவுகள்

இவ்வாய்வில் அமைந்துள்ள ஐந்து இயல்களின் வாயிலாகக் கண்ட சில முடிவுகள் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

திருமங்கையாழ்வார் இத்தலத்திலேயே தங்கி இருந்து, ஒரு குழு அமைத்து அக்குழுவில் அவரே முதன்மையாளராக இருந்து கோயிலுக்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்திருக்கிறார். இப்பணியினால் கோயில் நிலையான பாதுகாப்புப் பெற்றது என்று கூறலாம்.

திருக்குறுங்குடி நம்பிகோயில் சைவ வைணவர்களிக்கிடையே ஒற்றுமையை வளர்க்கும் சமுதாய நிலையமாக அமைந்துள்ளது. திருக்குறுங்குடிக்கு மகேந்திரகிரிமலை அரணாக அமைந்துள்ளது. இவ்வூர் பற்றி வைணவ அடியார்களான நான்கு ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளதால் வைணவர்களிடையே பெரும் பெயர் பெற்றுத் திகழ்கிறது.

மூலவர் சந்நிதியிலிருந்து கொடிமரம் சற்று விலகி அமைந்துள்ளதற்கு நம்பாடுவான் வரலாறு காரணமாக அமைகின்றது. நம்பாடுவான் என்னும் அரிசன பக்தன் இறைவன் மீது கொண்டிருந்த பக்தியின் காரணமாக, அரக்கனிடமிருந்து காப்பாற்றப்பட்டான். மேலும் எம்பெருமானின் நேரடி அருட் பார்வை கிடைத்து முக்தி பெற்றான். இதன் மூலம் முழுமையாக எம்பெருமானை

நம்பியவர்களுக்கு அவர் நல்வாழ்வு அளிப்பார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

மணிமண்டபத்தில் மிகப் பெரிய அளவிலான மணி தொங்கவிடப்பட்டுள்ளது. இம்மணியைச் சேர அரசரான ஆதித்தவர்மன் அளித்துள்ளான். இவன் அளித்துள்ள மணியின் எடை 150 கிலோ எடையுள்ள வெண்கலத்தினால் ஆனது. இந்த மணி கோயிலை அழகு செய்கிறது.

திருக்குறுங்குடியிலுள்ள நம்பிகோயில் ஏறத்தாழ 18 ஏக்கர் பரப்பளவு கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. இக்கோயிலின் கிழக்குக் கோபுரமும், திருவரங்கத்திலுள்ள தெற்குக் கோபுரமும் ஒன்று போல அமைந்துள்ளன. திருப்பாற்கடல் நம்பி போலவே இங்கே நம்பியாற்றின் மேல்கரையிலே திருப்பாற்கடல் நம்பி எழுந்தருளியுள்ளார். இவ்வூரிலுள்ள வைணவர்கள் இன்றும் தொடர்ந்து நெற்றியில் திருமண்காப்பு இட்டு வருகின்றனர். இது வைணவர்களிடையே உள்ள ஆழ்ந்த இறைப்பற்றினை ஒற்றுமையை எடுத்துக் காட்டுகின்றது.

நம்பி கோயில் புராணம், ரிஷிபிராப்தம், தெய்வீகம், மானுஷம் என்ற நான்கு நிலையிலும் புகழ்பெற்று விளங்குகிறது. தேவர்களும், ரிஷிகளும் இத்தலத்தில் பெருமாளை வணங்கியதாகக் கூறுகிறார்கள். இராமானுசர் என்ற குருவிடம் நம்பி (இறைவன்) சீடராக இருந்து பாடம் கேட்டுள்ளார். இந்தக் காரணங்களினால் நம்பியின் பழம் பெருமையும் எளிமையும் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.

நம்பியை வழிபடச் சிறப்பான நாள் சனிக்கிழமை ஆகும். திருமலைநம்பியை வெளியூரிலிருந்து வருபவர்கள் பிரதி மாதம் இறுதிச் சனிக்கிழமையன்று வந்து வழிபாடு செய்கின்றனர்.

திருவிழா நாட்களில் இறைவன் வீதி வழியாகச் செல்கிறார். இவ்வேளையில் எல்லா இனத்தவரும் இறைவனை வழிபட வாய்ப்பேற்படுகிறது. இந்நாட்களிலேயே இறைவன் பக்தர்களுக்குச் சிறப்பாக அருள் பாலிக்கிறார் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இங்கு திருவிழாக்கள் அதிகளவில் நடத்துகின்றனர்.

இறைவனுக்கு நடைபெறும் வழிபாட்டின் போது ஆழ்வார்களது பாடல்களே இடம் பெறுகின்றன. ஆழ்வார்களது வேண்டுகோளுக்கு இணங்க பரமபதத்திலிருந்து எம்பெருமான் இங்கு ஓடோடி வந்து குடி கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இராமானுசர் ஏற்படுத்திய ஜீயர் சுவாமிகள் மடம் இன்றும் பெரியளவில் கோயிலில் திகழ்கின்றது. ஆழ்வார் திருநகரி என்று ஓர் ஊருக்கே பெயரிட்டுள்ளனர். இதன் மூலம் ஆழ்வார்களின் பெருமை புலனாகின்றது.

மாதம் ஒரு திருவிழாவாக நடத்தினாலும் பங்குனி மாதம் நடத்தப்பெறும் பிரமோற்சவத்தின் போதே வெளியூரிலிருந்து நிறைய மக்கள் வந்து கூடுகின்றனர். பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று பெருமாளுக்கும் பெருமாட்டிக்கும் திருமணம் நடந்ததாகக் கூறுகிறார்கள். எனவே இத்திருவிழாவை இறைவனுக்கு நடத்தும் சிறப்பான திருவிழா என்று எண்ணிப் பலரும் விழாவில் கலந்து கொள்கின்றனர்

நம்பிகோயிலுக்கு உள்ள சொத்துக்களைக் கொண்டு நாள்தோறும் திருவிழா நடத்தலாம். இப்பொழுது கோயில் நிலங்களின் மூலம் அதிக வருவாய் வருவதில்லை. குத்தகையாளர்கள் தங்களுடைய குத்தகையைக் குறித்தபடி கொடுப்பதில்லை. தற்பொழுது கோயிலுக்கென்று வருகின்ற வருமானத்தையெல்லாம் அரசு ஏற்றுக் கொண்டு ஆண்டிற்கு ரூ. 5196. 97பைசா என்ற கணக்கில் கோயிலுக்குத் தருகின்றது. இக்காரணங்களினால் இக்கோயிலில் தொடக்கத்தில் நடத்திய அளவிற்குப் பெரிய வழிபாடுகள் நடத்த முடியவில்லை. ஒவ்வொரு ஆண்டும் வழிபாடுகள் சிறிய அளவில் நடத்தும் வகையில் குறைந்து கொண்டே வருகின்றன. இக்குறைபாட்டிற்கு முழுமையாகப் பொருளாதாரக் குறைவே காரணமாக அமைகின்றது.

இப்பகுதியில் வாழுகின்ற மக்கள் கோயிலுக்குத் தங்களுடைய முன்னோர் செய்து வந்த பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். கோயில் பணிகளை நிறுத்திவிட்டால் வாழ்க்கையில் நமக்கு ஏதேனும் தீங்கு நிகழ்ந்து விடும் என்று எண்ணுகிறார்கள். இறைப் பணிகளெல்லாம் நம்பிக்கையின் அடிப்படையிலேயே நடந்து வருகின்றன.

இக்கோயில் ஒற்றுமையை வளர்க்கும் தலமாக விளங்குகிறது. இவ்வூர் மக்களும், இவ்வூரைச் சுற்றியுள்ள

மக்களும் தாங்கள் கொண்டுள்ள பணிகளின் அடிப்படையிலும், பொறுப்புக்களில் அடிப்படையிலும் ஒருவரை ஒருவர் அணுக வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதனால் இங்குள்ள மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள்.

எதிர்கால ஆய்வியல்

வைணவக் கோயில்களுக்கிடையே திருக்குறுங்குடி நம்பி கோயில் பெறும் சிறப்பிடம் குறித்து ஆய்வு நிகழ்த்தலாம்

பிற வைணவ கோயில்களுக்கும் திருக்குறுங்குடி நம்பி கோயிலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைக் கூறுகளை ஆராயலாம்.

துணைநூற்பட்டியல்

1. அரங்க ராமாநுஜ தாரைவர்கள். பி. ஆர்., 108. திருப்பதிப்ரபாவம், பி. இரத்தின நாயகர் ஸன்ஸ், திருமகள் விலாச அச்சகம், அச்சயேந்திர சாலை, சென்னை - 1959.

2. ஆறுமுக நாவலர், கே., இந்து மத இணைப்பு விளக்கம், தொண்டர் காரியாலயம், நாகர்கோவில் - 1975.

3. இராஜமாணிக்கம்,தி., நெல்லை குடைவரைக் கோயில்கள், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்., 79, பிரகாசம் சாலை (பிராட்வே) சென்னை - 108. இரண்டாம் பதிப்பு பிப்ரவரி -1984

4. கீரன், புலவர் இலக்கியத்தில் இறையுணர்வு, சங்கப்பலகை 39, சாதுல்லா சாலை, தியாகராய நகர், சென்னை - 17 முதற் பதிப்பு ஆகஸ்ட் 1982

5. கோவிந்தராஜ முதலியார் கா.ர., ஆழ்வார் வரலாறு திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1/140 பிரகாசம் சாலை, சென்னை. 1 இரண்டாம் பதிப்பு ஜூன் 1975

6. சீனிவாசன் வைணவத் தத்துவ ஞான அடிப்படைகள்,
பாரி நிலையம்,
184, பிராட்வே.
சென்னை - 108.
முதற் பதிப்பு -1984.

7. தட்சிணா மூர்த்தி, அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும்,
வெற்றிச் செல்வி வெளியீட்டகம்,
தஞ்சாவூர் -1973.

8. திருக்கச்சிநம்பி தாஸரவர்கள், கா,வெ., நாலாயிர பிரபந்தம்
பி. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
திருமகள் விலாச அச்சகம்,
அச்சியந்திர சாலை,
சென்னை - 1959.

9. துரை அரங்கசாமி, மொ. அ., அன்பு நெறியே தமிழர் நெறி
மீனாட்சி புத்தக நிலையம்,
60. மேலக்கோபுரத் தெரு,
மதுரை -1
ஐந்தாம் பதிப்பு ஜூலை 1972

10. தேவநேயன், தமிழர் மதம்,
நேசமணி பதிப்பகம்,
1972.

11. நடராஜன், எஸ் தமிழர் பண்டிகைகளும் பண்பாடும்,
பிரதிபா பிரசுரம்,
25, ஆடம் தெரு,
மயிலாப்பூர்.
சென்னை - 4.
மூன்றாம் பதிப்பு ஜனவரி 1976.

12. ஸ்ரீநிவாஸய்யங்கார் என்., ஸ்ரீவைஷ்ணவ வாமனமான திருக்குறுங்குடி மஹாத்மியம் திரு ஜீயர் மடம் வெளியீடு, திருக்குறுங்குடி 1985

13. பரமசிவானந்தம், அ. மு., சமயமும் சமூகமும், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை - 30 முதற் பதிப்பு ஜூன் 1958

மலர் :

திருக்குறுங்குடி திருமலை நம்பி கோவில் பாத யாத்திரை மலர் -1984 ஸ்ரீ கண்ணன் சேவா சங்கம், திருநெல்வேலி - 1.

ஆய்வுக் கோவை

பதினான்காவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை தொகுதி 3. இந்தியப் பல்கலைக்கழக தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர் 1982

ஆய்வேடு :

1. தமிழ்ச் செல்வி, ச., கல்யாண நரசிங்கப் பெருமாள் கோயில் வரலாறும் வழிபாடுகளும் (இராமகிரி) மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை -1984

2. மாணிக்கவாசகம், சு., திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் திருவிழாக்கள் - ஓர் ஆய்வு, தியாகராசர் கல்லூரி, மதுரை - 1983.

பின்னிணைப்பு 1


தகவலாளர் பட்டியல்

பெயர்	வயது	ஊர்
1. அழகர் இராமாநுசம்	60	கோதை சேரி
2. ஆழுவந்தார் இராமாநுசம்	77	கோதை சேரி
3. இராசகோபால்	40	திருக்குறுங்குடி
4. இராசம்மாள்	52	குட்டுவன்குளம்
5. கடற்கரையாண்டி	43	ஏர்வாடி
6. கணேசன்	35	பாலசுப்பிரமணியபுரம்
7. கந்தையா	25	களக்காடு
8. கோபால்	26	சிலைமான்
9. கோபால் இராமாநுசம்	42	தேவநல்லூர்
10. சமுத்திரபாண்டி	32	அம்பலம்
11. சிவனான்	37	சிறுவளஞ்சி
12. சுந்தர ராமானுசம்	60	கல்லிடைக்குறிச்சி
13. சுந்தர ராமானுசம்	55	அம்பாசமுத்திரம்
14. சுவாமி நாதன்	38	குட்டுவன்குளம்.
15. சுலோசனாதேவி	20	திருக்குறுங்குடி.

16.	செல்வக்குமார்	18	திருக்குறுங்குடி.
17.	தங்கராஜ்	20	திருக்குறுங்குடி.
18.	துரைசாமி	55	குட்டுவன்குளம்.
19.	நடராஜன்	48	திருக்குறுங்குடி.
20.	நம்பி	45	திருக்குறுங்குடி.
21.	நம்பி அம்மாள்	42	திருக்குறுங்குடி.
22.	நல்ல தம்பி	51	களக்காடு.
23.	நாராயணன்	55	திருக்குறுங்குடி.
24.	பால்பாண்டி	36	சிறுவளஞ்சி.
25.	பெரியசாமி	56	ஏர்வாடி.
26.	மணி	62	திருக்குறுங்குடி

பின்னிணைப்பு 2

கோயிலின் வரைபடம்



கோயிலின் வரைப்பட விளக்கம்

1. கீழ வாயில்
2. கோபுரம்
3. கொடி மரம்
4. பலிபீடம்
5. கருடன் அறை
6. வீற்றிருந்த நம்பி
7. பள்ளி கொண்ட நம்பி
8. கால பைரவர் சந்நிதி
9. சிவன் கோவில்
10. ஆழ்வார் சந்நிதி
11. மூலவர் சந்நிதி
12. திருமடப்பள்ளி
13. கைசிக மண்டபம்
14. கரண்டமாடுப் பொய்கை
15. கிருஷ்ணன் கோயில்
16. மணவாள மாமுனிகள் சந்நிதி
17. திரு ஜீயர் மடம்
18. பரமபத வாயில்
19. தெற்கு வாயில்
20. வடக்கு வாயில்

பின்னிணைப்பு 3

திருக்குறுங்குடி பற்றிய ஆழ்வார்களின் மங்களாசாசனப் பாசுரங்கள்

உன்னையு மொக்கலையிற் கொண்டுதமில் மருவி
உன்னொடு தங்கள் கருத்தாயின செய்துவரும்
கன்னியரும் மகிழக் கண்டவர் கண்குளிரக்
கற்றவர் தெற்றிவரப் பெற்றவெனக் கருளி
மன்னுகுறுங்குடியாய் வெள்ளறையாய் மதிள்சூழ்
சோலை மலைக்கரசே கண்ணபுரத் தமுதே
என்ன வலங்களை வாயாடுக செங்கீரை
ஏழுலகு முடையா யாடுக வாடுகவே.

- பெரியாழ்வார் திருமொழி.

கரண்டமாடு பொய்கையுள் கரும்பனைப் பெரும்பழம்
புரண்டுவீழ வாளைபாய் குறுங்குடி நெடுந்தகாய்
திரண்டதோ ளிரணியன் சினங்கொளாக மொன்றையும்
இரண்டுகூறு செய்துகந்த சிங்கமென்ப துன்னையே.

- திருமழிசைப்பிரான் - திருச்சந்த விருத்தம்.

ஏவினார் கலியார் நலிகவென் றென்மேல்
எங்ஙனே வாழுமாறு ? ஐவர்
கோவினார் செய்யுங்கொடுமையை மடித்தேன்
குறுங்குடி நெடுங்கடல் வண்ணா !
பாவினா ரின்சொல் பன்மலர் கொண்டு
உன்பதமே பரவிநான் பணிந்துஎன்
நாவினால் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்.
- திருமங்கையாழ்வார் - பெரிய திருமொழி

பேரானைக் குறுங்குடியெம் பெருமானை திருத்தண்கா
லூரானைக் கரம்பனூ ருத்தமனை முத்திலங்கு
காரார்திண் கடலேழும் மலையேழிவ் வுலகேழுண்டும்
ஆராதென் றிருந்தானைக் கண்டதுதென் னரங்கத்தே.

மானேய் நோக்குநல்லார் மதிபோல் முகத்துலவும்
ஊனேய் கண்வாளிக்கு உடைந்தோட்டந்துன் னடைந்தேன்
கோனே குறுங்குடியுள் குழகா திருநறையூர்த்
தேனே வருபுனல் சூழ் திருவிண் ணகரானே.

தவளவிளம் பிறைதுள்ளு முந்நீர்த் தண்மலர் தென்றலோடன்றி லொன்றித்
துவளஎன் நெஞ்சகஞ் சோரவீரும் சூழ்பனிநாள் துயிலா திருப்பேன்
இவளுமோர் பெண்கொடி யென்றிரங்கார் என்ன லமைந்துமுன்
கொண்டுபோன
குவளைமலர் நிறவண்ணர் மன்னு குறுங்குடிக்கே என்னையுய்த் திடுமின்

அக்கும் புலியின் அதளுமுடையா ரவரொருவர்
பக்கம்நிற்க நின்ற பண்பரூர் போலும்
தக்க மரத்தின் தாழ்சினையேறி தாய்வாயில்
கொக்கின்பிள்ளை வெள்ளிற வுண்ணும் குறுங்குடியே.
- பெரிய திருமொழி - திருமங்கையாழ்வார்.

முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை
மூவாமூவுலகுங் கடந்தப்பால் முதலாய்நின்ற
அளப்பரிய வாரமுதை யரங்கமேய வந்தணனை
அந்தணர்தம் சிந்தை யானை
விளக்கொளியை மரகதத்தைத் திருத்தண்காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு
வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருகவென்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே.
- திருநெடுந்தாண்டகம் - திருமங்கையாழ்வார்.

பொன்னி மணிகொழிக்கும் பூங்குடந்தைப் போர்விடையைத்
தென்னன் குறுங்குடியுட் செம்பவளக் குன்றினை.
- பெரிய திருமடல் - திருமங்கையாழ்வார்.

நம்பியைத் தென்குறுங்குடி நின்றஅச்
செம்பொனே திகழும் திருமூர்த்தியை
உம்பர்வானவர் ஆதியஞ் சோதியை
எம்பிரானை யென்சொல்லி மறப்பனோ.

உளனாகவே யெண்ணித் தன்னை யொன்றாகத் தன்செல்வத்தை
வளனா மதிக்கும் இம்மானிடத்தைக் கவிபாடியென்
குளனா கழனிசூழ் கண்ணன் குறுங்குடி மெய்ம்மையே
உளனொ வெந்தையை எந்தை பெம்மானை யொழியவே.

எங்ஙனேயோ வன்னைமீர்காள் என்னை முனிவதுநீர்
நங்கள்கோலத் திருக்குறுங்குடி நம்பியைநான் கண்டபின்
சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும்
செங்கனிவா யொன்றினோடும் செல்கின்றதென் னெஞ்சமே.
- நம்மாழ்வார் - திருவாய்மொழி.



டாக்டர். பே. நடராசன்

நூலாசிரியர் டாக்டர். பே. நடராசன் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி வட்டம், அம்பலம் என்னும் சிற்றூரைச் சேர்ந்த அமரர் திரு. பேச்சிமுத்து அவர்களின் புதல்வர் ஆவார். இளமையிலேயே மிகுந்த தமிழ் ஆர்வம் கொண்டு மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பயின்று தமிழில் இளங்கலைப் பட்டம் பெற்றவர். பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தைப் பாடமாக எடுத்து முதுகலைப் பட்டம் பெற்றவர். மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் பல ஆண்டுகள் பணியாற்றி இப்பொழுது திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார். “திருக்குறுங்குடி நம்பி கோவிலின் வழிபாடும் திருவிழாக்களும்” எனும் பொருளில் ஆய்வு செய்து (1986இல்) எம்ஃபில் ஆய்வுப் பட்டம் பெற்றுள்ளார். “ அனுராதா ரமணன் நாவல்களில் சமுதாய மதிப்புகள் ” எனும் பொருளில் இவர் நிகழ்த்திய ஆய்வுக்காக (1992 இல்) பி.எச்.டி., பட்டம் பெற்றுள்ளார்.

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கம் ஞாலத் தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றக் கருத்தரங்கம் எனப் பல்வேறு கருத்தரங்குகளில் கலந்து கொண்டு இதுவரை 13 ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ளார். நல்ல சிந்தனை ஆற்றலும், தமிழாய்வில் மிக்க ஈடுபாடுமுடைய டாக்டர். பே. நடராசன் இலக்கியச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தித் தமிழ்ப் பணியாற்றி வருகிறார்.